www.padippakam.com

தேசிய இனப் பிரச்சினை சம்பந்தமாக ....

# போல்ஷெவிக் கட்சியின் இரட்டை நிலைப்பாடு

லெனின்
புகாரின்

தமிழில்.....
வ. அழகலிங்கம்

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

## தேசிய இனப் பிரச்சினை சம்பந்தமாக ....

# போல்ஷெவிக் கட்சியின் இரட்டை நிலைப்பாடு

லெனின்

புகாரின்

தமிழில்.... வ. அழகலிங்கம்

மனிதம் வெளியீடு

படிப்பகம்

www.padippakam.com

| | | |
|---|---|---|
| முதற் பதிப்பு | : | டிசம்பர் 1994. |
| ஆசிரியர் | : | லெனின், புகாரின். |
| தமிழாக்கம் | : | வ. அழகலிங்கம். |
| அன்பளிப்பு | : | 5 டாலர். |
| வெளியீடு | : | **மனிதம் வெளியீடு** |
| விற்பனை உரிமை | : | **விடியல் பதிப்பகம்**<br>3, மாரியம்மன் கோவில் வீதி,<br>உப்பிலிப்பாளையம்,<br>கோவை - 641 015. |

| | | |
|---|---|---|
| அச்சு | : | மனோ அச்சகம்,<br>சென்னை - 5. |

படிப்பகம்

# உள்ளே ....

## தேசிய இனப் பிரச்சினை சம்பந்தமாக .....

### லெனினின் நிலைப்பாடு

1. யுத்தம் தொடர்பாக மாக்சியவாதிகளின் நிலைப்பாடும் தந்தை நாட்டைப் பாதுகாப்பதும்
2. புதிய சகாப்தத்தைப் பற்றிய எமது விளக்கம்
3. பொருளாதார ஆய்வு என்றால் என்ன ?
4. நோர்வே உதாரணம்
5. ஒருமை நிலைப்பாடும் இருமை நிலைப்பாடும்
6. கீவ்ஸ்கி கிளப்பியதும் திரித்ததுமான மற்றைய அரசியற் பிரச்சினைகள்
7. முடிவுரை, அலெக்ஸின்ஸ்கியின் முறை

1. அடக்கப்பட்ட தேசியத்தின் மேலான ஒடுக்குமுறை
2. பாட்டாளி வர்க்கத்தின் ஐக்கியம்
3. தேசியப் பகைமைக்கான காரணங்கள்
4. தேசங்களின் சமத்துவமும் சுயநிர்ணய உரிமையும் சமஸ்டி முறையும்
5. யார் தேசியத்தின் விருப்பத்தை வெளிப்படுத்துவது?
6. யூத விரோதமும் பாட்டாளி வர்க்கமும்

### புகாரினின் நிலைப்பாடு

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# என்னுரை

அண்மைய அதிர்ச்சிகளின் கசப்பான அனுபவங்களை தூரத்து எதிர்பார்ப்புக்கள் எப்பொழுதும் இனிக்க வைக்கின்றன. பாற்கடலைக் கடைந்து அமுதம் எடுத்ததுபோல் மனித வாழ்க்கையின் நடைமுறை அனுபவங்களைக் கடைந்து எடுத்த விஞ்ஞானம்தான் மார்க்சிய - லெனினிசம். அது தமிழீழப் போராட்டத் தணலுக்குள்ளே மீண்டும் புடம்போடப்பட்டது.

முதலாம் உலக யுத்தத்திற்கும், ஏன் ரசியப் புரட்சிக்கும் முன்னதாகவே லெனினும் போல்ஷெவிக் கட்சியும் மற்றைய உலக சோசலிசக் கட்சிகளிலும் போக்குகளிலுமிருந்து தம்மை நறுக்காக வித்தியாசப்படுத்திக் காட்டிய விடயம்தான் தேசிய விடுதலை, மற்றும் இனங்கள் சம்பந்தமான அவர்களது கயமையற்றதும் ஊசலாட்டமற்றதுமான நிலைப்பாடுகள். அந்தக் கோட்பாட்டை ஒக்ரோபர் புரட்சி முடிந்த அடுத்த மணித்தியாலத்திலேயே போல்ஷெவிக்குகள் நடைமுறையால் எழுதினார்கள்.

இந்தக் கோட்பாட்டின் அனுபவத்தையும் தாற்பரியத்தையும் முன்விளைவு, பின்விளைவு அனுகூல, பிரதிகூலங்களை இலங்கைக் கம்யூனிஸ்டுகள் சேகரித்து விளங்கிக் கொண்டு தங்களது இரத்தத்திலும் சதையிலும் ஓடவைப்பதற்கு அதிக காலம் எடுத்தது. கடைசியாக அவர்கள் அதைக் கற்றுக் கொண்டு ஆமை வேகம் நத்தை வேகத்தோடும் மிகுந்த துன்ப துயர மனக்கிலேசங்களோடுதான், இந்தப் புதிய தத்துவத்தை -அதாவது சுயநிர்ணய உரிமைத் தத்துவத்தை- தங்களது வேலைத் திட்டங்களோடும் முன்னோக்குகளோடும் சேர்த்துக் கொண்டார்கள்.

1964 சமசமாஜக் கட்சி மாக்சியத்தை ஆளக் குழிவெட்டி நீளப் புதைக்கும்பொழுது, தமிழ் மக்களது சமத்துவ உரிமையையும் சேர்த்துப் புதைக்கும் மறுகணத்திலேயே, சீறிப் புறப்பட்ட பிரக்ஞைபூர்வமான இளைய மாக்சியத் தலைமுறை மாக்சிய லெனினியத்தின் மூலைமுடுக்கெல்லாம் சல்லடைபோட்டுத் தேடினார்கள் - ஒடுக்கப்பட்ட தேசிய இனங்களைக் காப்பாற்றுகிற சக்தி மாக்சியத்திற்கு உண்டோவென்று. அன்று வியட்நாம் விடுதலைப் போராட்டம் உக்கிரமாக நடந்துகொண்டிருந்தது. வியட்நாம் விடுதலைக்கு ஒத்தாசையாக நடந்த ஆர்ப்பாட்ட ஊர்வலங்களும் அறைகூவல் கூட்டங்களும் நிதி சேகரிப்புகளும் இலங்கையில் நிகழ்ந்த அளவுக்கு வேறெந்த நாட்டிலும் நிகழவில்லை. தமிழீழக் கோரிக்கை பிறப்பதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்னரே நடந்த அந்த ஆர்ப்பாட்ட ஊர்வலங்களை அடுத்த கலந்துரையாடல்களிலே எத்தனையோ தடவை கேட்கப்பட்ட கேள்வியொன்றுண்டு - "தூரத்திலே நடக்கும் வியட்நாம் போராட்டத்திற்காக கொடிபிடிக்கும் நீங்கள், எங்கள் வீட்டு முற்றத்திலே எரியும் தமிழின ஒடுக்குமுறை சம்பந்தமாக என்ன நிலைப்பாடு எடுக்கிறீர்கள்?" என்பதுதான். ஏறத்தாழ அந்நாளில் கிரிசனையாக நடைபெற்ற ஒவ்வொரு அரசியற் கலந்துரையாடல்களிலும் இந்தப் பிரச்சினை கிளப்பப்பட்டு, சிலவேளைகளில் சளாப்பிச்



படிப்பகம்

www.padippakam.com

சமாளித்து பூசிமெழுகித் தட்டிக் கழித்தபோதும் அடிக்கடி சூடேறிய விவாதங்களோடும், ஏன் கைகலப்புகளோடும் முடிவடைந்ததை சிங்கள மாக்சியவாதிகளோடு சகோதரத்துவம்பூண்ட தமிழ் மாக்சியவாதிகள் இன்றும் ஒத்துக்கொள்வர்.

தமிழிலோ சிங்களத்திலோ லெனினது கரிசனையான நூல்கள் மொழிபெயர்க்கப் படாததாலும் மாக்சிச லெனினிய நூல்களைச் சரளமாக ஆங்கிலத்தில் வாசிக்கக்கூடிய ஆளுமையற்ற அந்த நேரத்தில் சர்வதேச மாக்சிய இலக்கியங்கள் கிடைப்பதும் அரிதாகவே இருந்தது. ஈற்றில் அறுபதின் பிற்பகுதியில் லெனினது மொத்தப் படைப்புக்கள் முழுவதும் ஆங்கில மொழியில் வந்து சேர்ந்தது. பிரக்ஞைபூர்வமானதும் இடையறாததுமான பகீரதப்பிரயத்தனத்தின் மத்தியில் தேசிய சுயநிர்ணய உரிமை சம்பந்தமான சின்னத் தெளிவு ஏற்படும்பொழுது, எழுபத்தியொன்று ஏப்ரலில் சேக்குவாரா கிளர்ச்சி வெடித்தது. சிறைப்பட்டோர் போக அதிகமான மாக்சியவாதிகள் மாக்சிச லெனினிய நூல்களை பாதுகாப்புக் கருதி எரித்தார்கள் அல்லது நிலத்துள் புதைத்தார்கள். மாக்சியவாதிகளோடு நட்புக் கொண்டவர்கள் செத்த மாட்டில் உண்ணி கழன்றதுபோல பவ்வியமாக விலகிக் கொண்டார்கள். சாதாரண சனங்கள் உறவுகளைத் துண்டித்துக் கொண்டார்கள். பெற்றோர் மாத்திரம் பெற்ற குற்றத்திற்காக ஏனோதானோவென்று வீட்டிற் புக அனுமதிக்கும் அந்தத் தனிமைப்படுத்தலிலிருந்து மீள மேலும் இரண்டொரு வருடங்கள் சென்றன. வெற்றிகொண்ட தத்துவார்த்தச் செழுமையையும் காலாகாலத்தே மக்களிடம் தூதனுப்ப முடியாமற் போயிற்று.

இந்த இடைப்பட்ட காலத்திலே சர்வதேச பொருளாதார அரசியற் தட்ப வெப்பநிலைகளுக்கேற்பவும், சர்வவேச சண்டாளர்களின் சதிகளின் மத்தியில் சிங்கள தமிழ் இனத்திலுள்ள குட்டிமுதலாளித்துவ தத்தாரிகளும் இனவாதிகளும் தற்காலிக வெகுஜன ஆளுமையைப் பெற்றுவிட்டார்கள். போராட்டங்கள் வெடித்தன. யார் சர்வதேசியவாதிகள், யார் இனவாதம் கலந்த மாக்சியவாதிகள் அல்லது லெனினது பாஷையில் சொல்வதென்றால் யார் சமூக சோவனிஸ்டுகள் என்று அமிலப் பரிசோதனை செய்து பார்ப்பதற்கு அருமையான வாய்ப்புக் கிட்டியது. தற்காலிக ஊசலாட்ட ஏற்ற இறக்கங்களினுள்ளே மாக்சியவாதிகள் மூழ்கி முக்குளித்து மழையில் நனைந்து வெயிலில் உலர்ந்து வாடிவதங்கி வெம்பி வெதும்பித் தேறினார்கள். அமிழ்ந்திச் சேற்றில் மாண்டவர்கள் இருந்தபோதும் அற்பசொற்பமானவர்களாவது மிஞ்சி மாக்சியத்தின் சிரஞ்சீவித் தன்மையை மீண்டும் நிறுவிக் காட்டியதோடு, இலங்கையில் சோசலிசப் புரட்சி வருவது வெகுதூரத்தில் இல்லை என்ற சமிக்ஞையையும் காட்டி நின்றார்கள்.

தேசியக் கிளர்ச்சி எழுச்சிகளினுள்ளும் இன சங்கார காலங்களிலும் யுத்தங்களின்போதும் மாக்சியவாதிகளை உரைத்துப் பார்க்கும் நிலைப்பாடொன்றுண்டு.

லெனின் (டிசம்பர் 25, 1916) எழுதிய,

THESES FOR AN APPEAL TO THE INTERNATIONAL SOCIALIST COMMITTEE AND ALL SOCIALIST PARTIES - Rough Draft.

- Collected Works -Volume 23 Page 209

என்ற வியாசத்தில் குறிப்பிடுகிறார்.



படிப்பகம்

www.padippakam.com

*For the Socialist of another country cannot expose the government and bourgeoisie of a country at war with 'his own' nation, and not only because he does not know that country's language, history specific features, etc., but also because such exposure is part of imperialist intrigue, and not an internationalist duty.*

*He is not an internationalist who vows and swears by internationalism. Only he is an internationalist who in a really internatinalist way combats his own bourgeoisie, his own social-chauvinists, his own Kautskyites.*

*In every country the socialist must above all emphasise in all his propoganda the need to distrust not only every political phrase of his own government, but also every political phrase of his own social-chauvinists, who in reality serve that government.*

*"ஒரு நாட்டு சோசலிஸ்டுகள் தன்னுடைய நாட்டோடு யுத்தம் செய்யும் முதலாளித்துவ அரசாங்கங்களை அம்பலப்படுத்தக் கூடாது. அவர்களுக்கு அந்த நாட்டு மொழியோ, அந்த நாட்டைப் பற்றிய வரலாறோ, அதைப் பற்றிய தன்மைகளோ தெரியாமற்போகும் என்பதாலல்ல. அப்படியான அம்பலப்படுத்தல்கள் கூட ஏகாதிபத்தியத்தின் சதிகளில் ஒரு பகுதியாகும். அது அவர்களது சர்வதேசியக் கடமையல்ல.*

*சர்வதேசியம் பற்றிக் கொக்கரிப்பதினாலோ, சத்தியப் பிரகடனம் செய்வதனாலோ சர்வதேசியவாதிகள் ஆகிவிட முடியாது. அவர்கள் தன்னுடைய சொந்த நாட்டு முதலாளித்துவத்தை, தன்னுடைய சொந்த நாட்டு சமூக சோவனிஸ்டை, கவுட்ஸ்கிவாதிகளை சர்வதேசியத்துவ முறையில் அம்பலப்படுத்தப் போராடினால் மாத்திரம்தான் அவர்கள் சர்வதேசியவாதிகளாகிவிட முடியும்.*

*ஒவ்வொரு நாட்டு சோசலிஸ்டுகளும் தங்களின் பிரச்சாரங்களிலே தன்னுடைய சொந்த நாட்டு முதலாளிகளை நம்பவேண்டாம் என்று சொல்வதோடு தமது சொந்த நாட்டு சமூக சோவனிஸ்டுகளின் வார்த்தை மொங்கான்களையும் நம்பவேண்டாம் என்று பிரச்சாரம் செய்ய வேண்டும். உண்மையில் இந்த சமூக சோவனிஸ்டுகள் தங்களது முதலாளித்துவ அரசாங்கங்களுக்குச் சேவகம் செய்பவர்கள் ஆவர்."*

இந்த அளவுகோலைக் கொண்டே மாக்சியவாதிகளை அளக்க வேண்டும். ஒவ்வொரு மாக்சியக் கட்சிகளின் கடந்த காலப் பத்திரிகைகளைப் படித்துப் பார்த்தாற் தெரியும்– எந்தளவு இந்தக் கூற்றோடு இசைந்திருக்கிறார்கள் என்பதை. 91 இல் நடந்த ஈராக்குக்கு எதிரான யுத்தத்தின்போது ஐரோப்பிய மாக்சியக் கட்சிகளின் பத்திரிகையை வாசித்தால் விளங்கும்– அவர்கள் எந்த மட்டத்திற்கு தங்களின்



படிப்பகம்

முதலாளித்துவத்தை அம்பலப்படுத்தினார்கள் என்பதை.

87 இல் இந்திய விமானங்கள் உணவுப் பொட்டலங்களை தமிழீழத்தில் போட்டபோது சிங்கள மாக்சியப் பத்திரிகைகள் என்ன நிலைப்பாட்டை எடுத்தன என்பது வாசித்தவர்களுக்கு விளங்கும்– சிங்களப் பாட்டாளி வர்க்கம் தற்காலிக இனவாதப் பின்னடைவிலிருந்து மீள்வதற்கு கனகாலம் செல்லாதென்பதும் இலங்கையில் சோசலிசப் புரட்சி கட்டியங்கூறி நிற்பதும்!

இதை ருசுப்படுத்த லெனின் ஓர் உதாரணத்தைச் சுட்டிக் காட்டுகிறார். முதலாவது உலக யுத்தத்தின்போது மூன்று துண்டாக உடைந்த பிரெஞ்சு சோசலிசக் கட்சியின் ஒரு கன்னையான சிம்மவல்ட் மாநாட்டிற்கு சாதகமான கன்னை எழுதியதைச் சுட்டிக் காட்டினார்.

பிரான்சை ஜேர்மனி ஆக்கிரமித்த போதும் அது எழுதுகிறது....

> *France was involved in the war not because Germany declared war on her, but because she pursued an imperialist policy which, through treaties and loans, bound her to Russia. This third trend unambiguously proclaims that "Defence of the fatherland is not a socialist cause".*
>
> *-Volume 23, Page 122*

*"பிரான்சு யுத்தத்துள் புகுந்தது, ஜேர்மனி யுத்தப் பிரகடனம் செய்ததினாலல்ல. மாறாக ஏகாதிபத்தியக் கொள்கைகளைக் கடைப்பிடித்து ரசியாவோடு ஒப்பந்தங்கள் செய்ததினாலும், கடன் கொடுப்பனவு கொள்வனவு செய்ததினாலுமாகும். இந்த மூன்றாவது கன்னை தந்தை நாட்டைப் பாதுகாப்பது ஒரு சோசலிச நோக்கமல்ல"*

என்று இரட்டை நாக்கின்றிப் பிரகடனப்படுத்தியது.

இந்த மூல தர்மத்தின் பிரகாரம், முதலாம் உலக யுத்தத்தின்போது தனது சொந்த நாட்டு அரசாங்கங்களையும் சமூக சோவனிஸ்டுகளையும் அம்பலப்படுத்தாது, மற்ற நாட்டு அரசாங்கங்களை அம்பலப்படுத்தியவர்களோடு லெனின் உறவைத் துண்டித்துக் கொண்டார்.

தமிழ் மாக்சியவாதிகளுக்கு முன்னால் உள்ள கடமை சிங்கள இனவாதத்தை அம்பலப்படுத்துவதல்ல. அது சிங்கள மாக்சியவாதிகளின் கடமையாகும். தமிழீழத்திலுள்ள சிங்கள விரோதிகளைத் தோற்கடிப்பதும் வீரியத்தோடு சிங்களப் பாட்டாளி வர்க்கத்தோடு ஐக்கியப்படுவதை அறைகூவுவதுமாகும்.

*O **சிம்மவல்ட்** என்பது சுவிற்சர்லாந்தில் மூன்றாம் அகிலத்திற்கான முன்முயற்சி மாநாடு O*

இதைச் செய்யத் தவறிய சோசலிசவாதிகள் லெனினினது பாஷையில் சமூக சோவனிஸ்டுகள் – நுனிநாக்கில் சோசலிசம் அடிநாக்கில் இனவாதம். வரப்போகின்ற உலக ஏகாதிபத்திய நெருக்கடிக்குள்ளே ஒவ்வொரு சோசலிஸ்டுகளையும் இந்த அளவுகோலைக்கொண்டு மதிப்பிட வேண்டும். குறிப்பாக ஐரோப்பிய சமூக சோவனிஸ்டுகளை இனங்காண வேண்டும். இது விளங்காமையால் இரண்டாம் உலக யுத்தத்திற்குப் பிறகு காலனித்துவ நாட்டு மாக்சியக் கட்சிகளை ஐரோப்பிய சமூக சோவனிஸ்டுகள் மேய்ச்சுத் தண்ணிக்கு விட்டார்கள். அவர்களைத் தட்டிக் கேட்கக்கூடிய தகைமையும் உரிமையும் தமிழ் மாக்சியவாதிகள் பெறவேண்டுமானால், இன்று மூலதர்மத்தோடும் வீரியத்தோடும், தோட்டம் துரவு தொட்டில் திண்ணை சந்துபொந்துகளிலெல்லாம் சிங்களப் பாட்டாளி வர்க்கத்தோடு ஐக்கியப்படுவதையும், ஐக்கிய இலங்கைக்காகப் போராடுவதையும் அறைகூவ வேண்டும்.

மேலும் இன்று எங்கள் கண்களுக்கு முன்னால் யசீர் அரபாத்தையும், நெல்சன் மண்டேலாவையும் தேசியப் புருஷர்களாக பிரச்சாரக் கருவிகள் பூஜிக்கின்றன. மாக்சியவாதிகளுக்கு இத்தகைய சம்பவங்கள் புதியதும் புதுமையானதுமல்ல.

ஆளும் ஏகாதிபத்தியச் சண்டாளர்கள் காலத்திற்குக் காலம் தமது ஆளும் மூலோபாயங்களை மாற்றிக் கொள்கிறார்கள். அவர்களுக்குச் சிலுசிலுப்பை தேவையில்லை, பணியாரம்தான் தேவை. இரண்டாம் உலக யுத்தத்திற்குப் பிறகு பிரித்தானிய ஏகாதிபத்தியம் இந்திய உபகண்டத்தை வைஸ்றோயின் *(Viceroy)* கீழ் ஆட்சி செய்யமுடியாமற் போகவே, அது வெள்ளைத்தோல் ஆட்சியாளர்களுக்குப் பதிலாக கறுப்புத்தோல் ஆட்சியாளர்களை ஆட்சியில் அமர்த்தியது. தேசிய ஜனநாயகப் புரட்சியானது புரட்சிகரப் பயங்கரவாதத்தினால் பழைய ஆட்சியின் குப்பை கூளங்களைத் துடைத்தெறியவில்லை. பழைய பொருளாதார மேற்கட்டுமானம் தகரவில்லை. நிதி மூலதனத்தினதும், ஏகாதிபத்திய வங்கிகளினதும் ஆதிக்கமும் தனியுடைமையும் மேலும் கெட்டியாயிற்று. ஜனநாயகப் புரட்சியின் முக்கிய கடமையான தேசிய இனப் பிரச்சினைகள் தீர்ந்து, தேசிய இனங்களை விசுவாசத்தோடு ஐக்கியப்படுத்திய தேசியக் குடியரசுகள் உருவாகவில்லை. நிலப்பிரபுத்துவத்தின் மிச்சசொச்சங்களான வர்ணாச்சிரம முறைகள் தகர்ந்தெறியவில்லை. யுத்தத்திற்குப் பிந்திய ஒவ்வொரு சகாப்தமும் இந்த பிரச்சினைகள் இந்திய உப கண்டம் முழுவதும் மீண்டும் மீண்டும் கொழுந்து விட்டெரிவதைக் காணலாம். முதலாளித்துவப் புரட்சியின் கடமைகள் எதுவும் தீராத, ஆனால் சர்வஜன வாக்களிப்பினால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்ட, ஆனால் வெகுஜனங்களின் நலன்களைப் பிரதிநிதித்துவப் படுத்தாது நிதிமூலதனத்தின் நலத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சாணக்கியம் தான் தற்போதைய இந்திய உபகண்ட அரசாங்க சாணக்கியம். இந்த ஆளும் மூலோபாயத்தின் வேறொரு வடிவம்தான் அரபாத், மண்டேலா ஆட்சிகள். இதை மார்க்ஸ் ஏற்கனவே கண்டு கொண்டார்.

00 viceroy - when Britain rules India,
the British Queen was represented there by a Viceroy 00

www.padippakam.com

ஃபொயர்பாக்கில் மார்க்ஸ்,

"ஆளுகின்ற வர்க்கம் மற்றைய வர்க்கங்களின் பல தனி மனிதர்களுக்கும் கூட அனுகூலம் செய்கிறது. ஆனால் அவர்கள் தம்மைத் தாமே ஓர் ஆளும் வர்க்கமாக உயர்த்திக் கொள்ளும் நிலையில் இந்தத் தனிநபர்களை அமர்த்தும் அளவுக்கு மட்டுமே இவ்வாறு அனுகூலம் செய்கிறது. பிரெஞ்சு முதலாளித்துவ வர்க்கம் பிரபுக்குலத்தின் ஆட்சியதிகாரத்தை வீழ்த்தியபோது அது அதன் வாயிலாக பல பாட்டாளிகள் தம்மைத் தாமே பாட்டாளி வர்க்கத்திற்கு மேலாக உயர்த்திக் கொள்வதைச் சாத்தியமாக்கியது. ஆனால் இது அவர்கள் முதலாளித்துவ வகைப்பட்டோராக மாறியதன் அளவுக்கு மட்டுமே சாத்தியமாக்கியது."

இந்தக் கூற்றை அண்மைய உலக வரலாறு மீண்டும் மீண்டும் ருசுப்படுத்துகிறது. போலந்து சொலிடாறினோஸ் தொழிற்சங்கத் தலைவன் லேக் வலேசாவின் சுயரூபம் இன்னும் துலாம்பரமாக வெளிவராவிட்டாலும் எங்கள் வாழ்நாளில் கானாவை ஆட்சிசெய்த (KWAME NKRUMAH) நிக்குறூமாவின் சுயரூபம் தெரியும். ஆயுதக் கிளர்ச்சி செய்து கானாவின் விடுதலைக்காகப் பாடுபட்டவர் ஆட்சிக்கு வந்ததுதான் தாமதம் நிதிமூலதனத்தின் நன்மையைப் பாதுகாக்க கானாவின் வெகுஜனங்கள் அனைவரையும் உக்கிரமாக ஒடுக்கினார்.

இன்றைய ஏகாதிபத்தியங்களின் பொருளாதார அதலபாதாள நெருக்கடிக்குள்ளே ஐரோப்பிய வட அமெரிக்க முதலாளித்துவங்கள் கெட்டி பற்றிய தங்களது முதலாளித்தவ அமைப்பு முறைகளைக் காப்பாற்றத் திராணியற்ற நாட்களில் பலஸ்தீனத்திலும் தென்னாபிரிக்காவிலும் இலகுவில் முதலாளித்துவத்தைக் கட்டி எழுப்பலாம் என்பது பகற்கனவே. நிக்குறுமாவிலும் வெகுகூடிய சீக்கிரத்தில் இவர்கள் ஒடுக்குமுறையாளராக மாறுவதை வரலாறு ஏற்கனவே முன்னுரை எழுதிவிட்டது.

ஆபிரிக்கச் சனங்கள் இல்லலுறுவது கேடான ஆட்சியின் காரணத்தினாலல்ல. அநியாய ஆட்சி ஒரு பின்விளைவுதான்– இது படைப்பாளியல்ல. அதுவே படைக்கப்பெற்றதாகும். அது சொத்துடமையின் சமமற்ற நிலை பெற்றெடுத்த பிள்ளையாகும். சொத்துடமையின் சமமற்ற நிலை நமது தற்காலச் சமுதாய அமைப்புமுறையோடு பிரிக்கவொண்ணாதபடி பிணைக்கப்பட்டிருக்கிறது. புதிய அரசியற் சட்டங்களால் தேசங்கள் வளர்வதில்லை. அப்படிப்பட்ட சட்டங்களை உருவாக்குமுன் அவைகளைக் குறைந்தபட்சமாகவாவது அமுல்படுத்தக்கூடிய மட்டத்திற்கு தொழில், அரசியற் துறை நிலைமைகளையும், இவ் வழியே வாழ்க்கைமுறை முழுவதையும் அடிமுதல் நுனிவரை மாற்றியிருந்திருக்க வேண்டும்.

வரலாற்றிலே முந்தி அபிவிருத்தியடைந்த ஏகாதிபத்திய நாடுகளின் அதீத சுரண்டல் இருக்கும்போது, மூன்றாம் உலக மக்களின் உயிர்வாழ்வுக்கு வேண்டிய ஆகக் குறைந்த பொருளாதாரத் தேவைகள்கூட பூர்த்திசெய்யமுடியாத சூழ்நிலை தொடர்ந்து



படிப்பகம்

www.padippakam.com

நிலவும்போது, புதிய கறுப்புத்தோல் ஆட்சியாளர்களால் மக்களைத் திருப்தியடையச்செய்து ஆட்சிசெய்யமுடியாத நிலை சவர்க்காரக் குமிழி உடையும் வேகத்தில் வரவே, மக்களை மீண்டும் மீண்டும் ஆட்சிசெய்ய விடாமுயற்சி செய்யும்பொழுது தோன்றுவதுதான் எதேச்சாதிகார அரசாங்கம். இந்த உண்மையை தென்னாபிரிக்காவும் பாலஸ்தீனமும் மீண்டுமொருமுறை வெளிப்படுத்திக் காட்டும். எங்கு கற்பனைக் கோட்டைகள் தகருகிறதோ, அங்கு நிலவும் மெய்யான வாழ்க்கையில் நேர் உறுதியான விஞ்ஞானம் தொடங்குகிறது. இதுதான் மாக்சியம் சொல்லித்தந்த பாடம்.

சோவியத் யூனியன் அனேக தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டம் என்ற ஊடகத்தினூடுதான் சோசலிசப் புரட்சிக்கு வந்தது. இலங்கைத் தமிழ்த் தேசிய இனமும் அதே பாதையில் சோசலிசத்திற்கு வருவதற்கான சமிக்ஞையே, இன்றாவது லெனின் எழுதிய இந்தச் சிறந்த மாக்சிய இலக்கியம் தமிழிலே உங்கள் கைகளில் தவழுகிறது.

காலாகாலத்தே முதலாளித்துவ அபிவிருத்தி நடைபெறுவது தடுக்கப்பட்ட நாடுகளான மூன்றாம் உலக நாடுகளில் ஜனநாயகத்தையும் தேசிய விடுதலையையும் நிதர்சனமாக்குவது கிராமப்புற விவசாயிகளதோ அன்றேல் குட்டிமுதலாளித்துவத்தின் தலைமையினதோ அல்ல. மாறாக, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின்கீழ் மாத்திரந்தான். இங்குள்ள பாட்டாளி வர்க்கம் எவ்வளவு சொற்பமாக இருந்தபோதும்கூட இதுவே இந்த சகாப்தத்தின் ஒரேயொரு புரட்சிகர வர்க்கமாகும். உற்பத்தியையும் விநியோகத்தையும் அணிவகுக்கும் வல்லமையும் தகைமையுமுள்ள முக்கியமான வர்க்கங்களாகிய முதலாளி வர்க்கமும் தொழிலாளி வர்க்கமும் சமரசமின்றிப் போரரடிக் கொண்டிருக்கும்பொழுது, ஊசலாடுகின்ற குட்டிமுதலாளி வர்க்கத்தை தம்பால் வென்றெடுப்பதற்கான தற்காலிக இளக்கார நடவடிக்கையினால், குட்டிமுதலாளித்துவ வர்க்கம் சந்தர்ப்பவாதக் குத்துக்கரணங்களினால் தற்காலிக வெகுஜன ஆளுமையைப் பெற்றுவிடுவது மூன்றாம் உலக நாடுகளில் அடிக்கடி நிகழ்ந்துள்ளது. அந்த கையாலாகாத மலட்டு வர்க்கத்தின் ஆட்சியின் பலாபலன்களை நேற்றைய கம்பூச்சியாவும் இன்றைய தமிழீழத்தின் படிப்பனவுகளும் மீண்டும் ருசுப்படுத்திக் காட்டியுள்ளன. குட்டிமுதலாளித்துவ தத்தாரிகளைத் தோற்கடிப்பது 80களில் நடந்த சம்பவங்கள் அத்தனையையும் மறக்கவிடாமல் மீண்டும் மீண்டும் தமிழ் மக்களுக்கு நினைவுகூரச் செய்வதோடு அவைகளை பசுமரத்தாணிபோலப் பதியவைக்க வேண்டும். இந்த தசாப்தத்தில் சிங்கள தமிழ் பாட்டாளி வர்க்கத்திற்கு நம்புவதற்குத் தயக்கமாயிருந்த சில உண்மைகள் ஸ்தூலமாயின. ஒன்று 77, 83 இனக் கலவரங்களிலும் உள்நாட்டு யுத்தத்திலும் கொல்லப்பட்டவர்களின் உடலங்கள் மண்ணுக்குள்ளே அழுகிமுடியமுன்பு, புலி இயக்கம் யூ.என்.பி யோடு சமபந்தி போசனத்திற்குப் போய் தனது வர்க்கக் குணாம்சத்தை அம்மணமாக்கியது. மற்றைய குட்டி முதலாளித்துவத் தத்தாரிகள் புலி விரோதத்தைத் தமிழ் விரோதமாக்கி, அதுக்கும் மேலாக மாக்சிய விரோதமாக்கி இன்றைக்கும் கூட யூஎன்பி அரசாங்கத்தின் கூலிக்குக் கொல்லும் கொலைகாரர்களாகி விட்டனர்.



படிப்பகம்

மற்றையது சிங்களப் பாட்டாளி வர்க்கத்திற்கு, இந்தியா தமிழ் மக்களைக் காரணமாக வைத்துத் தேசத்தை விஸ்தரிக்கும் என்ற ஒரு பூதாகாரப் பயம் இருந்தது. சிங்களப் பாட்டாளி வர்க்கத்திற்கு இந்தியப் பூச்சாண்டி அம்பலமானதோடு இந்திய முதலாளித்துவமும் இலங்கை முதலாளித்துவமும் வேறல்லவென்பது சந்தேகத்திற்கு இடமின்றி விளங்கியது. இந்தப் படிப்பினைகள் அத்தனையும் மாக்சியத்திற்குக் கிடைத்த சம்பத்துகளாகும். குட்டி முதலாளித்துவத் தடிபிடிவாதிகள் கனவு காண்பது போல குட்டி முதலாளித்துவ அடிக்கொரு தாளம் தாளத்திற்கொரு மேளம் போட்டு வெகுஜன ஆதரவை மீண்டும் வெல்லலாம் என்ற காலம் மலையேறிவிட்டது. அது மாத்திரமல்ல, அவர்கள் இலங்கை முதலாளித்துவ அரசாங்கத்தோடு விபச்சாரம் செய்து தமிழ் மக்களை அம்மணமாக ஒடுக்கும் நாளும் வெகுதூரத்தில் இல்லை.

மாக்ஸ் லூயி பொனப்பாட்டிற் சொல்கிறார்,

*What it had concived as the most revolutionary event turned out in reality to be the most counter-revolutionary* -(Page-22)

*"பெரிய புரட்சிகர நிகழ்ச்சியாகக் கிரகிக்கப்பட்டது, யதார்த்தத்தில் பெரிய எதிர்ப்புரட்சி நிகழ்ச்சியாகியது."*

லூயி பொனப்பாட்டிற்கு ஏங்கெல்ஸ் எழுதிய முன்னுரை பிரெஞ்சுப் புரட்சியோடு 83 இனை அடுத்த தமிழீழத்திற்கு மெத்தப் பொருந்தும்.

"புரட்சி தொடங்கியதுதான் முழு அரசியல் உலகத்தையும் கோடை இடியொன்று கலக்கியது போலக் கலக்கியது. நேற்று வாழ்ந்தது போல் நாளைக்கும் வாழவிருந்த மிதிச்ச புல்லுச் சாகாமால் வாழ்ந்த நற்குணவான்கள், நீதிமான்கள், யோக்கியவான்கள், கனவான்கள் எரிச்சலடைந்து எவ்வளக்கெவ்வளவு திட்டித் தீர்க்க முடியுமோ அவ்வளவுக்கவ்வளவு திட்டித் தீர்த்தார்கள். மற்றவர்கள் புரட்சியினால் தான் விமோசனம் கிடைக்குமென்றும் அதிலேற்பட்ட தவறுகளுக்கான தண்டனை தான் இது என்றார்கள். எல்லோருக்கும் அது வினோதமாக இருந்தது. ஆனால் ஒருவரும் அதை விளங்கிக் கொள்ளவில்லை. நிகழ்ச்சிகள் முடிந்தது தான் தாமதம் மார்க்ஸ் பிரெஞ்சுப் புரட்சி பற்றிய தனது சித்திரக் கீர்த்தனத்தோடு வெளிவந்தார். பெப்ரவரி நாட்களிலிருந்து பிரெஞ்சு வரலாற்றையும் புரட்சியின் உட்தொடர்புகளையும் விளக்கி, மார்கழி மாத அதிசயங்களை இயற்கையான விதி என்று நிறுவிக் காட்டினார். இந்த நிகழ்ச்சிகளின் தொடர்புகளினால் புரட்சிக்காலத்து மாவீரர்கள் வரலாற்றுக் குப்பைக்குள்ளே தூக்கி வீசுவதற்கே தகுதியானவர்கள் என்று நிறுவிக் காட்டினார்."

தமிழ் மக்களின் இன்றைய எதிர்ப்பார்ப்புகளை மார்க்சின் பாஷையிற் சொல்வதென்றால்,

*Rather an end with terror than terror wothout end!*

லெனினது மரணத்திற்குமுன் லெனினும் மாக்சியவாதிகளும் கோடிக்கணக்கான

காலனித்துவ நாடுகளில் உள்ள மக்களது புரட்சிகர கிளர்ச்சி எழுச்சிகளே உலக சோசலிசத்தின் தலைவிதியை நிர்ணயிக்கும் என்பதில் கிஞ்சித்தும் சந்தேகம் கொள்ளவில்லை. இதை நிறுவ வேண்டுமானால் லெனினது எத்தனையோ மேற்கோள்களை இங்கு எழுதவேண்டி வரும். லெனினது மரணத்திற்குப் பின்பு மாக்சியவாதிகளின் கண்ணுக்கு முன்னாலேயே –இன்னும் சரியாகச் சொல்வதென்றால் மாக்சிய வாதிகள் என்று தம்மைச் சொல்லிக் கொண்டவர்கள் தெரிந்தும் தெரியாத மாதிரி நடித்துக் கொண்டிருக்கும்பொழுதே – எண்ணற்ற காலனித்துவப் புரட்சி எழுச்சிகள் தோல்விக்கு மேல் தோல்வி கண்டன. அதற்குரிய மூல காரணம்:

செப்டம்பர் 27, 1922 அன்று லெனின் ஸ்டாலினது தேசிய இனங்களைச் சோவியத் யூனியனோடு இணைப்பது சம்பந்தமான பிரேரணையில் அனேக திருத்தங்களைக் கொண்டு வந்தார். இந்த திருத்தக் கடிதம் கமனேவுக்கு எழுதப்பட்டு அதன் நகல்கள் எல்லா அரசியற் குழு அங்கத்தவர்களுக்கும் அனுப்பப்பட்டது. அதில் அவர் உக்கிரேனையும் மற்றைய ஆசியத் தேசங்களையும் சம அந்தஸ்தும் சமத்துவமும் உள்ள குடியரசுகளாக சோவியத்யூனியனோடு சேர்க்க வேண்டுமென்று திருத்தினார். இதை மறுதலித்த ஸ்டாலின் லெனினது இந்தத் திருத்தங்கள் சுதந்திரம் கோருவோரைத் தூண்டும் என்றும், இது லெனினது (National Liberalism) தேசியத் தாராளவாதத்தின் விளைவென்றும், இங்கே அவர் மட்டுக்கு மிஞ்சிய உரிமையைப் பாவிக்கிறார் என்றும் கூறினார். டிசெம்பர் 30, 1922 எழுதப்பட்ட லெனினது குறிப்பில் ஸ்டாலினது Social Nationalism என்ற பதப் பிரயோகத்தையும் அதற்கெதிரான போராட்டத்தையும் கொடுமையானது என்று குறிப்பிட்டார். டிசம்பர் 31, 1922 லெனினது கடிதத்தில் ஸ்டாலினும் Dzerzhinsky யுமே பெரிய ரசிய தேசியவாதப் பிரச்சாரத்திற்குப் பொறுப்பு என்று எழுதினார்.

மார்ச் 5, 1923 லெனின் ரொக்சிக்கு எழுதிய கடிதம் :

*'Stricly Confidential. Personal.'*

*Esteemed Comrade Trotsky,*

*I Earnestly ask you to undertake the defence of the Geogian affiar at Central Committe of the Party. That Affair is now Under "Prosecution" at the hands of Stalin and Dzerzhinsky and cannot rely on their impartiality. Indeed, Quite the contrary! If you would agree to undertake its defence, I could be at rest. If for some reason you do not agree, send me back all the papers. I will consider that a sign of your disagrement.*

*With the very best comradely Greetings,*

*- Lenin.*

*Dictated to M.V. (Checked bY M. Volodicheva)*

*March 5,1923.*

பெருமதிப்புக்குரிய தோழர் ரொக்சி,

கட்சி மத்தியக்குழு கூட்டத்தில் ஜோர்ஜியாவைப் பாதுகாக்கும் பொறுப்பை ஏற்கும்படி நான் மிக ஆவலோடு உன்னைக் கேட்பேன். அந்தப் பிரச்சினை ஸ்டாலினதும் Dzerzhinsky யினதும் பிடிக்குள் வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டுள்ளது. அவர்கள் பாரபட்சமின்றி நடப்பார்கள் என்பதை நாம் நம்ப முடியாது. கட்டாயம் அவர்கள் நேர்எதிராகவே நடப்பார்கள். நீ ஜோர்ஜியாவைப் பாதுகாக்கும் பொறுப்பை ஏற்றாயானால் நான் நிம்மதியாக ஓய்வெடுப்பேன். ஏதும் காரணத்தால் நீ உடன்படவில்லை யென்றால் இந்த ஆவணங்களைத் திருப்பி என்னிடம் அனுப்பு. உன்னுடைய உடன்பாடின்மையைக் காட்ட அதிலே உனது கையொப்பத்தை இட்டுவிடு.

மிகுந்த தோழமை வாழ்த்துக்களோடு,
– லெனின்

மார்ச் 5, 1923

மார்ச் 6, 1923 லெனின் Midivani, Makharadze க்கு எழுதிய கடிதம்.

*To Comrades Midivani, Makharadze and others:*

*Esteemed Comrades,*

*I am With you in this matter with all my heart. I am outraged at the rudeness of Ordjonikidze and connivace of Stalin and Dzerzhinsky. I am Preparing for you notes and speech.*

*With esteem,*
*- Lenin*

*March 6, 1923*
*(Copy to Comrades Trotsky and Kamenv)*

தோழர்கள் மிடிவானி, Makharadze க்கும் மற்றவர்கட்கும்:

பெரு மதிப்புமிக்க தோழர்கட்கு,

இந்தப் பிரச்சினையில் நான் என் முழு இதயத்தோடு உங்கள் பக்கம் நிற்பேன். ஸ்டாலினும் Dzerzhridsky யும் பார்த்துக்கொண்டிருக்கும் பொழுதே Ordjonikidze உங்களைக் கண்டாமிண்டித்தனமாய் நடாத்தியது என்னை மானபங்கப்படுத்தியதாகும். நான் உங்களுக்காக ஒரு கட்டுரையும் ஒரு சொற்பொழிவும் தயாரித்துக் கொண்டிருக்கின்றேன்.

மதிப்போடு,
– லெனின்

மார்ச் 6, 1923
(நகல்கள்: தோழர்கள் ரொக்சிக்கும் கமனேவுக்கும்)

www.padippakam.com

Midivani சோசலிச சோவியத் யூனியனிலிருந்து ஜோர்ஜியாவுக்குப் பிரிவினை கோரியவர் ஆவார். லெனினது முழு இதயமும் அவர் பக்கம் நின்றது. ஆப்கானிஸ்தானை ஆக்கிரமித்த காலத்தில் லெனின் இருந்திருந்தால், நாக்கைப் பிடுங்கித்தான் செத்திருப்பார். தேசிய விடுதலை சம்பந்தமான லெனினது நிலைப்பாடு மயக்கமோ ஊசலாட்டமோ அற்றது. அது எந்த வடிகட்டின முட்டாள்களுக்கும் விளங்கக் கூடியது. லெனினது அந்திமகால உட்கட்சிப் போராட்டங்கள் ஒடுக்கப்பட்ட தேசிய இனங்களின் பாதுகாப்புக்கும் விடுதலைக்குமானது. அந்த மூளைச் சித்திரவதைதான் லெனினது மரணத்தை விரைவாக்கியது. இன்றுகூட ஸ்டாலினது ஆதிக்கத்திற்குட்பட்டவர்கள் தேசிய விடுதலை முற்போக்கானது, பிற்போக்கானது என்று தகிடுதத்தம் பேசுவது போல் லெனினிசம் இருக்கவில்லை. தேசிய விடுதலை சம்பந்தமாக குளப்பு குளப்பு என்று குளப்பித் தங்களது துரோகத்தை மறைப்பவர்களுக்கு வரலாறு நீதி வழங்கட்டும்.

தோழமையோடு,

– **வ. அழகலிங்கம்**

யூலை 20. ஜேர்மனி 1993



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

V.I.LENIN COLLECTED WORKS

- Vol.23

இலிருந்து மொழிபெயர்க்கப்பட்டது.

*1916 ஓகஸ்ற் ஒக்ரோபரில் இது எழுதப்பட்டது.*

*1924 இல்தான் முதன்முதலாக ZVEZDA முதலாவது இரண்டாவது இதழ்களில் பிரசுரமானது.*



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# ஏகாதிபத்தியப் பொருளாதாரவாதம் ஒரு மாக்சியக் கேலிக்கூத்து

"புரட்சிகர சமூக ஜனநாயகவாதிகள் தாங்களே தமது முகத்தில் கரிபூசிக்கொண்டாலொழிய அவர்களுக்கு மேல் வேறெவரும் சேறடித்து விட முடியாது." இந்த மேற்கோள் எப்பொழுதும் ஞாபகத்துக்கு வரவேண்டும். கட்டாயம் அது எப்பொழுதும் புதிதாகப் பிறக்கவேண்டும். மாக்சியத்தின் ஒரு புதிய தத்துவார்த்த அன்றேல் தந்திரோபாய பிரேரணைகள் வெற்றிவாகை சூடவேண்டுமானால், அன்றேல் அன்றைய நாளாந்த விடயங்கள் முன்னணிக்கு வரவேண்டுமானால் இந்த மேற்கோள் ஞாபத்திற்கு வரவேண்டும். ஏனெனில் பிடிவாதமான எதிரிகளினதும் ஏன் மாக்சியத்தின் நண்பர்களினதும் மீண்டும் மீண்டும் தாக்கும் தாக்குதல்களிலிருந்து தப்புவதற்கு இந்த மேற்கோள் ஞாபகத்திற்கு வரவேண்டும். அவர்கள் வீணே நம்பிக்கையிழந்து அதை மரியாதை கெடுத்துகிறார்கள். அதைக் கேலிக்கூத்தாக்குகிறார்கள். இது வரலாறு முழுவதும் ரசிய சமூக ஜனநாயக இயக்கத்தில்

A CARICATURE OF MARXISM AND IMPERIALIST ECONOMISM



படிப்பகம்

திரும்பத் திரும்ப நடைபெற்றிருக்கிறது. தொண்ணூறுகளின் முற்பகுதியில் புரட்சிகர இயக்கங்களினுள்ளே மாக்சியம் வெற்றிவாகை சூடியபொழுது பொருளாதாரவாதம் என்ற கேலிச்சித்திரம் அல்லது வேலைநிறுத்தவாதம் அரும்பத் தொடங்கியது. இஸ்கராக்காரர்கள் குட்டிமுதலாளித்துவ நரோட்னிசுகளுக்கு எதிராகவோ இந்தப் பொருளாதார வாதத்திற்கு எதிராகவோ நீண்டநாள் போராட்டத்தை நிகழ்த்தாமல் பாட்டாளி வர்க்கத்தின் அடிப்படை சித்தாந்தத்தையோ கொள்கைகளையோ நிலைநிறுத்திக் கொண்டிருக்க முடியாது. 1905 இல் போல்ஷெவிக்குகளது தலைவிதியும் இதேதான். இலையுதிர் காலத்தில் ஜாரின் டூமா தேர்தல் பகிஸ்கார சுலோக பிரயோகத்தினூடு ரசியப் புரட்சியின் தீர்க்கமான யுத்தத்தை நடாத்தி முடித்தது. 1908–1910 களில் அலெக்ஸ்சின்ஸ்கியும் (Alexinsky) அவரைச் சேர்ந்தவர்களும் மூன்றாவது டூமாவுக்குப் பங்குகொள்ளக் கூடாது என்ற நிலைப்பாட்டை வகுத்த பொழுது அதற்கெதிராகப் போராடி போல்ஷெவிசம் வெற்றிவாகை சூடியது.

அன்று நடந்தவைகளே இன்றும். இன்றைய யுத்தத்தை ஏகாதிபத்திய யுத்தம் என்று அங்கீகரித்து அதற்கு முதலாளித்துவத்தின் ஏகாதிபத்திய சகாப்தத்தோடுள்ள நெருங்கிய தொடர்பு பற்றி அடித்துக் கூறுகையில் நிர்ணயமான எதிரிகளோடு மாத்திரமல்ல நிர்ணயம் குறைந்த நண்பர்களோடும் முட்டிமோத வேண்டியிருக்கிறது. அவர்களுக்கு 'ஏகாதிபத்தியம்' என்ற சொல் சிம்மசொப்பனமாக இருக்கிறது. அந்தச் சொல்லை மனனம் செய்துகொண்டு தொழிலாளர்களுக்கு கவ்வைக்குதவாத சித்தாந்தங்களைப் பிரேரிப்பதோடு பழைய பொருளாதார வாதத்தின் தவறுகளை மீண்டும் புதுப்பிக்கிறார்கள். முதலாளித்துவம் வெற்றிவாகை சூடிவிட்டது–ஆகவே அரசியல் பிரச்சினை பற்றி கவலைப்படவேண்டிய அவசியமில்லை. பழைய பொருளாதாரவாதி

1894–1901 வரை இப்படிக் கூறிக்கொண்டு ரசியாவிலோ அரசியல் கிளர்ச்சிகளை நிராகரித்தார்கள். ஏகாதிபத்தியம் வெற்றிவாகை சூடிவிட்டது– ஆகவே அரசியல் ஜனநாயகத்தைப் பற்றி யோசிக்கவேண்டிய அவசியமில்லை என்று இன்றைய பொருளாதாரவாதிகள் காரணம் கூறுகின்றார்கள். கீவ்ஸ்கியின் கட்டுரையில் துலங்கும் இதேபோன்ற உணர்வுகள் மாக்சியக் கேலிக்கூத்தாகும். அவரது எழுத்தை ஓர் தொகையிட்ட இலக்கியமாக எடுத்துக்கொண்டு கட்சியின் (வெளிநாட்டுச்) சில பகுதிகளில் 1915 இலிருந்து ஊசலாட்டங்கள் வரத் தொடங்கியுள்ளது.

சோசலிசத்துள் ஏற்பட்டுள்ள இன்றைய நெருக்கடிக்குள், சமூக சோவனிஸ்டுகளுக்கும் புரட்சிகர சர்வதேசியவாதிகளுக்கும் ஏற்பட்டுள்ள ஜீவமரணப் போராட்டத்தினுள்ளே, ஏகாதிபத்திய பொருளாதாரவாதம் தலைதூக்கி மாக்சியத்தினுள் பரவுவது; எங்களது இயக்கத்திற்கும் கட்சிக்கும் ஓர் பேரடியாகும். அது உள்ளுக்குள்ளிருந்தே கழுத்தறுக்கும் வேலையைச் செய்யும். உள் அங்கத்தவர்களை, கேலிக்கூத்தாக்கிய மாக்சியத்தைக் காவிச்செல்பவர்களாக்கும். ஆதலால் கீவ்ஸ்கியின் எண்ணற்ற எழுத்துக்களை ஆறஅமர தீர்க்கமாகக் கலந்துரையாட வேண்டியுள்ளது. அது சலிப்புத்தட்டுவதாகவோ கருத்துச் செறிவற்றதாகவோ இருந்தாலும்கூட. கீவ்ஸ்கி சின்ன உண்மையைக்கூட பாணி–டப்பாணி இழுபடுவதுபோல நீட்டி இழுத்து எழுதுபவர் என்பதை 1914, 1915 களில் எங்களின் எழுத்துக்களை வாசித்த வாசகர்கள் கண்டுகொள்வர்.

கீவ்ஸ்கியின் விசயத்தின் மையக்கருத்தை அதன் புதிய ஏகாதிபத்திய பொருளாதாரவாதத்தின் சாராம்சத்தை உடனடியாக ஆராய்வோம்.

THE MARXIST ATTITUDE TOWARDS WAR AND DEFENCE OF THE FATHERLAND

# யுத்தம் தொடர்பாக மாக்சியவாதிகளின் நிலைப்பாடும் தந்தை நாட்டைப் பாதுகாப்பதும்

கீவ்ஸ்கி எமது கட்சி வேலைத்திட்டத்தின் 9வது கட்டுரையை, அதாவது தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை சம்பந்தமாகவுள்ள வேலைத்திட்டத்தோடு, தனக்கு உடன்பாடு இல்லையென்று நம்பப் பண்ணியதோடு, தனது வாசகர்களும் அதை நம்பவேண்டும் என்கிறார். ஜனநாயகம் சம்பந்தமாக பொது மாக்சிய அடிப்படை நிலைப்பாடுகளிலிருந்து விலகியதோடு ஆத்திரத்தோடு அவைகளை நிராகரிக்கின்றார். அதாவது அடிப்படை விசயங்களில் மாக்சியத்தைக் காட்டிக்கொடுத்துள்ளார். விசயம் என்னவென்றால் எங்கள் எழுத்தாளருக்கு ஒரு பிரத்தியேக சம்பவத்தில்தான் அரைகுறை உடன்பாடின்மை என்றுதான் முதலில் தோன்றியது. ஆனால் அவரது விவாதங்களையும் நோக்குகளையும் நோக்குமிடத்து மாக்சியத்தின் எல்லா அடிப்படை விசயத்திலிருந்தும் விலகுகிறார் என்பதைக் காணலாம். அவரது கட்டுரையில் இரண்டாவது பகுதியில் "தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமைக் கோரிக்கையானது சோசலிச தேசபக்திக்கு இழுத்துச் செல்லும்" என்கிறார். அதை தொடர்ந்து விபரிக்கையில் அது "தந்தை நாட்டைக் காப்போம்" என்ற சுலோகத்திற்கு வஞ்சகமாக இழுத்துக்கொண்டு போகும் என்கிறார். அவரது அபிப்பிராயப்படி 'சுயநிர்ணய உரிமையானது' பிரெஞ்சு, பெல்ஜிய சமூக தேசபத்தர்களது வஞ்சகமான சதியாகும். அவர்கள் ஆயுதமும் கையுமாக தேசிய சுதந்திரத்தை பாதுகாக்கவில்லையா? என்கிறார். அவர்கள் அதை நடைமுறையில் செய்கிறார்கள். 'சுயநிர்ணய உரிமை' ஆதரவாளர்கள் அதை ஊக்குவிக்கிறார்கள். "தந்தை நாட்டைப் பாதுகாப்பவர்கள் எங்களது மூர்க்கமான எதிரிகள்". ஒரே நேரத்தில் ஒரு பக்கத்தில் தந்தை நாட்டைப் பாதுகாப்போம் என்பதை எதிர்த்துக்கொண்டு, மறுபக்கத்தில் சுயநிர்ணய உரிமையை ஆதரிக்கலாம் என்பதை எவ்வாறு

www.padippakam.com

**யுத்தம் தொடர்பாக மாக்சியவாதிகளின் நிலைப்பாடும் தந்தைநாட்டைப் பாதுகாப்பதும்**

விளங்கிக்கொள்ள முடியும்? இதை நாம் திட்டவட்டமாக எதிர்க்கிறோம்.

இதுதான் கீவ்ஸ்கியின் வாதம். இன்றைய யுத்தத்திலே நாம் ஏன் தந்தைநாட்டைக் காப்போம் என்ற சுலோகத்தை எதிர்க்கிறோம் என்பதை விளங்கிக்கொள்ளவில்லை. எனவே எங்களது தீர்மானத்தை மீண்டும் விரிவாக விஸ்தரிக்க வேண்டியது அவசியமாகிறது.

"தந்தைநாட்டைப் பாதுகாப்போம்" என்ற சுலோகத்திற்கு எதிரான தீர்மானத்தை 1915 மார்ச்சில் பேர்ண் நகரத்தில் கட்சி தீர்மானித்தது. அதன் தொடக்கமே "இன்றைய யுத்தத்தின் சாராம்சம்...." என்று தொடங்குகின்றது.

அந்தத் தீர்மானம் இன்றைய யுத்தத்தை எளிதாக விஸ்தரிக்க முடியாது என்பதைக் கூறுகிறது. அதிலுள்ள சொற்களின் 'சாராம்சம்' மாயத்தையும் உண்மையையும் வித்தியாசப்படுத்திக் காணவேண்டும் என்றும், தோற்றத்தையும் சாராம்சத்தையும் வித்தியாசப்படுத்திக் காணவேண்டும் என்றும், சொல்லையும் செயலையும் வித்தியாசப்படுத்திக் காணவேண்டும் என்றும் கூறுகிறது. தந்தை நாட்டைப் பாதுகாப்போம் என்பதை தேசியவாதமாகக் காட்டுவது வெறும் பொய்யான வார்த்தை ஜாலங்களாகும். உண்மையில் 1914–1916 ஏகாதிபத்திய யுத்தமானது காலனி பிரிப்பதற்கும், பிறநாடுகளைச் சூறையாடுவதற்கும் ஆகும். மேலும் யுத்தம் பற்றிய எங்களது நோக்கை இல்லாமல் செய்வதாகும். நாங்கள் அந்தத் தீர்மானத்திலே "உண்மையான தேசிய யுத்தங்கள்" என்ற ஒரு விசேட பகுதியை எழுதியிருந்தோம். அது குறிப்பாக 1789 இலிருந்து 1871 வரை நடந்ததாகும்.

அந்தத் தீர்மானத்தில் உண்மையான தேசிய யுத்தத்திற்கான அடிப்படை நிலைமைகளை விஸ்தரித்திருந்தோம். ஒன்று ஒரு நீண்டகால வெகுஜனப் போராட்டம் நிகழ்ந்திருக்க வேண்டும் அல்லது சர்வாதிகாரத்திற்கும் நிலப்பிரபுத்துவத்திற்கும் எதிரான போராட்டமாக நிகழ்ந்திருக்க வேண்டும்.



படிப்பகம்

**யுத்தம் தொடர்பாக மாக்சியவாதிகளின் நிலைப்பாடும் தந்தைநாட்டைப் பாதுகாப்பதும்**

இது பார்ப்பதற்குத் தெளிவானது. இன்றைய ஏகாதிபத்திய யுத்தமானது ஏகாதிபத்திய சகாப்தத்தின் பொதுவான தன்மையால் உருவானது. இது தற்செயலானதோ விதிவிலக்கானதோ அல்ல. இது பொதுவானதிலும் உதாரணமானதிலுமிருந்து திரிந்ததல்ல. இங்கே தந்தை நாட்டைக் காப்போம் என்று கூறுவது மக்களை ஏமாற்றுவதற்காகும். ஏனெனில், இது ஒரு தேசிய யுத்தமில்லை. உண்மையான ஒரு தேசிய யுத்தத்தில் தந்தை நாட்டைக் காப்போம் என்பது வஞ்சகமான வார்த்தையல்ல. அதை நாங்கள் எதிர்க்க மாட்டோம். அப்படியான தேசிய யுத்தங்கள் 1789–1871 வரை நடந்தது. எங்களது தீர்மானம் அப்படியான யுத்தங்கள் இப்பவும் நிகழலாம் என்பதை நிராகரிக்கவில்லை. ஆனால் ஓர் உண்மையான தேசிய யுத்தத்தையும் தேசியவாத சுலோகங்களால் பூசிமெழுகப்பட்ட ஏகாதிபத்திய யுத்தத்தையும் எவ்வாறு இனங்காண வேண்டும் என்று விஸ்தரிக்கிறது. விசேடமாக அதை எப்படி ஆராய்ந்து இனங்காண வேண்டுமென்றால் அதன் அடிப்படையை ஆராயவேண்டும். அது நீண்டகால வெகுஜன தேசிய இயக்கத்தின் பலாபலனால் வந்ததா? தேசிய ஒடுக்குமுறையைத் தூக்கியெறிவதற்கான போராட்டமா? என்பதைப் பொறுத்தே இனங்காணலாம். அகிம்சாவாதம் பற்றிய தீர்மானத்தில் நாங்கள் விஸ்தரித்திருந்தோம். சமூக ஜனநாயகவாதிகள் புரட்சிகர யுத்தங்கள் நிகழுமென்பதைக் காணாமல் விடவில்லை. அந்த யுத்தங்களின் முற்போக்கான தன்மைகளை காண்கிறோம். ஆனால் ஏகாதிபத்திய யுத்தம் அப்படியானதல்ல. அப்படியான தேசிய யுத்தங்கள் 1789–1871 வரை நிகழ்ந்தவை. அவை தேசிய ஒடுக்குமுறைக்கு முற்றுப்புள்ளி வைக்க நிகழ்ந்தவை. 1915 கட்சித் தீர்மானம் 1789–1871 தேசிய யுத்தங்களையும் அதன் முற்போக்குத் தன்மைகளையும் பற்றிப் பேசுகையில் அப்படியான யுத்தங்கள் இன்று நடக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் இல்லையென்று கூறுகிறோமா? அப்படி நாம் கட்டாயம் கூறவில்லை.

லெனினும் சினோவேவும் (Zinoviev) சேர்ந்து எழுதிய சோசலிசமும் யுத்தமும் என்ற குறுநூலில் எங்களது கட்சியின் தீர்மானம் பற்றி ஒரு விமர்சனம் அல்லது ஓர் ஜனரஞ்சகமான

www.padippakam.com

**யுத்தம் தொடர்பாக மாக்சியவாதிகளின் நிலைப்பாடும் தந்தைநாட்டைப் பாதுகாப்பதும்**

விளக்கம் தரப்பட்டுள்ளது. அதன் ஐந்தாம் பக்கத்தில் மிக எளிதாக எழுதப்பட்டுள்ளது – தந்தை நாட்டைக் காப்போம், அல்லது பாதுகாப்பு யுத்தமானது நியாயமானது, முற்போக்கானது ; அது பிறநாட்டின் ஒடுக்குமுறையைத் தூக்கியெறிவதற்காகப் போராடப்பட்டால் மாத்திரம்தான். சோசலிஸ்டுக்கள் யுத்தத்தை இந்த நோக்கில் மாத்திரம்தான் மதிக்கவேண்டும். அங்கே ஓர் உதாரணம் காட்டப்பட்டது. ரசியாவுக்கு எதிரான பேர்சியாவின் போராட்டம் போன்றவை. அதைப்பற்றிச் சொல்லும்போது இது நியாயமானது. அது பாதுகாப்புக்கான யுத்தம். இங்கே யார் யுத்தத்தைத் தொடக்கினால் என்ன பரவாயில்லை. சோசலிஸ்டுகள் ; ஒடுக்கப்பட்ட நாடு ; ஒடுக்குகிற நாட்டை, அடிமைத்தனத்தை வைத்திருக்கிற நாட்டை, பெரிய சக்திபடைத்த நாட்டை வெல்லவேண்டுமென்று விரும்பவேண்டும். அந்தக் குறுநூல் 1915 இல் வெளியானது. அதற்கு ஜேர்மன், பிரெஞ்சு மொழிபெயர்ப்புக்கள் உண்டு. கீவ்ஸ்கிக்கு அதன் உள்ளடக்கம் நன்றாகத் தெரியும். எப்பவாவது யாராவது அந்தக் கட்சியின் தீர்மானத்தை சவால்விட்டது கிடையாது. தந்தை நாட்டைக் காப்போம் என்ற சுலோகம் பற்றிய தீர்மானத்தையோ, அகிம்சாவாதம் பற்றிய தீர்மானத்தையோ, அன்றேல் அவைகளின் வியாக்கியானம் பற்றியோ எதிர்த்துக் கூறியவர்கள் கிடையாது. எங்களுக்குக் கேட்க உரிமையுண்டு. நாங்கள் கீவ்ஸ்கியைச் சேறடிக்கிறோமா? அவருக்குப் பூரணமாக மாக்சியம் விளங்கவில்லையா? 1915 மார்ச் தொடக்கம் கட்சியின் யுத்தம் பற்றிய நிலைப்பாட்டை எதிர்த்துக் கூறியது கிடையாது. ஆனால் 1916 ஆகஸ்டில் 'சுயநிர்ணய உரிமை' பற்றி அதுவும் அரைகுறைப் பிரச்சினை பற்றி அவர் வியக்கத்தக்க விளங்காமையை வெளிப்படுத்தும் போது பொதுநிலைப்பாடே விளங்காமை தெரிகிறது.

கீவ்ஸ்கி சொல்கிறார் "தந்தை நாட்டைப் பாதுகாப்போம்" சுலோகம் ஒரு சதி என்று. நாம் மிக நம்பிக்கையோடு அடித்துச் சொல்லுவோம் – சுலோகங்களை விளங்காமல் யாந்திரிக முறையில் திருப்பிப் பிரயோகிப்பவர்களுக்கு, அந்தச் சுலோகம் விளங்காமல் அவைகளைப் பற்றி ஆழ்ந்து யோசியாமல் வெறுமனே சொற்களை



படிப்பகம்

மனனம் செய்து அவைகளைப் பற்றி, அவைகளின் பின்விளைவுகளை முன்விளைவுகளைப் பற்றி ஆய்வு செய்யாமல் பிரயோகிப்பவர்களுக்கு, எல்லாமே சதிதான்.

பொதுவாகச் சொல்லுமிடத்து "தந்தை நாட்டைப் பாதுகாப்போம் என்றால் என்ன? அது பொருளாதாரம், அரசியல் போன்றவற்றை தொடர்புபடுத்திய விஞ்ஞான பூர்வமான எண்ணக்கருவோ இல்லை. இது ஓர் இழுபறி தள்ளுப்பறிப்படும் தற்காலத்து வெளிப்பாடு. சில நேரங்களில் யுத்தத்தை நியாயப்படுத்தும் வெறும் அற்பவாத வசனம். அதற்குமேலால் அங்கு ஒன்றுமில்லை. சதி என்ற சொல்லை ஏன் பிரயோகிக்கலாம் என்றால்; அற்பவாதிகள், எந்த யுத்தத்தை நியாயப்படுத்த "நாங்கள் தந்தை நாட்டைக் காப்போம்" என்பதைப் பிரயோகிக்கிறார்கள். ஆனால் மாக்சியத்தைப் பொறுத்தவரை அற்பவாதிகளைப் போல் பாய்ந்து விழுந்து ஒரு முடிவுக்கு வராமல் எந்த யுத்தத்தைப் பற்றியும் வரலாற்று ரீதியாக ஆய்வுசெய்து எந்த யுத்தம் முற்போக்கானது என்பதை கண்டுகொண்டு, அது ஜனநாயகத்தையும் பாட்டாளி வர்க்கத்தின் நலனையும் பேணுகிறதா என்பதை கண்டுகொண்டு, அந்த அர்த்தத்தில் மாத்திரம்தான், அதன் நியாயபூர்வத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

"தந்தை நாட்டைக் காப்போம்" சுலோகம் அதிகமாக உணர்வுபூர்வமற்ற அற்பவாதிகளின் யுத்தத்தை நியாயப்படுத்தும் வசனமாகும். யுத்தத்தின் பின்விளைவு முன்விளைவுகளை ஆய்வு செய்ய லாயக்கில்லாதவர்கள், ஒவ்வொரு பிரத்தியேக யுத்தத்தையும் வரலாற்று முன்னோக்கில் விளங்க இயலாதவர்களது நியாயப்படுத்தலாகும்.

மாக்சியம் அதை ஆய்வுசெய்து இப்படிச் சொல்லும் :

ஒரு யுத்தத்தின் சாராம்சம் உதாரணத்திற்கு பிறநாட்டின் ஒடுக்குமுறையைத் தூக்கியெறிவதற்கான யுத்தமாக இருந்தால் (இது 1789–1871 வரை ஐரோப்பாவில் நடந்தது.) அந்த யுத்தம் ஒடுக்கப்பட்ட தேசத்தைப் பொறுத்தவரை முற்போக்கானது.

www.padippakam.com

இருந்தபோதும் யுத்தத்தின் சாராம்சம் காலனிகளைத் திருப்பிப் பிரிப்பது, நசுக்குவது, பிறநாட்டைச் சூறையாடுவது பிற்போக்கானது. (இது 1914–1916 வரை நடந்தது) இப்பொழுது 'தந்தை நாட்டைப் பாதுகாப்போம்' என்று கதைத்தவர் எல்லோரும் மக்களை ஏமாற்றும் வஞ்சகர்கள் ஆவர்.

**யுத்தம் தொடர்பாக மாக்சியவாதிகளின் நிலைப்பாடும் தந்தைநாட்டைப் பாதுகாப்பதும்**

அப்படியென்றால் எப்படி ஒரு யுத்தத்தின் சாராம்சத்தை வரையறுப்பது? யுத்தம் கொள்கையின் தொடர்ச்சியாகும். யுத்தத்திற்கு முன்பு என்ன கொள்கைக்காகப் பிரயத்தனப் பட்டார்கள். அந்தக் கொள்கையே யுத்தத்தைக் கொண்டுவந்ததென்பது, ஆராய்ந்தால் விளங்கும். அது ஓர் ஏகாதிபத்தியக் கொள்கையாக இருந்தால் அதாவது நிதிமூலதனத்தின் நன்மைக்காக, காலனிகளையும் வெளிநாடுகளையும் சூறையாடுவதற்காகவும் ஒடுக்குவதற்காகவுமாக இருந்தால், அந்த யுத்தமானது ஏகாதிபத்தியக் கொள்கையிலிருந்து ஊற்றெடுத்ததாகும். இது ஓர் தேசிய விடுதலைக் கொள்கையாக இருந்தால் –அதாவது ஒடுக்குமுறைக்கு எதிரான வெகுஜன இயக்கத்தின் வெளிப்பாடாக இருந்தால்– அந்தக் கொள்கையிலிருந்து தோன்றிய யுத்தமானது, தேசிய விடுதலை யுத்தமாகும்.

அற்பவாதிகள் யுத்தத்தை கொள்கையின் தொடர்ச்சியாக நோக்குவதில்லை. அவர்கள் எதிரி தாக்கிவிட்டான், எதிரி எங்கள் நாட்டை ஆக்கிரமித்து விட்டான் என்ற ஆத்திரத்திற்குள் மட்டுப்படுத்திவிடுவார்கள். ஒரு யுத்தத்தின் நோக்கம் என்ன? எந்த வர்க்கம் யுத்தத்தை நடாத்துகிறது? எந்தக் கொள்கைக்காக யுத்தம்? போன்றவற்றை யோசிப்பதில்லை. கீவ்ஸ்கி அற்பவாத மட்டத்திற்குத் திரும்பி ஜேர்மனி பெல்ஜியத்தை ஆக்கிரமித்து விட்டது. எனவே சுயநிர்ணய நோக்கில் பார்க்குமிடத்து பெல்ஜிய சமூக தேசபக்தர்கள் சரி, அல்லது ஜெர்மனி பிரான்சின் ஒரு பகுதியை ஆக்கிரமித்து விட்டது. கூஸ்டேயை (Guesde) திருப்திப்படுத்த வேண்டும். ஏனெனில் அந்த நிலப்பரப்பில் பிரெஞ்சுக்காரர்கள்தான் இருக்கிறார்கள். எதிர்த்தேசத்தவர்களல்ல என்றே கூறுகின்றார். அற்பவாதிகளுக்கு முக்கிய விடயம் எங்கே



படிப்பகம்

www.padippakam.com



இராணுவத்தினர் நிற்கிறார்கள். இந்தக் கணத்தில் யார் வெல்கிறார்கள். மாக்சியவாதிகளுக்கு என்ன நோக்கிற்காக இந்த யுத்தம் நடக்கிறது. அந் நேரத்தில் ஓர் இராணுவம் முன்னணியில் நின்றால் இறுதியில் மற்றது முன்னணிக்கு வரலாம்.

இந்த யுத்தம் எதற்காகப் போராடப்படுகிறது? எங்களது தீர்மானத்தில் இதற்கான மறுமொழி கொடுக்கப்பட்டுள்ளது. ஆக்கிரமிப்பாளர்கள் யுத்தத்திற்குப் பல சகாப்தம் முன்னரேயே என்ன கொள்கையை முடுக்கிவிட்டிருந்தார்கள் என்பதே விடையாகும். இங்கிலாந்து, பிரான்சு, ரசியா தாம் பிடித்த காலனியை வைத்திருப்பதற்காகவும் துருக்கியைச் சூறையாடவும் ஜேர்மனி இந்தக் காலனிகளை தான் பிடித்து தானே சூறையாடுவதற்காகவும், தான் துருக்கியை சூறையாடவுமேயாகும். ஜேர்மனி பரிஸையோ சென்பீற்றர்ஸ்பேர்க்கையோ எடுத்தாலும் இதே கதிதான். அப்படிப் பிடித்தால் இந்த யுத்தத்தின் குணாம்சம் மாறிவிடுமா? ஒருநாளும் மாறாது. ஜேர்மனியின் நோக்கம் என்ன, என்ன கொள்கையை வைத்திருக்கிறது இந்த வெற்றியை யதார்த்தமாக்க. காலனிகளை பறிப்பது. துருக்கிக்கு மேல் ஆதிக்கத்தை நிர்மாணிப்பது. மற்ற தேசிய இனங்கள் வதியும் இடங்களைத் தன்னோடு சேர்ப்பது. உதாரணத்திற்கு, போலந்தை. அது திட்டவட்டமாகப் பிரான்சையோ ரசியாவையோ அந்நிய ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவராது. இந்த யுத்தத்தின் உண்மைச் சொரூபம் ஏகாதிபத்திய யுத்தமேயொழிய தேசிய யுத்தமல்ல. மறுதலையாகச் சொல்வதென்றால் அந்நிய ஒடுக்குமுறையைத் தூக்கியெறிவதற்காக இந்த யுத்தம் நிகழவில்லை. இந்த யுத்தமானது இரண்டு கூட்டம் ஒடுக்குமுறையாளர்களுக்கிடையே, இரண்டு கூட்டம் ஆக்கிரமிப்பாளர்களுக்கிடையே தாம் ஆக்கிரமித்த நாட்டைப் பிரிப்பதற்காக துருக்கியையும் மற்றைய காலனிகளையும் சூறையாடுவதற்காகவுமே நடைபெறுகிறது.

சுருக்கமாகக் கூறுவதென்றால், ஏகாதிபத்திய வல்லரசுகளுக் கிடையேயான யுத்தமாகும். (அவைகள் ஒரு தொகை தேசங்களை ஏற்கனவே ஒடுக்கிக் கொண்டிருக்கின்றன. நிதிமூலதனத்தில்



படிப்பகம்

www.padippakam.com

**யுத்தம் தொடர்பாக மாக்சியவாதிகளின் நிலைப்பாடும் தந்தைநாட்டைப் பாதுகாப்பதும்**

தங்கவைத்துள்ளன.) அல்லது பெரிய வல்லரசுகள் இணைந்து நடாத்தும் யுத்தமாகும். இது ஓர் ஏகாதிபத்திய யுத்தமாகும். 1914–1916 நடந்த யுத்தம் இதுவேயாகும். இந்த யுத்தத்தில் "தந்தை நாட்டைக் காப்போம்" என்பது வஞ்சனையாகும். அது யுத்தத்தை நியாயப்படுத்த எடுக்கும் முயற்சியாகும். ஏகாதிபத்தியத்திற்கு எதிரான யுத்தம் ஒடுக்குகின்ற சக்திகளுக்கு எதிராக ஒடுக்கப்பட்ட தேசங்களின் யுத்தம். உதாரணத்திற்கு காலனித்துவத் தேசங்களின் யுத்தம்; உண்மையிலேயே தேசிய யுத்தமாகும். இப்படியான யுத்தங்கள் இந்நாளிலும் நிகழக்கூடும். ஒடுக்குகின்ற தேசத்திற்கு எதிராக ஒடுக்கப்படும் தேசத்தின் யுத்தத்திலே "தந்தை நாட்டைக் காப்போம்" என்ற சுலோகம் வஞ்சனையானதல்ல. அந்த யுத்தங்களிலே தந்தை நாட்டைக் காப்போம் என்பதை சோசலிஸ்டுகள் எதிர்க்கக் கூடாது.

தேசிய சுயநிர்ணய உரிமை என்பது பூரண தேச சுதந்திரத்திற்கு நிகராகும். மற்றைய நாட்டோடு இணைத்தலுக்கு எதிராகப் பூரண சுயாதீனமடைவதாகும். சோசலிஸ்டுகள் சோசலிசத்திலிருந்து விட்டோடாமல் இருக்கில்; அந்த யுத்தங்களை, அவை எந்த வடிவத்தில் இருந்தாலென்ன, ஒரு கிளர்ச்சியெழுச்சியாக இருந்தாலென்ன எதிர்க்கக் கூடாது.

கீவ்ஸ்கி யோசிக்கிறார், தான் பிளெக்னோவை (Plekhanov) எதிர்ப்பதாக. சுயநிர்ணய உரிமைக்கும் "தந்தை நாட்டைக் காப்போம்" சுலோகத்திற்குமிடையே ஒரு தொடர்பிருப்பதாகக் கூறியவர் பிளெக்னோவ்தான். கீவ்ஸ்கி நம்புகிறார்– பிளெக்னோவ் கூறியபடியே அப்படி ஒரு தொடர்பிருப்பதாக. அப்படி நம்பியபடியால் கீவ்ஸ்கி பயந்து பிளெக்னோவுக்குள் விழுந்து சுயநிர்ணய உரிமையையும் நிராகரிக்க முடிவெடுத்துள்ளார். பிளெக்னோவில் பெரிய நம்பிக்கையும் பெரிய பயமும் இருக்கிறதேயொழிய பிளெக்னோவின் சாராம்சத்தின் தவறைப் பற்றிய இம்மியளவு சிந்தனையுமில்லையாகும்.

சமூக சோவனிஸ்டுகள் (Social-Chauvinists) சுயநிர்ணய உரிமைக்காக வாதாடுவது ஏனெனில்– இன்றைய



படிப்பகம்

www.padippakam.com

**யுத்தம் தொடர்பாக மாக்சியவாதிகளின் நிலைப்பாடும் தந்தைநாட்டைப் பாதுகாப்பதும்**

யுத்தத்தை தேசிய யுத்தமென நிறுவுவதற்காகும். ஒரேயொரு வழியில் மாத்திரம்தான் அவர்களைத் தோற்கடிக்கலாம். இந்த யுத்தம் தேசத்தை விடுதலை செய்யப் போராடவில்லை. மாறாக எந்தக் கொள்ளைக்காரர்கள் அதிக தேசங்களை ஒடுக்கலாம் என்பதற்காக நிகழும் யுத்தம்; என்பதை நிறுவுவதால் மட்டும்தான். உண்மையிலே தேசங்களை விடுதலை செய்யும் யுத்தத்திற்கு எதிராகப் போவது உண்மையில் மாக்சியக் கேலிக்கூத்தாகும். பிளாக்னோவும், பிரெஞ்சுச் சமூக சோவனிஸ்டுகளும், குடியரசு பற்றி கிளிப்பிள்ளைபோல் சொன்னதையே திருப்பிச் சொல்லுதல்; ஜேர்மன் முடியரசுக்கெதிராகப் பிரான்சின் போரை பாதுகாப்பதற்காகும். நாங்கள் கீவ்ஸ்கியின் நிலைப்பாட்டைப் பின்பற்றினோமென்றால் குடியரசைப் பாதுகாப்பதற்காகன யுத்தத்தையோ குடியரசையோ எதிர்க்க வேண்டும். ஜேர்மன் சமூக சோவனிஸ்டுகள் ஜாரிசத்திற்கு எதிரான போராட்டத்தை நியாயப்படுத்த சர்வஜன வாக்குரிமையையும் கட்டாய அடிப்படைக் கல்வியையும் புகுத்தினார்கள். நாங்கள் கீவ்ஸ்கியின் நிலைப்பாட்டைப் பின்பற்றினோமென்றால் சர்வஜன வாக்குரிமையையும் கட்டாய அடிப்படைக் கல்வியையும் எதிர்க்க வேண்டும், அல்லது அரசியல் சுதந்திரத்திற்காகப் போராடிய யுத்தத்தை எதிர்க்க வேண்டும்.

*1914–1916* வரைக்கும் காவுட்ஸ்கி ஒரு மாக்சியவாதியாக இருந்தார். அந்நாளைய அவரது அனேகமான எழுத்துக்களும் அறிக்கைகளும் மாக்சியத்தின் உதாரணங்களாக விளங்கின. ஆகஸ்ட் *26, 1910* காவுட்ஸ்கி பின்வர இருந்த யுத்தத்தைப் பற்றி 'புதியகாலம்' பத்திரிகையில் பின்வருமாறு எழுதினார்.

"ஜேர்மனிக்கும் இங்கிலாந்திற்குமான யுத்தத்தில் உள்ள பிரச்சினை ஜனநாயகமல்ல. மாறாக உலக ஆதிக்கம். அதாவது உலகத்தைச் சுரண்டுவதாகும். ஆகவே இந்தப் பிரச்சினையில் சமூக ஜனநாயகவாதிகள் தங்களது சுரண்டுபவர்களது பக்கம் நிற்கவேண்டிய அவசியமில்லை."



படிப்பகம்

www.padippakam.com

இது ஒரு விசேடமான மாக்சியச் சூத்திரமாகும். அது எங்களுக்கும் பூரணமாகப் பொருந்துவதோடு இந்த காவுட்ஸ்கியையும் அம்பலப்படுத்துகிறது. காவுட்ஸ்கி மாக்சியத்திலிருந்து விட்டோடி சமூக சோவனிஸ்டு ஆகிவிட்டார். இந்தச் சூத்திரத்தை இனிவரப்போகும் கட்டுரைகளுள்ளே கெட்டியாக அறைய வேண்டும். இதுவே திட்டவட்டமாக யுத்தம் பற்றி மாக்சியவாதிகள் என்ன நிலைப்பாட்டை வகுக்கவேண்டும் என்பதை எடுத்துக்காட்டும். யுத்தம் என்பது கொள்கையின் தொடர்ச்சியாகும். எனவே ஒரு ஜனநாயகத்திற்காகப் போராடும் கொள்கை இருக்குமென்றால், ஜனநாயகத்திற்கான யுத்தமும் இருக்கக்கூடும்.

**யுத்தம் தொடர்பாக மாக்சியவாதிகளின் நிலைப்பாடும் தந்தைநாட்டைப் பாதுகாப்பதும்**

தேசிய சுயநிர்ணய உரிமை ஜனநாயகக் கொள்கையில் ஒன்று. இது கொள்கையளவில் மற்றைய ஜனநாயக கொள்கைகளிலும் வேறான ஒன்றல்ல. 'உலக ஆதிக்கம்' ஏகாதிபத்தியக் கொள்கையின் சாராம்சமாகும். அந்தக் கொள்கையின் தொடர்ச்சியே ஏகாதிபத்திய யுத்தமாகும். ஒரு ஜனநாயகப் போராட்டத்தில் "தந்தை நாட்டைக் காப்போம்" என்பதை நிராகரிப்பதும் அதில் பங்குகொள்வதை நிராகரிப்பதும் முட்டாள்தனமேயொழிய அதற்கும் மாக்சியத்திற்கும் ஏதும் சம்பந்தமில்லை. ஓர் ஏகாதிபத்திய யுத்தத்தை "தந்தை நாட்டைக் காப்போம்" என்ற சுலோகத்தால் அலங்கரித்து அதற்கு ஜனநாயக யுத்தம் என்ற முலாம் பூசுவது தொழிலாளர்களை ஏமாற்றி பிற்போக்குப் பூர்சுவாக்களின் பக்கம் இழுப்பதற்காகும்.



படிப்பகம்

www.padippakam.com

OUR UNDER-STANDING OF THE NEW ERA

# புதிய சகாப்தத்தைப் பற்றிய எமது விளக்கம்

தலையங்கம் கீவ்ஸ்கியினுடையது. அவர் அடிக்கடி புதிய சகாப்தம் பற்றி பேசுவார். துரதிஸ்டவசமாக அவரது நியாயங்கள் தவறானவை.

இன்றைய யுத்தம் ஏகாதிபத்திய சகாப்தத்தின் பொதுவான சூழ்நிலைகளாலே உண்டானதென்று எங்களது கட்சித் தீர்மானம் கூறுகிறது. சகாப்தத்திற்கும் இன்றைய யுத்தத்திற்குமிடையேயுள்ள உறவு பற்றி நாமோர் சரியான மாக்சிய வரைவிலக்கணம் வரைந்திருந்தோம். ஒவ்வொரு தனித்தனி யுத்தத்தைப் பற்றியும் ஸ்தூலமான மதிப்பீட்டை மாக்சியம் வேண்டிநிற்கிறது. இது ஏன் ஒரு ஏகாதிபத்திய யுத்தமென்பதை விளங்கிக்கொள்வதற்கு முதலில் தவிர்க்கமுடியாதபடி வல்லரசுகளுக்குள்ளே வெடிக்கும் இந்த யுத்தத்தின் அரசியல் பின்விளைவுகள் முழுக்க முழுக்க பிற்போக்கானதும் ஜனநாயக விரோதமானதும் என்பதை விளங்கவேண்டும். 1789–1871 வரை ஜனநாயகத்திற்காகப் போராடிய இந்த வல்லரசுகள் ஏகாதிபத்திய சகாப்தத்தின் பொதுவான குணாம்சத்தால்; வளர்ச்சியடைந்த இந்த முதலாளித்துவங்கள், ஏகாதிபத்தியமாக உருமாற்றம் அடைந்துவிட்டன. கீவ்ஸ்கி வெளிப்படையாக இந்த சகாப்தத்திற்கும் இந்த யுத்தத்திற்குமிடையேயுள்ள உறவை திரிக்கிறார். அவர் கூறும் காரணங்களில் ஸ்தூலமென்பது தனியே சகாப்தத்தை மட்டும் ஆராய்வதாகும். சுருக்கமாகக் கூறுமிடத்து அதுவே அவரது தவறாகும்.

1789–1871 காலவரை சகாப்தம் ஐரோப்பாவுக்கு விசேட அர்த்தமுடையதாகும். அந்தக் காலத்துப் பொதுநிலைமைகளுக்கேற்ப அப்பொழுது பல தேசிய விடுதலை யுத்தங்கள் நடைபெற்றன. அதை விளங்காமல் ஒரு தேசிய விடுதலை யுத்தத்தையும் விளங்க முடியாது. அப்படியென்றால் அந்த



படிப்பகம்

www.padippakam.com



நாட்களில் நடைபெற்ற எல்லா யுத்தங்களும் தேசிய விடுதலை யுத்தங்களா? இல்லவே இல்லை. அப்படி எண்ணுவது முழுவதையும் முட்டாள்தனத்திற்குள் சுருக்குவதாகும். ஒவ்வொரு யுத்தத்தையும் பற்றி ஸ்தூலமாக ஆராய்வதற்குப் பதிலாக ஒவ்வொரு விடயங்களை அலம்புவதாகும். 1789–1871 காலங்களில் தேசிய யுத்தங்களும் நிகழ்ந்தன. பிற்போக்கு சாம்ராச்சியங்கள் மற்றைய தேசங்களை ஒடுக்குதற்கான யுத்தங்களும் நிகழ்ந்தன.

வளர்ச்சியடைந்த ஐரோப்பிய அமெரிக்க முதலாளித்துவங்கள் ஏகாதிபத்தியமென்று சொல்லப்படும் புதிய சகாப்தத்துள் புகுந்தன. இதிலிருந்து இப்பொழுது தனித்து ஏகாதிபத்திய யுத்தம் மாத்திரம்தான் நடக்கக்கூடியது என்று முடிவெடுக்கலாமா? அப்படி முடிவெடுப்பது முட்டாள்தனமாகும். அது எதைக் காட்டுமென்றால், ஒரு சகாப்தத்தில் நிகழக்கூடிய பலதொகை வித்தியாசம் வித்தியாசமான நிகழ்வுப் போக்குகளின் ஒட்டுமொத்தத்திலிருந்து, ஒரு பிரத்தியேக ஸ்தூலமான நிகழ்வுப் போக்கை, வித்தியாசப்படுத்திப் பார்க்க இயலாமையையே காட்டும். ஒரு சகாப்தத்தை ரத்தினச் சுருக்கமாக, ஏன் ஒரு சகாப்தம் என்கிறோமென்றால், அந்தக் காலங்களில் ஒரு தொகை வித்தியாசம் வித்தியாசமான நிகழ்வுப் போக்குகளும், யுத்தங்களும் நிறைந்ததாக இருக்கும். சில அந்த சகாப்தத்திற்குப் பொருத்தமான உதாரணங்களாக விளங்குவன. சில அப்படி அல்லாதன. சில பெரியவை. சில சிறியவை. சில வளர்ச்சியடைந்த நாடுகளுக்கு மட்டும் பொருந்துவன. மற்றையவை பின்தங்கிய நாடுகளுக்கு மட்டும் உரியன. இந்த ஸ்தூலமான பிரச்சினையைத் தட்டிக்கழிப்பது, கீவ்ஸ்கி செய்தது போல சகாப்தம் என்பதை பொதுவான வார்த்தை ஜாலத்துள் திணிப்பதாகும். சகாப்தம் என்ற எண்ணக்கருவை துஷ்பிரயோகம் செய்வதாகும். இவற்றை நிறுவுவதற்காக, பலவற்றுள்ளிருந்து ஓர் உதாரணத்தை எடுத்துக்கொள்கிறேன். முதலில் ஜேர்மனியில், சர்வதேசக் குழு என்று சொல்கின்ற ஓர் இடதுசாரிக்குழு, அவர்களது ஐந்தாவது வியாசத்தில் பிரேரித்தவைகளை எடுத்துக்கொள்வோம்.

(No-3 Bulletin of the Berne Executive



படிப்பகம்

www.padippakam.com



Committee-feb.29,1916) விடுதலையடைந்த ஏகாதிபத்திய சகாப்தத்தில் தேசிய யுத்தங்கள் நடைபெறக்கூடியவையல்ல. இந்தக் கூற்றை சமூக ஜனநாயக பத்திரிகையிலே ஆய்வுசெய்தோம். இங்கே கவனிக்கவேண்டியது என்னவென்றால், சர்வதேச இயக்கத்தை அவதானித்த ஒவ்வொருவரும் இந்தவிதமான தத்துவார்த்தப் பிரேரணையோடு நீண்ட காலம் பரிச்சயமுள்ளவர்களாக இருப்பர். நாம் இந்தவகையான கூற்றை 1916 வசந்தகால பேர்ண் நகர நிர்வாகசபை நீடித்த கூட்டத்திலேயே எதிர்த்தோம். ஒரு சின்னக்குழுகூட இப்படி திருப்பிச் சொன்னதோ ஏற்றதோ கிடையாது. கீவ்ஸ்கி கூறியபடி ஒரு சின்ன வினாகூட 1916 ஆகஸ்டில் யாராவது எழுதியோ கூறியோ இருக்கமாட்டார்கள்.

பின்வரும் காரணத்திற்காக இதை கவனிக்க வேண்டும். இதையோ இதைப்போன்றதையோபோல, ஏதாவது ஒரு தத்துவார்த்தப் பிரேரணையை முன்வைத்தால் நாங்கள் தத்துவார்த்தத் திசைதிருப்பலைப் பற்றிப் பேசலாம். தத்துவார்த்தப் பிரேரணையை முன்வைக்காத பட்சத்து நாம் சொல்வதை மட்டுப்படுத்தினோம். சகாப்தம் சம்பந்தமாக நமக்குள்ளே வித்தியாசமான வியாக்கியானம் இருக்கவில்லை. தத்துவார்த்த திசைதிருப்பமில்லை. ஆனால் கவனயீனமான வார்த்தைப் பிரயோகம்; சகாப்தம் என்ற பதத்தைத் தவறாக பாவித்ததாக எடுத்துக்கொண்டோம்.

இங்கே ஓர் உதாரணம். கீவ்ஸ்கி தனது கட்டுரையை பின்வரும் கேள்வியைக் கேட்பதன் மூலம் தொடங்கினார். செவ்வாய்க் கிரகத்தில் 10,000 ஏக்கர் நிலத்தை இலவசமாக எடுத்த மாதிரி சுயநிர்ணய உரிமையும் இல்லையா? இந்தக் கேள்விக்கு இப்போதைய சகாப்தத்தின் குணாம்சத்தின் அடிப்படையிலேயே ஸ்தூலமாக விடையளிக்கலாம். தேசிய அரசுகளை உருவாக்கும் சகாப்தத்தில் தேசிய சுயநிர்ணய உரிமையானது அன்றைய மட்டத்தில் உற்பத்திச் சக்திகளை மேலும் வளர்த்தெடுக்கும் ரூபமாகும். ஆனால் அது இப்பொழுது எதிர்மாறானதாகும். தேசிய அரசுகள் உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சிக்கு குந்தகமாக விளங்கும்



படிப்பகம்

சகாப்தம், தேசிய அரசுகளையும் முதலாளித்துவத்தையும் ஏற்படுத்திய சகாப்தத்திற்கும் தேசிய அரசுகள் பொறிவதும், முதலாளித்துவம் பொறிவதுமான சகாப்தத்திற்குமிடையே ஒரு பெரிய இடைவெளியுண்டு. இந்தப் பிரச்சினையை காலத்திற்கும் வெளிக்கும் அப்பால் விஸ்தரிப்பது மாக்சியத்திற்குப் பொருந்தாததாகும்.

இங்கே 'ஏகாதிபத்திய சகாப்தம்' என்பதை கேலிக்கூத்தாக்கியதைப் பார்க்கலாம். இந்தக் கேலிச்சித்திரத்திற்கு எதிராகப் போராடவேண்டும். ஏனெனில் இதுவே புதிய முக்கிய எண்ணக்கருவாகும். தேசிய அரசுகள் அபிவிருத்திக்குத் தடையாக வந்துவிட்டன என்று சொல்லுவதன் அர்த்தமென்ன? நாம் இங்கே ஜேர்மனி, இங்கிலாந்து, பிரான்சு போன்ற வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளையே கருத்திற் கொண்டுள்ளோம். இந்த நாடுகள் இந்த யுத்தத்தில் பங்குபற்றியதே, இந்த யுத்தம் ஏகாதிபத்திய யுத்தமானதற்கான முக்கிய காரணியாகும். மனித இனத்தின் இன்றுவரை முன்னணியில் நின்ற இந்த நாடுகளில் 1789–1871 வரை தேசிய அரசுகளின் உருவாக்கம் ஏற்பட்டு முற்றுப்பெற்று விட்டது. இந்த நாடுகளில் தேசிய விடுதலை இயக்கமென்பது திருப்பி மீட்கக்கூடாத இறந்தகாலமாகும். அந்த தேசிய விடுதலை இயக்கத்தை மீட்டெடுக்க முயற்சிப்பது படுபிற்போக்கான கற்பனாவாத முட்டாள் முயற்சியாகும். பிரான்சு, ஆங்கிலேய, ஜேர்மானிய தேசிய விடுதலை இயக்கங்கள் எப்பவோ முடிந்துபோனவையாகும். இந்த நாடுகளின் அடுத்த வரலாற்றுக் கடமை வேறொன்றாகும். விடுதலையடைந்த தேசங்கள் ஒடுக்குகின்ற தேசங்களாக உருமாற்றம் அடைந்து விட்டன. ஏகாதிபத்திய கொள்ளைக்கார நாடுகளாகிவிட்டன. இந்த நாடுகளில் முதலாளித்துவம் பொறிந்து கொட்டுப்படும் அந்தலைக்கு வந்துவிட்டன.

மற்றத் தேசங்கள் என்னமாதிரி ? கீவ்ஸ்கி விளங்காமல் திருப்பித் திருப்பிச் சொல்கிறார், மாக்சியவாதிகள் எந்த விடயத்தையும் ஸ்துாலமாகவே நோக்க வேண்டும் என்று. ஆனால் தானே அந்த

விதியைப் பிரயோகிப்பதில்லை. எங்களது வியாசத்திலே வேண்டுமென்றே ஓர் உதாரணத்தைக் கொடுத்திருந்தோம். ஆனால் கீவ்ஸ்கி அதிலே ஒரு பிழையையும் சுட்டிக்காட்டவில்லை, அப்படிக் கண்டுபிடித்திருந்தால்.

எங்களது வியாசத்தின் ஆறாவது பகுதியில் சுயநிர்ணய உரிமை பற்றி விளக்கும் பொழுது ஸ்தூலமாக வித்தியாசமான மூன்று நாடுகளை காட்டியிருந்தோம். ஒரு பொதுவான வியாசத்திலே எல்லா நாடுகளைப் பற்றியும் எழுதுதல் இயலாத காரியமாகும். முதலாவது ரகம் : வளர்ச்சியடைந்த நாடுகளான மேற்கு ஐரோப்பாவும் அமெரிக்காவும். இந்நாடுகளில் தேசிய விடுதலை இயக்கம் ஒரு கடந்தகாலம். இரண்டாவது ரகம் : கிழக்கு ஐரோப்பா. இந்நாடுகளில் தேசியவிடுதலை இயக்கம் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. மூன்றாவது ரகம் : காலனித்துவ அரைக்காலனித்துவ நாடுகள். இந்நாடுகளில் தேசிய விடுதலை இயக்கம் எதிர்காலத்தில் நடைபெறும்.

இது சரியா? பிழையா?. இதிலேயே கீவ்ஸ்கி தனது விமர்சனத்தை செய்திருக்க வேண்டும். தத்துவார்த்தப் பிரச்சினையின் சாராம்சத்தை அவர் காணவில்லை. அவர் எங்களது வியாசத்தின் ஆறாவது பகுதியில் கூறிய மேற்சொன்ன பிரேரணைகளை எதிர்க்கவில்லை. அவரால் எதிர்க்க முடியவில்லை. ஏனெனில் அவை சரியானவை. அவரது சகாப்தம் சம்பந்தமான பலபக்க சர்ச்சைகளிலே உடைவாளைத் தீட்டி வெட்டாத மனிதன் போல் காணப்பட்டார்.

V.இலியன் அபிப்பிராயத்தோடு ஒப்பிடுமிடத்து அவர் பின்வருமாறு எழுதினார். "பெரும்பான்மை ஐரோப்பிய நாடுகளில் தேசியப் பிரச்சினை இன்னும் தீரவில்லை."

அப்படியானால் பிரான்சு, ஸ்பானியா, இங்கிலாந்து, டச்சு, ஜேர்மனி, இத்தாலி போன்ற நாடுகளில் பதினேழாம், பதினெட்டாம், பத்தொன்பதாம் நூற்றாண்டுகளிலும் அதற்கு முன்னரும் தேசியப்

www.padippakam.com



பிரச்சினை தீரவில்லையா? கட்டுரையின் தொடக்கத்தில் ஏகாதிபத்திய சகாப்தம் பற்றிய எண்ணக்கரு திரிக்கப்பட்டு தேசிய விடுதலை இயக்கங்கள் பொதுவாக பூர்த்தியாகிவிட்டன என்று எழுதப்பட்டுள்ளது. ஆனால் குறிப்பாக வளர்ச்சியடைந்த மேற்கு ஐரோப்பிய நாடுகளில் மட்டும் அல்ல என்று எழுதப்பட்டிருக்கிறது. கட்டுரையின் முடிவிலே தேசியப் பிரச்சினை பிரகடனப்படுத்தப் பட்டதேயொழிய மேற்கத்திய நாடுகளில் அது முற்றுப்பெற்று முடியவில்லையென்று எழுதப்பட்டுள்ளது. இது ஒரு குழப்பக் கருத்தில்லையா?

மேற்கத்திய நாடுகளில் தேசியப் பிரச்சனை எப்பவோ முடிந்த பிரச்சினையாகும். இங்கிலாந்து, பிரான்சு, ஜேர்மனி போன்ற நாடுகளில் 'தந்தை நாடு' என்பது ஒரு மரண அத்தாட்சிப் பத்திரம். அது தனது வரலாற்றுக் கடமையைச் செய்து முடித்துவிட்டது. தேசிய இயக்கம் இப்பொழுது எதையும் முற்போக்காகச் செய்ய முடியாது. வெகுஜனங்களை அது புதிய பொருளாதார அரசியல் வாழ்வுக்கு உயர்த்தமுடியாது. வரலாற்றின் அடுத்த அடியெடுப்பு என்னவென்றால் நிலப்பிரபுத்துவத்திலிருந்தும் தந்தைவழி காட்டுமிராண்டித்தனத்திலிருந்தும் தேசிய முன்னேற்றத்திற்குப் போவதல்ல, கலாச்சாரமடைந்த அரசியல் விடுதலை பெற்ற தந்தை நாட்டை அமைப்பதல்ல. ஆனால் தந்தை நாட்டிலிருந்து உருமாறி அதாவது தந்தை நாடென்பது வாழ்ந்து முடிந்த கதையாகிவிட்டது. அது முதலாளித்துவத்தில் ஆக முற்றிப் பழுத்து சோசலிசத்திற்குத் தயாராகிவிட்டது.

கிழக்கு ஐரோப்பாவில் நிலைமை வேறுவிதம். உக்கிரேனையும் பைலோரசியாவையும் பொறுத்தமட்டில் செவ்வாய்க்கிரக வாழ்வுக் கனவாளர்கள்தான் அங்கே தேசியப் பிரச்சினை நடந்து முடிந்த பிரச்சினை என்று கூறுவர். அங்கே வெகுஜனங்கள் இப்பவும் தாய்ப்பாஷையையும் தங்களது இலக்கியங்களையும் முழுமையாகப் பாவிக்கவேண்டுமென்ற உணர்வோடு இருக்கிறார்கள். மூலை முடுக்குகளிலுள்ள விவசாயக் குடும்பங்களிலும் கூட இந்த உணர்வைக் காணலாம். முதலாளித்துவத்தின் வளர்ச்சிக்கான



படிப்பகம்

www.padippakam.com



நிலைமையும் பண்டப் பரிவர்த்தனையின் ஊடறுப்புக்கான நிலைமையும் இப்பவும் இருக்கின்றன. தந்தை நாடென்பது வரலாற்று ரீதியாக தனது மரண சாசனத்தை எழுதவில்லை. இங்கே "தந்தை நாட்டைக் காப்போம்" என்பது இப்பவும் ஜனநாயகத்தைக் காப்பதேயாகும். தனது தாய் மொழியைக் காப்பதாகும். ஒடுக்கும் தேசங்களுக்கு எதிராக தனது அரசியல் சுதந்திரத்தைக் காப்பதாகும். இங்கிலாந்து போன்ற நாடுகளின் மத்திய காலம் போன்ற அட்டூழியங்களுக்கு எதிராக தம்மை காப்பாற்றுவதாகும். பிரான்சு, ஜேர்மனி, இத்தாலி போன்றவை இந்த யுத்தத்திலே தந்தை நாட்டைக் காப்போமென்றால் அது பொய்கூறுவதாகும். ஏனெனில் அவர்கள் தங்கள் தாய்மொழியை காப்பாற்றுவதற்காகப் போராடவில்லை. தங்களது தேசத்தின் அபிவிருத்திக்காகப் போராடவில்லை. அவர்கள் தாங்கள் அடிமைகளை வைத்திருக்கும் உரிமைக்காகப் போராடுகிறார்கள். தங்கள் காலனிகளை வைத்திருக்கும் உரிமைக்காகப் போராடுகிறார்கள். தங்களது நிதி மூலதனத்தின் வெளிநாட்டுச் செல்வாக்கிற்காகப் போராடுகிறார்கள்.

காலனித்துவ அரைக்காலனித்துவ நாடுகளில் தேசிய விடுதலை இயக்கங்கள் இன்னமும் கிழக்கு ஐரோப்பாவிலும் பார்க்க இளமையாகவே இருக்கின்றன.

'வளர்ச்சியடைந்த நாடுகள்' என்பதும் 'ஏகாதிபத்திய சகாப்தம்' என்பதுமான சொற்கள் எதைச் செப்புகின்றன. ரசியா என்ன விசேட ஸ்தானத்திலே நிற்கின்றது. கீவ்ஸ்கியின் கட்டுரையின் E பகுதியிலே கூறப்படுவது. எங்கே தேசிய விடுதலை இயக்கம் ஒரு பொய்யான வார்த்தைஜாலம்? எங்கே உயிர்த்துடிப்போடும் முற்போக்கான நிதர்சனமாகவும் விளங்குகிறது? கீவ்ஸ்கி இது சம்பந்தமான எந்த விளக்கத்தையும் வெளிப்படுத்தவில்லை.



படிப்பகம்

www.padippakam.com

# பொருளாதார ஆய்வு என்றால் என்ன?

**WHAT IS ECONOMIC ANALYSIS?**

சுயநிர்ணய உரிமைக்கு எதிரானவர்களின் பலபக்க நியாயங்களின் மையக்கரு என்னவென்றால் அது முதலாளித்துவத்தின் கீழேயோ, ஏகாதிபத்தியத்தின் கீழேயோ சாதிக்க முடியாத ஒன்றாகும் என்பதாகும். 'சாதிக்க முடியாதது' என்ற சொல் அடிக்கடியும் பரவலாகவும் சரியான அர்த்தத்தோடு பிரயோகிக்கப்படுவதில்லை. அதனாலேதான் எங்களது வியாசத்திலே அழுத்தம் திருத்தமாகக் கூறினோம், சாதிக்க முடியாது என்பதற்கு சரியான விளக்கம் தேவை என்று. நாங்களும் அதனுள்ளே மட்டுப்படுத்தப்பட்டு அடங்கிவிடவில்லை. ஒரு விளக்கத்தையளிக்க நாம் பெரும் முயற்சி எடுத்தோம். எல்லா ஜனநாயக் கோரிக்கைகளும் ஏகாதிபத்தியத்தினுள்ளே சாதிக்க முடியாதவைகள்தான். அதன் தாற்பரியம் என்னவெனில் அரசியல் ரீதியாக அவை சாதிக்க முடியாதவைதான், அன்றேல் ஒரு தொகை தொடர்ச்சியான புரட்சிகள் இல்லாமல் அவை முழுமையாகச் சாதிக்க முடியாதவையாகும்.

இருந்தபோதும் பொருளாதார நோக்கில் சுயநிர்ணய உரிமை சாதிக்க முடியாத ஒன்று என்ற நிலைப்பாட்டில் நிற்பது அடிப்படையில் தவறாகும்.

இதுவே எங்களது விவாதமாகும். இதுவே எங்களது தத்துவார்த்த அபிப்பிராய பேதத்தின் அச்சாணியாகும். ஒரு கரிசனையான கலந்துரையாடலிலே இந்தப் பிரச்சனையையே எங்களை எதிர்ப்பவர்கள் கவனமாகக் கவனிக்க வேண்டும்

கீவ்ஸ்கி இதை எப்படிப் பார்க்கிறார் என்று பார்ப்போம்.

அவர் சொல்லும் சாதிக்க முடியாதது என்று சொல்வதை நாம் அரசியல் ரீதியாகச் 'சாதிப்பது கடினமானது' என்று



படிப்பகம்

அர்த்தப்படுத்துவதை அவர் திட்டவட்டகாக நிராகரிக்கிறார். அவர் கூறும் நேரடி விடை பொருளாதார ரீதியில் சாதிக்க முடியாது என்பதாகும். பண்ட உற்பத்தி முறையினுள்ளே எவ்வாறு கூலி உழைப்பால் காசு சேர்க்க முடியாதோ, அதே போலத்தான் ஏகாதிபத்தியத்தின் கீழ் சுயநிர்ணய உரிமையானது சாதிக்க முடியாததோ என்று நாம் கீவ்ஸ்கியைக் கேட்டபோது அவர் 'ஆம் அப்படித்தான்' என்று விடையிறுக்கிறார்.

நாம் இங்கே எதைச் சொல்ல வருகின்றோம் என்றால், இரண்டு சமூக விஞ்ஞானக் காரணிகளுக்குள்ளேயுள்ள முரண்பாட்டையே! 'ஏகாதிபத்தியம்' என்பதற்கும் 'தேசங்களின் சுயநிர்ணய உரிமை' என்பதற்கும் இடையே உள்ள முரண்பாட்டை. இதேபோன்ற தர்க்க முரண்பாடுதான் கூலி உழைப்பால் காசுக்கும் பண்ட உற்பத்திக்கும் இடையே உள்ள முரண்பாடு. ஏகாதிபத்தியம் என்பது சுயநிர்ணய உரிமையின் எதிர் மறுப்பாகும். இந்த இரண்டுக்குமிடையே சமரசத்தை மந்திரவாதிகளால் கூட ஏற்படுத்த முடியாது. மந்திரவாதி என்று நாம் பாவித்த சொல்லிற்குப் பயந்து கீவ்ஸ்கி எங்களை சுழற்றி வீசக் கூடும். நாம் அவருக்கு எளிதாக சுட்டிக் காட்டுவோம்– பொருளாதார ஆய்வை எங்கே பிரயோகிக்க வேண்டும் என்று அவருக்கு விளங்க வில்லை. தர்க்க முறையில் சரியாக சிந்திக்கத் தெரிந்தவர்களுக்கு பொருளாதார ஆய்விலோ, அரசியல் ஆய்விலோ தர்க்க முரண்பாடுகள் வர நியாயமில்லை. அரசியல் ஆய்வுக்குப் பதிலாக ஒவ்வாத முறையில் பொருளாதார ஆய்வைச் செய்து விட்டு அந்த முரண்பாட்டைச் சரியென்றும் சொல்லி வாதாடுகிறார்கள். பொருளாதார நிகழ்வுப் போக்கும், அரசியல் நிகழ்வுப் போக்கும் இரண்டுமே "சமூகக் காரணிகளாகும்". இதன் பலாபலனாக முதலில் நேரடியாகவும் வரையறுத்தும் பதிலளித்தார். பண்ட உற்பத்தி முறையிலே கூலி உழைப்பின் மூலம் எப்படி காசைச் சேர்க்க முடியாதோ அதேபோல 'சுயநிர்ணய உரிமையும்' சாதிக்க முடியாத ஒன்றாகும். கீவ்ஸ்கி ஒரு பொருளாதார ஆய்வைச் செய்யாது நேரத்தைப் போக்காட்டியதால் முக்கிய விடயத்தை நழுவ விட்டுவிட்டார்.

பண்ட உற்பத்தி முறையிலே எவ்வாறு கூலி உழைப்பின் மூலம் காசு சேர்க்க இயலாது என்பதை எவ்வாறு நிறுவலாம்? ஒரு பொருளாதார ஆய்வு மூலம்; பொருளாதார ஆய்வும், மற்றைய ஆய்வுகளைப் போலவே வெறும் தர்க்க முரண்பாடுகளை ஏற்காது; வெறும் பொருளாதார காரணிகளை மாத்திரம் தான் ஏற்குமேயொழிய, பொதுவான சமூகக் காரணிகளை ஏற்காது. அதிலிருந்து எடுக்கப்பட்டதே கூலி உழைப்பால் பணத்தைச் சேர்க்க முடியாததென்பது. மூலதனத்தின் முதலாவது பாடத்தில் எப்பவாவது எங்காவது அரசியலைப் பற்றியோ, அரசியல் வடிவங்களைப் பற்றியோ, சமூகக் காரணிகளைப் பற்றியோ கூறியது கிடையாது. அங்கேயுள்ள ஆய்வானது வெறுமனே பொருளாதார நிகழ்வுப் போக்குகளை, பண்டங்களின் பரிவர்த்தனையை, அதன் அபிவிருத்தியையே பிரயோகித்து ஆய்வு செய்யப்பட்டது.

கூலி உழைப்பினால் பணத்தைச் சேர்க்க முடியாதென்பது பொருளாதார ஆய்வுத் தர்க்க விவாதங்களினூடு காட்டப்படுகிறது. கீவ்ஸ்கி அண்ணளவாவது பொருளாதார ஆய்வினூடு காட்ட முனையவில்லை. அவர் ஏகாதிபத்தியத்தின் பொருளாதார சாரம்சத்தை அரசியலோடு சேர்த்துக் குழப்புகிறார். அவரது கட்டுரையின் முதலாவது பந்தியிலுள்ள முதலாவது வசனத்திலிருந்தே அது வெளிப்படையாகத் தெரிகிறது.

பின்வருவனவே அவரின் வசனங்கள்....

"முதலாளித்துவத்திற்கு முந்திய உற்பத்திக்கும், வாணிப வட்டிக்கு கடன் கொடுக்கும் மூலதனத்தினதும் சேர்க்கையே தொழிற்துறை மூலதனமாகும். வட்டிக்கு கடன் கொடுக்கும் மூலதனமே தொழிற்துறை மூலதனத்தின் வேலைக்காரனாக தொழிற்பட்டது. முதலாளித்துவம் எல்லாவிதமான மூலதனங்களையும் தனது ஆளுமைக்குள் உள்ளடக்கியது. இதிலிருந்து பிறந்ததே அதன் உயர்வடிவமான எல்லாவற்றையும் ஒருங்கிணைத்த நிதி மூலதனமாகும். எனவே முழு சகாப்தத்திற்குமே நிதிமூலதனத்தின் சகாப்தம் என்று பட்டம் சூட்டப்பட்டது. அதற்குப் பொருந்திப் போகும் வெளிநாட்டு அரசியல் முறையே ஏகாதிபத்தியமாகும்."

பொருளாதார ரீதியில் பார்க்கையில் இந்த வரைவிலக்கணமானது சதத்திற்கு உதவாதது. இரத்தினச் சுருக்கமாக பொருளாதார காரணிகளுக்குப் பதிலாக நாங்கள் வார்த்தை ஜாலங்களைப் பெற்றோம். இருந்தபோதும் இதிலே தலையைப் போட்டுடைப்பது முடியாத காரியமாகும். முக்கிய விடயமென்னவென்றால் கீவ்ஸ்கி ஏகாதிபத்தியம் என்பது வெளிநாட்டு அரசியல் கொள்கை முறை என்று பிரகடனப்படுத்துகிறார்.

முதலிலும் முக்கியமாகவும் இது காவுட்ஸ்கியினது பிழையான வாதத்தை திருப்பிச் சொல்லுவதாகும்.

இரண்டாவது, இது ஏகாதிபத்தியம் பற்றிய அரசியல், வெறும் அரசியல் ரீதியான வரைவிலக்கணம் மாத்திரம்தான். ஏகாதிபத்தியத்தை ஒரு வெளிநாட்டுக் கொள்கை முறையென்று வரையறுக்கும் பொழுது கீவ்ஸ்கி தான் சொன்ன ஏகாதிபத்தியம் பற்றிய பொருளாதார ஆய்வை விட்டுவிட்டு ஓடிவிட்டார். அதாவது சுயநிர்ணய உரிமை சாதிக்க முடியாததொன்று, ஏகாதிபத்தியத்தின் கீழ் பொருளாதார ரீதியில் சாதிக்க முடியாததொன்று என்று அவர் சொன்னதை —அதாவது கூலி உழைப்பின் கீழ் எப்படி பணத்தைச் சேர்க்க முடியாதோ அதேபோல ஏகாதிபத்தியத்தின் கீழும் சுயநிர்ணய உரிமை சாதிக்கமுடியாதது என்பதை— பொருளாதார ஆய்வு மூலம் நிறுவிக் காட்டாது விட்டுவிட்டு ஓடிவிட்டார். (கீவ்ஸ்கிக்கு தெரியும், இப்படிக் கூறுவது இங்கிதமற்ற முறையென்று). மார்க்ஸ் ஒரு விடயத்தை சொல்ல வரும் பொழுது அதன் முக்கிய விடயத்தை விட்டோடி வேறுவிதமாகச் சளாப்புவதை 'வஞ்சகமான' முறை என்கிறார்.)

இடது கன்னையோடிருந்த கருத்து முரண்பாட்டின் போது காவுட்ஸ்கி பிரகடனப்படுத்தினார், ஏகாதிபத்தியமென்பது வெளிநாடுகள் பற்றிய அரசியல் கொள்கையென்று. அதாவது மற்றைய நாடுகளை தன்னோடு இணைக்கும் கொள்கை. முதலாளித்துவத்தின் ஒரு திட்டவட்டமான காலகட்டத்திலேயோ, நிலையிலேயோ, அபிவிருத்தியிலேயோ ஏகாதிபத்தியத்தை அப்படி வரையறுப்பது தவறாகும்.

www.padippakam.com



காவுட்ஸ்கியினது கூற்று தவறானது. இது சொற்கள் மேல் தூங்கும் பிரச்சனையல்ல. 'ஏகாதிபத்தியம்' என்ற சொல்லை இந்த அர்த்தத்திலேயோ வேறெந்த அர்த்தத்திலேயோ பிரயோகிப்பதை நாம் தடைசெய்ய முடியாதுதான். ஒரு கலந்துரையாடலை நடாத்த விரும்பினால் கலைச் சொற்களை திட்டவட்டமாக வரையறுக்க வேண்டும்.

பொருளாதார ரீதியில் 'ஏகாதிபத்தியம்' (அல்லது நிதிமூலதன சகாப்தம்– இது வெறும் வார்த்தையல்ல) என்பது முதலாளித்துவ வளர்ச்சியின் அதி உச்சக்கட்ட வளர்ச்சியாகும். அங்கே உற்பத்தியானது வெகுவாரியாக உற்பத்தி செய்யப்பட்டு சுதந்திரமான சந்தைப்படுத்தும் போட்டியான ஏகாதிபத்தியத்திற்கு வழிதிறந்து விட்டுவிட்டது. இதுதான் ஏகாதிபத்தியம் பற்றிய பொருளாதார சாராம்சம். இந்த ஏகபோகமானது ட்றஸ்ற் களாக (Trusts- வியாபார ஸ்தாபனங்களின் இணைப்பாக), சிண்டிக்கேட் களாக (Syndicates- கூட்டுறவு ஸ்தாபனங்களாக) பிரதிபலிப்பதோடு எங்கும் நிறைந்த எல்லாம் வல்ல ராட்சத வங்கிகள் மூலப்பொருட்களைக் கொள்வனவு செய்வதோடு வங்கிமூலதனம் செறிவடைகின்றது.

ஏகபோக முதலாளித்துவத்தின் (ஏகாதிபத்தியம் என்பது ஏகபோக முதலாளித்துவம்) பொருளாதார மேற்கட்டுமானமானது ஜனநாயகத்திலிருந்து அரசியல் பிற்போக்குத்தனமாக உருமாறிவிட்டது. சுதந்திர வர்த்தகத்திற்குப் பொருத்தமாக ஜனநாயகம் இருந்தது. ஏகபோகத்திற்குப் பொருத்தமாக அரசியல் பிற்போக்குத்தனம் நிலவுகிறது. நிதிமூலதனம் மேலும் மேலும் ஆதிக்கத்தை நோக்கிப் போகிறதே ஒழிய சுதந்திரத்தை நோக்கியல்ல.

வெளிநாடு சம்பந்தமான கொள்கையை பொதுவான கொள்கையிலிருந்து பிரித்து உள்நாட்டுக் கொள்கையை வெளிநாட்டுக் கொள்கையால் ஈடுசெய்வதென்பது அடிப்படையில் தவறானது, மார்க்சியமல்லாதது, விஞ்ஞானமல்லாதது. வெளிநாட்டுக் கொள்கையிலென்றாலென்ன உள்நாட்டுக் கொள்கை



படிப்பகம்

யிலென்றாலென்ன ஏகாதிபத்தியம் ஜனநாயகத்தை இல்லாமல் பண்ணி பிற்போக்குத்தனத்தை நோக்கிப் போகும். இந்த நோக்கில் பார்க்குமிடத்து ஏகாதிபத்தியம் என்பது பொதுவாக ஜனநாயகத்தின் எதிர்மறுப்பாகும். நானாவித ஜனநாயகத்தின் எதிர்மறுப்பாகும். தனியே ஒரு ஜனநாயகக் கோரிக்கையை மட்டும் எதிர்மறுக்கவில்லை. அதாவது ஜனநாயகக் கோரிக்கைகளில் ஒன்றான தேசிய சுயநிர்ணய உரிமையை மாத்திரம் எதிர்மறுக்கவில்லை.

ஏகாதிபத்தியம் பொதுவாக நானாவித ஜனநாயகத்தையும் எதிர்மறுப்பதால் தேசிய இனப் பிரச்சினையையும் எதிர்மறுக்கிறது.(அதாவது தேசிய சுயநிர்ணயப் பிரச்சினையை) அது ஜனநாயகத்தை சீர்குலைக்க முனைகிறது. எனவே ஏகாதிபத்தியத்தின் கீழ் ஜனநாயகத்தை சாதிப்பதே மிகக் கஷ்டமான பிரச்சினை. (ஏகபோக முதலாளித்துவத்தின் ஆரம்பகாலத்தோடு ஒப்பிடுமிடத்து இது மிகக் கஷ்டமான பிரச்சினை). ஒரு குடியரசை ஏற்படுத்துவதோ, ஒரு மக்கள் சேனையை ஏற்படுத்துவதோ, அல்லது தேர்தல் மூலம் பிரதிநிதிகள் சபையை ஏற்படுத்துவதோ மிகக் கஷ்டமான பிரச்சினை. இங்கே ஜனநாயகத்தை பொருளாதார ரீதியிலோ வேறுவழியிலோ ஏற்படுத்த முடியாது என்ற பேச்சுக்கே இடமில்லை.

கீவ்ஸ்கி பொருளாதார ஆய்வு பற்றிய பொதுவான விளக்கமின்மையால் வழிதவறி அற்பவாதிகளைப் போல மக்களுக்கு விருப்பமில்லாமல் பிறநாடுகளை அபகரிப்பதை –அதாவது சுயநிர்ணய உரிமையை சீர்குலைப்பதை– மூலதனம் பரந்த இடங்களுக்குப் பரவுவதற்கோ விஷ்தரிப்பதற்கோ சமனாக யோசிக்கிறார்.

தத்துவார்த்தப் பிரச்சனைகளை அற்பவாத நோக்கோடு பார்க்கக் கூடாது.

பொருளாதார ரீதியில் ஏகாதிபத்தியம் என்பது ஏகபோக முதலாளித்துவம். ஏகபோகத்தை முழுமையாக நிலைநாட்டுவதில்

நானாவித போட்டியையும் இல்லாமல் செய்ய வேண்டும். ஒரு நாட்டின் சொந்த நாட்டுச் சந்தையில் உள்ள போட்டியை மாத்திரம் இல்லாமல் செய்வதல்ல, வெளிநாட்டுச் சந்தைகளில் உள்ள போட்டிகளையும் முழு உலகத்திலுமுள்ள போட்டிகளையும் இல்லாமல் செய்ய வெண்டும்.

இது பொருளாதார ரீதியில் சாத்தியமா?

நிதிமூலதன சகாப்தத்தில் பிறநாடுகளிலுமுள்ள போட்டிகளையுமா இல்லாமல் செய்ய முடியும்? கட்டாயமாக இல்லாமல் செய்யப்பட்டுள்ளது. மூலதனத்திலே தங்கி நிற்கும் எதிராளிகளை உருவாக்குவதன் மூலமும் மூலப் பொருட்களின் ஊற்றிடங்களை அபகரிப்பதன் மூலமும் ஈற்றில் தொழிற்துறையையே அபகரிப்பதன் மூலமும் நிர்மாணிக்கப்படுகிறது.

அமெரிக்க ட்றஸ்டுகள் (Trusts) ஏகாதிபத்தியத்திற்கும் ஏகபோக முதலாளித்துவத்திற்கும் சிறந்த உதாரணமாகும். அவர்கள் எதிரிகளை பொருளாதார ரீதியில் மாத்திரம் அழிக்கவில்லை. தொடர்ச்சியாக எதிரிகள் அடைக்கலம் புகுமிடமெல்லாம் அவர்களை அரசியல் ரீதியாக, சட்டத்தை மீறிய குற்றச் செயல்களினாலும் அழித்தார்கள். ட்றஸ்டுகள் வெறுமனே பொருளாதார ரீதியில் மாத்திரம் அழிப்பதில்லை என்று கொள்ளக் கூடாது. அவர்கள் பொருளாதார ரீதியில் மாத்திரம் அழித்ததிற்கான நிதர்சனமான உதாரணங்கள் ஏராளம். எதிரிகளின் வங்கிக் கடன்களை கிடைக்கவிடாமல் நிற்பாட்டும். ட்றஸ்டுகளின் சொந்தக்காரர்கள், வங்கியின் பங்குகளை வாங்குவதன் மூலம் வங்கியின் சொந்தக்காரர்களாக வந்து, எதிரிகளின் கடன் வசதியை நிற்பாட்டும். அவர்களின் மூலப் பொருட்களின் விநியோகத்தை நிறுத்தும். எப்படியெனில் இந்த ட்றஸ்டுகளின் (trust) சொந்தக்காரர்கள், பங்குகளை வாங்குவதன் மூலம், புகையிரதப் பாதைகளின் சொந்தக்காரர் ஆவதன் மூலம், விநியோகத்தை இடைநிறுத்தும். சில சந்தர்ப்பங்களில் இந்த ட்றஸ்டுகள் எதிரியை வீழ்த்துவதற்காக குறைந்த விலையில் விற்று, அதற்காக மில்லியன் கணக்கில் செலவழித்து, ஈற்றில்

எதிரியை அழித்து எதிரியின் நிறுவனத்தையும் மூலப் பொருள் விநியோக ஸ்தானத்தையும், சுரங்கங்கள் நிலபுலன்களையும் விலைக்கு வாங்கியுள்ளன.

வெறும் பொருளாதார ஆய்வுகளின் மூலமே, ஏகபோகங்களின் சக்தியையும் அவை விஸ்தாரம் அடைந்து செல்லும் விதத்தையும் காணலாம். இங்கே ஏகபோகங்கள் வெறும் பொருளாதார ரீதியிலேயே விரிவடைவதைக் காணலாம். தொழிற்சாலைகளையும் மூலப் பொருட்கள் உண்டாகும் இடங்களையும் அபகரிப்பதைக் காணலாம்.

பெரிய நிதி மூலதனங்கள் எப்பவுமே அரசியல் சுயாதீனமுள்ள மற்ற நாடுகளிலுள்ள போட்டியாளர்களை தொடர்ச்சியாக விலைக்கு வாங்குவதைக் காணலாம். பொருளாதார ரீதியில் இது பூரணமாகச் சாதிக்கக் கூடியது. அரசியல் ரீதியாக நாடுகளை இணையாமலே பொருளாதார ரீதியாக பூரணமாக இணைக்கலாம். இது பரந்த மட்டத்தில் நடைபெற்று வருகின்றது. ஏகாதிபத்திய பத்திரிகைகளில் அடிக்கடி காணலாம். ஆர்ஜன்டீனா உண்மையிலேயே பிரித்தானியாவின் வியாபாரக் காலனியாகும். இதுபோலவே போத்துக்கலும் பிரித்தானியாவின் குடிமையாகும். பொருளாதார ரீதியில் பிரித்தானிய வங்கிகளில் தங்குதல், பிரித்தானியாவுக்கு கடனாளியாக இருத்தல், பிரித்தானியா புகையிரதப் பாதைகளை, சுரங்கங்களை, நிலபுலன்களை அபகரித்திருத்தல் போன்றன இந்த நாடுகளின் அரசியல் சுயாதீனத்தைக் குலைக்காமல், பிரித்தானியா, பொருளாதார ரீதியில் தன்னோடு இணைத்துள்ளதன் அசைக்க முடியாத உண்மைகளாகும்.

தேசிய சுயநிர்ணய உரிமை என்பது அரசியல் சுயாதீனம். ஏகாதிபத்தியம் இந்தச் சுயாதீனத்தை சீர்குலைப்பது ஏனெனில், அரசியல் இணைப்பானது பொருளாதார இணைப்பை இலகுவாக்கும். மலிவாக்கும். (அதிகாரிகளை லஞ்சம் கொடுத்து விலைக்கு வாங்கலாம். சலுகைகளை பெற்றுக் கொள்ளலாம். சாதகமான சட்டங்களை உருவாக்கலாம். கஷ்டம்

குறைந்ததாக்கலாம்.... இன்னும் இன்னோரன்ன). ஏகாதிபத்தியம் ஜனநாயகத்தை பொதுவாக சின்ன அதிகாரிகள் குழுவால் இடம் பெயர்க்கும் (Oligarchy). ஆகவே ஏகாதிபத்தியத்தின் கீழ் சுயநிர்ணய உரிமை என்பது பொருளாதார ரீதியில் சாதிக்க முடியாத ஒன்று என்று சாதிப்பது வெறும் முட்டாள்தனமாகும்.

கீவ்ஸ்கி தத்துவார்த்தக் கஷ்டங்களை இலகுவாகத் தட்டிக் கழிக்கப் பார்க்கிறார். மாணவர்கள் குடித்து விட்டுக் கேளிக்கை செய்யும் பாஷைகளின் மூலம் பூசிமெழுகப் பார்க்கிறார். அவர் மேலும் எழுதுகிறார். "சர்வஜன வாக்குரிமை, எட்டு மணித்தியால வேலைநாள், குடியரசு போன்றவை தர்க்க ரீதியில் ஏகாதிபத்தியத்திற்கு ஒத்துவராத ஒன்று. ஏகாதிபத்தியம் குடியரசைப் பார்த்து சிரிக்கப் போவதில்லை, இவைகளைச் சாதிப்பது மிகக் கடினமாகும். எகாதிபத்தியம் குடியரசைப் பார்த்து சிரிக்கப் போவதில்லை என்ற இலகுவான கூற்றுக்களுக்கு நாம் எதிரானவர்களல்ல." முக்கியமில்லாத சொற்கள் சிலவேளைகளில் விஞ்ஞானபூர்வமான நையாண்டிகளுக்குச் சாயம் பூசுவதாக அமைந்துவிடும்.

இந்தக் கரிசனைபூர்வமான பிரச்சனையிலே எங்களுக்கு கொடுக்கப்பட்ட நக்கல் நையாண்டிகளிலே பொருளாதார அரசியல் ஆய்வு பற்றிய எண்ணங்களும் அமைந்துள்ளது. கீவ்ஸ்கியின் இலகுவான கூற்றுக்களிலே அப்படியான ஆய்வுகள் இல்லையென்றே கூறலாம். ஏகாதிபத்தியம் குடியரசைப் பார்த்துச் சிரிக்காது என்பதன் அர்த்தமென்ன? ஏன் அப்படிச் சொன்னார்?

முதலாளித்துவ சமுதாயத்திலுள்ள அரசியல் மேற்கட்டுமானத்திலே குடியரசும் ஓர் வடிவமாகும். ஏகாதிபத்தியம் குடியரசைப் பார்த்துச் சிரிக்காது என்ற கூற்று ஏகாதிபத்தியத்திற்கும் ஜனநாயகத்திற்குமிடையே முரண்பாடு இருப்பதையே காட்டுகிறது. இந்தக் கூற்றைப் பற்றிச் சிலவேளை கீவ்ஸ்கி சிரிக்காமல் விடவும் கூடும். இருந்த போதும் இதை நிராகரிக்க முடியாது.

மேலும் தொடர்கிறோம். ஏகாதிபத்தியத்திற்கும் ஜனநாயகத்திற்கும் இடையேயுள்ள முரண்பாடு எப்படியானது? இந்த முரண்பாடு தர்க்க ரீதியானதா, குதர்க்கமானதா? கீவ்ஸ்கி ஓயாமல் 'தர்க்க ரீதியான' என்ற சொல்லைப் பிரயோகிப்பது அவரது உள்ளத்திற்கும் வாசகர்களது உள்ளத்திற்கும் இடையே சமரசத்தை ஏற்படுத்துவதுதான். பொருளாதாரத்திற்கும் அரசியலுக்கும் இடையேயுள்ள சம்பந்தமென்ன என்பதுவே பிரச்சினையாகும். ஏகாதிபத்தியம் சில அரசியல் வடிவங்களை எடுப்பதற்கான, பொருளாதார சூழ்நிலை, பொருளாதார உள்ளடக்கங்களின் சம்பந்தம், என்ன? மனிதர்களது கலந்துரையாடல்களிலே எப்பொழுதும் தர்க்க முரண்பாடுகள் ஏற்படும் என்பது அர்த்தமில்லாத வெறும் கூறியது கூறலாகும் (tautology). இந்தக் கூறியது கூறலால் கீவ்ஸ்கி பிரச்சினையின் சாராம்சத்தையே தட்டிக்கழிக்கிறார்.

1. இரண்டு பொருளாதார நிகழ்வுப் போக்குகளுக்கிடையேயோ அன்றேல் பொருளாதாரப் பிரேரணைகளுக்கிடையேயுள்ள தர்க்க முரண்பாடோ?

2. அல்லது இரண்டு அரசியல் நிகழ்வுப் போக்குகளுக்கோ அன்றேல் அரசியல் பிரேரணைகளுக்கோ இடையேயுள்ள தர்க்க முரண்பாடோ?

3. அல்லது பொருளாதார அரசியல் நிகழ்வுப் போக்குகளுக்கோ பிரேரணைகளுக்கு இடையேயுள்ள முரண்பாடோ?

கலந்துரையாடலின் மையக் கருவாக விளங்குவது பொருளாதார ரீதியில் சாதிக்க முடியாது என்பதுவோ அல்லது சாதிக்கக்கூடியது என்பதுவோ இதுபோன்றதோ அன்றேல் வேறுவிதமான அரசியல் வடிவமோ!

கீவ்ஸ்கி பிரச்சினையின் மையக் கருவை தட்டிக் கழித்தாரோ இல்லையோ அவர்களுக்கு விளங்கியிருக்கக் கூடும் – ஏகாதிபத்தியத்திற்கும் குடியரசுக்கும் இடையேயுள்ள முரண்பாடு முதலாளித்துவத்தின் பின்னைய நாட்களின் பொருளாதாரத்திற்கும் (அதாவது ஏகபோக முதலாளித்துவத்திற்கும்) பொதுவாக

அரசியல் ஜனநாயகத்திற்கும் இடையேயுள்ள முரண்பாடென்பது. அதிகமான ஜனநாயகத் தேவைகளான வெகுஜனத் தேர்தல் மூலம் அதிகாரிகளைத் தேர்ந்தெடுத்தல், பூரண கூட்டம் கூடும் உரிமையோ, பிரதிநிதிகள் சபை கூடும் உரிமையோ குடியரசிலும் பார்க்க குறைவான முரண்பாட்டையே ஏற்படுத்தும் என்று கீவ்ஸ்கி ஒருநாளும் நிறுவமாட்டார். அல்லது அவர் விரும்பினால் இப்படிச் சொல்வோம் – ஏகாதிபத்தியம் அதைப் பார்த்து நன்றாகச் சிரிக்கும்.

எங்களது வியாசத்திலே நாம் என்ன தீர்மானத்தை முன்வைத்தோம். ஏகாதிபத்தியம் பொதுவாக நானாவித அரசியல் ஜனநாயகத்தையும் முரண்படுத்தும். அதாவது தர்க்க ரீதியில் முரண்படுத்தும் என்று கூறினோம். கீவ்ஸ்கி அந்தக் கூற்றைப் பார்த்துச் சிரிக்கவில்லை. ஏனெனில் அந்தக் கூற்று அவரது எல்லா தர்க்க நியாயங்களையும் நொருக்கிவிட்டது. அதற்காக நாம் என்ன செய்ய முடியும்? அவரது சில பிரேரணைகளை எவ்வாறு நாம் ஏற்றுக் கொள்ள முடியும்? அவர் இரகசியமாக ஏகாதிபத்தியம் குடியரசைப் பார்த்துச் சிரிக்காது என்கிறார்.

மேலும் நாம் கூறுவது ; ஏன் ஏகாதிபத்தியம் குடியரசைப் பார்த்துச் சிரிக்காது? எவ்வாறு ஏகாதிபத்தியம் தனது பொருளாதாரத்தை குடியரசோடு பிணைக்கும்?
கீவ்ஸ்கி அதைப் பற்றி யோசிக்கவே இல்லை? குடியரசு பற்றி ஏங்கெல்ஸ் கூறியவற்றை அவர்களுக்கு நினைவுகூர விரும்புகிறோம். இந்த அரசாங்க ரூபங்களைச் செல்வம் ஆதிக்கம் செலுத்துமோ? பிரச்சினை என்னவென்றால் பொருளாதாரத்திற்கும் அரசியலுக்கும் இடையேயுள்ள முரண்பாடு.

ஏங்கெல்ஸ் பதிலளிக்கிறார் – ஜனநாயகக் குடியரசானது தனது பிரஜைகளிடையே உத்தியோக பூர்வமாக செல்வந்தர் ஏழைகள் என்று வித்தியாசம் காட்டுவதில்லை. இங்கே செல்வமானது தனது சக்தியை மறைமுகமாக பிரயோகிக்கும். அதுவும் கட்டாயமாகப் பிரயோகிக்கும். நேரடியாக அதிகாரிகளுக்கு லஞ்சம் வழங்கி மோசடி செய்வதன் மூலமோ அன்றேல் அரசாங்கத்திற்கும் சரக்கு

பங்கிற்குமிடையே உறவை உண்டாக்குவதன் மூலமோ அது தனது சக்தியைப் பிரயோகிக்கும் (ஏங்கெல்ஸ்- குடும்பம், தனிச் சொத்து, அரசு ஆகியவைகளின் தோற்றம் என்பதிலிருந்து மேற்கோள்)

முதலாளித்துவத்தின் கீழ் உள்ள ஜனநாயகத்திலே சாதிப்பது பற்றிய பிரச்சனையின் பொருளாதார ஆய்வுக்கு இது ஓர் நல்ல உதாரணமாகும். ஏகாதிபத்தியத்தின் கீழ் சுயநிர்ணய உரிமையை சாதிப்பதும் இதன் ஒரு பகுதிப் பிரச்சினையாகும்.

ஜனநாயக் குடியரசு உத்தியோக பூர்வமாக பணக்காரரும் ஏழைகளும் சமன் என்று சொல்வதால் அது தர்க்க ரீதியில் முதலாளித்துவத்தை முரண்படுத்தும். பொருளாதாரத் துறைக்கும் அரசியல் மேற்கட்டுமானத்திற்கும் இடையேயுள்ள முரண்பாடே இது. ஏகாதிபத்தியத்திற்கும் குடியரசுக்கும் இடையேயுள்ள முரண்பாடும் இப்படித்தான். சுதந்திர வர்த்தகமானது ஏகபோகமாக மாறியதால் இந்த முரண்பாடானது அதலபாதாளமாகி அல்லது மேலும் கூர்ப்படைந்ததால் அரசியல் சுதந்திரத்தைச் சாதிப்பது இன்னும் கடினமாகி விட்டது.

அப்படியெனில் முதலாளித்துவம் எவ்வாறு ஜனநாயகத்தோடு சமரசம் செய்யும்? எங்கும் நிறைந்த எல்லாம் வல்ல மூலதனத்தை நோற்ற வழியால் பிரயோகிப்பதன் மூலம்.

இதற்கு இரண்டு வழிமுறைகள் உண்டு :

1. நேரடி லஞ்சம்

2. அரசாங்கத்தையும் சரக்குமுதல் பரிவர்த்தனையையும் இணைப்பது. (அதை எங்களது வியாசத்திலே கூறியிருந்தோம். முதலாளித்துவ அமைப்பு முறையிலே நிதிமூலதனமானது அரசாங்கத்தையும் அதன் அதிகாரிகளையும் சுதந்திரமாக ஊழல் செய்யும், அல்லது விலைக்கு வாங்கும்.)

ஒருதரம் முதலாளித்துவ பண்ட உற்பத்தியின் ஆதிக்கமோ பணத்தினது ஆதிக்கமோ ஏற்பட்டால் எந்த அரசாங்கத்தையும் எந்தவித ஜனநாயகத்தையும் விலைக்கு வாங்கலாம் அல்லது லஞ்சம் கொடுப்பதன் மூலம் ஊழல் செய்யலாம். (நேரடி

www.padippakam.com



லஞ்சத்தாலோ அன்றேல் பங்குச் சந்தையாலோ)

சிலவேளை கேட்கலாம் – முதலாளித்துவம் ஏகாதிபத்தியத்திற்கு வழிதிறந்து விட்டதால் அன்றேல் முன் ஏகபோக முதலாளித்துவத்தை ஏகபோக முதலாளித்துவத்தால் பிரதியீடு செய்வதால் என்ன மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன? பங்குச் சந்தைகளின் சக்தியானது வளர்ந்து வந்துள்ளது. தொழிற்துறை மூலதனத்தின் அதியுயர் ஏகபோகமான நிதிமூலதனம் வங்கிமூலதனத்தோடு ஒன்றுசேரும். பெரிய வங்கிகள் பங்குச் சந்தைகளை உறிஞ்சும். (ஏகாதிபத்தியத்தின் நூல்கள் கூறும் பெரிய வங்கிகள் பங்குச் சந்தைகளை விலைக்கு வாங்குவதால் பங்குச் சந்தைகளின் பாத்திரங்கள் வீழ்ந்து போகும். ஒவ்வொரு இராட்சத வங்கிகளும் பங்குச் சந்தைகளாகும்.)

மேலும் கூறுவோம் – பணமானது பொதுவாக எல்லா ஜனநாயகக் குடியரசுகளையும் லஞ்சத்தினாலோ பங்குச் சந்தைகளினாலோ விலைக்கு வாங்கவோ மோசடி செய்யவோ முடியுமென்றால்; கீவ்ஸ்கி தர்க்க முரண்பாட்டில் நழுவிவிழாமல் பெரிய செல்வத்தை வைத்திருக்கும் ட்றஸ்டுகளும் வங்கிகளும் மில்லியன் கணக்கான பணத்தை தம் ஆதிக்கத்திலேயே வைத்திருக்கும். அவைகள் வெளிநாட்டு நிதிமூலதனத்திலே ஆதிக்கம் செலுத்த முடியாது என்று எவ்வாறு அடம்பிடிக்க முடியும்? அதாவது அரசியல் சுயாதீனமுள்ள குடியரசுகளில் ஆதிக்கம் செலுத்த முடியாது என்று எவ்வாறு கூறமுடியும்?

நல்லது. வெளிநாட்டு அரசுகளில் ஊழல் செய்வது முடியாத காரியமா? பங்குச் சந்தைகளின் ஐக்கியம் சொந்த நாட்டு அரசாங்கத்தோடுதான் முடியுமா?

வாசகர்களுக்குத் தெரியும் – கீவ்ஸ்கி பத்து வசனத்தில் விளக்கக் கூடியதற்கு பத்துப் பக்கம் செலவழித்துள்ளார் என்று. நாங்கள் கீவ்ஸ்கியின் எல்லா வாதங்களையும் இங்கே ஆராயவில்லை. அங்கே குழப்பமடையாத வாதங்கள் ஒன்றுமில்லை. ஆராய்வதற்கான முக்கிய வாதங்கள் அங்கே ஒன்றுமில்லை. எஞ்சியவற்றை சுருக்கமாகக் கீழே ஆராய்வோம்.



படிப்பகம்

www.padippakam.com

THE EXAMPLE OF NORWAY

# நோர்வே உதாரணம்

நோர்வே அடைய முடியாத ஒன்று என்று சொல்லப்படும் சுயநிர்ணய உரிமையை மிக மூர்க்கமான ஏகாதிபத்திய சகாப்தத்தில் 1905 ஆம் ஆண்டு அடைந்தது. எனவே தத்துவார்த்த நிலையில் பேசுகையில் 'சாதிக்க முடியாதது' என்று பேசுவது முட்டாள்தனம் மாத்திரமல்ல பரிகாசத்துக்குமிடமானது.

கீவ்ஸ்கி நிராகரிப்பதோடு கோபத்தோடு எம்மை பகுத்தறிவுவாதிகள் (rationalist) என்கிறார். (இதற்கு என்ன செய்ய முடியும்) பகுத்தறிவுவாதிகள் (rationalist) சூக்குமமான பலபக்க கருத்துக்களை முன்வைப்பார்கள். நாம் ஓர் திட்டவட்டமான உதாரணத்தைக் காட்டியுள்ளோம். இருந்தபோதும் கீவ்ஸ்கி rationlist என்ற அன்னிய சொல்லைப் பாவிக்கிறார். இதை எவ்வாறு இங்கிதமாகச் சொல்லலாம்? அதே சந்தோசமற்ற மனநிலையோடு exractive (சாரம் உண்டாக்குதல்) என்ற மற்றொரு அன்னியச் சொல்லோடு கட்டுரையைத் தொடங்கி அந்தக் கட்டுரையை சாரம் காட்டும் ரூபத்திலேயே தந்துள்ளார்.

கீவ்ஸ்கி எங்களை ஏளனம் செய்கிறார். எங்களுக்கு ஒரு நிகழ்வுப் போக்கில் தோற்றமே முக்கியமொழிய சாராம்சம் முச்கியமில்லை என்று சொல்கிறார். நல்லது. இப்பொழுது நாம் உண்மைச் சாராம்சத்தை ஆய்வு செய்வோம்.

அவரது நிராகரிப்பு இப்படித் தொடங்குகிறது. ட்றஸ்டுக்கு எதிராக ஒரு கட்டளைச் சட்டம் கொணருவதால், அவைகளின் தடை; சாதிக்க முடியாத ஒன்று என்று நிறுவிவிட முடியாது (Trust-பல வியாபார ஸ்தாபனங்களின் சேர்க்கை) என்பது, பெரிய உண்மையாகும். இந்த உதாரணம் கீவ்ஸ்கிக்கு எதிராக வேலைசெய்யும் ஒரு சந்தோசமற்ற உதாரணமாகும். சட்டங்கள்



படிப்பகம்

அரசியல் உபாயங்களாகும். அதுவும் அரசியலாகும். அரசியல் நடவடிக்கைகள் பொருளாதார நிகழ்வுப் போக்கைத் தடைசெய்யமாட்டா. போலந்து என்ன அரசியல் வடிவத்தை எடுத்தாலும் ஜாரிஸ்ற் ரசியாவின் ஒரு பகுதியாய் இருந்தாலென்ன ஜேர்மனியின் ஒரு பகுதியாய் இருந்தாலென்ன அல்லது சுயாட்சியுள்ள பகுதியாய் விளங்கினாலென்ன அது ஏகாதிபத்திய சக்திகளின் நிதிமூலதனத்தில் தங்கி நிற்பதை தடைசெய்யவோ அன்றேல் அதிலிருந்து விலகி நிற்கவோ முடியாது அல்லது அந் நாட்டிலுள்ள தொழிற்சாலைகளின் பங்குகளை மூலதனம் வாங்குவதைத் தடைசெய்ய முடியாது.

**நோர்வே உதாரணம்**

1905 நோர்வே அடைந்த சுதந்திரம் அரசியலில் மட்டும்தான். அந்தச் சுதந்திரம் பொருளாதாரத்தில் தங்கிநிற்பதைப் பாதிக்காது. அந்தச் சுதந்திரத்திரத்திற்கு அந்த நோக்கமுமில்லை. எங்களது வியாசத்திலே இந்த முக்கிய புள்ளியை மட்டும் கூறியிருந்தோம். நாங்கள் சுட்டிக் காட்டியிருந்தோம், சுயநிர்ணய உரிமை அரசியலை மாத்திரம் இலக்காக் கொண்டுள்ளதென்று. ஆகவே இங்கே பொருளாதார ரீதியில் சாதிக்க முடியாததென்ற பிரச்சினையைக் கிளப்புவது பிழையானது. இதை நிராகரித்து கீவ்ஸ்கி ஓர் உதாரணத்தைச் சுட்டிக் காட்டுகிறார். பொருளாதாரத்திற்கு எதிரான அரசியல் தடைகள் சக்தியற்றவையென்று சுட்டிக்காட்டுகிறார். என்ன விதமான நிராகரிப்பு!

அவர் மேலும் தொடர்கிறார்... "முதலாளித்துவத்தின் பொதுவான அபிவிருத்தியினுள்ளே உற்பத்தியானது ஒரே இடத்தில் செறிவாக்கப்படுவதோடு மையப்படுத்தவும் செய்யும் என்ற மார்க்சினது கூற்றை, பெரிய தொழிற்சாலைக்கு ஈடாக, ஒன்றோ அன்றேல் பல சின்ன தொழிற்சாலைகள் இருப்பது நிராகரிக்காது."

மீண்டும் அவர் தேர்ந்தெடுத்த பரிதாபமான உதாரணமானது சாராம்சத்திலிருந்து வாசகர்களையும் எழுத்தாளரையும் திசைதிருப்ப எடுத்த உதாரணமாகும். நாங்கள் தொடர்ந்து சொல்லுவோம், முதலாளித்துவத்தின் கீழே கூலி உழைப்பானது

**நோர்வே உதாரணம்**

பணத்தைச் சேர்க்க முடியாததைப் போல சுயநிர்ணய உரிமையும் பொருளாதார ரீதியில் சாதிக்க முடியாததொன்றென்று கூறுதல் தவறாகும். அப்படிச் சாதிக்கலாம் என்று ஒரு சின்ன உதாரணம் கூடக் காட்டப்படவில்லை. இந்த நிலைப்பாட்டில் நாங்கள் சரியென்பதை கீவ்ஸ்கி மௌனமாய் ஒத்துக்கொண்டு சாதிக்க முடியாததென்பதற்கு வேறு வியாக்கியானம் கூறுகிறார்.

அதை அவர் ஏன் நேரடியாகச் செய்யவில்லை? ஏன் அவர் ஒளிவுமறைவின்றியும் ரத்தினச் சுருக்கமாகவும் முறைப்படுத்திக் கூறவில்லை. சுயநிர்ணய உரிமை சாதிக்க முடியாத ஒன்றாக இருந்தாலும் கூட அது முதலாளித்துவத்தின் கீழ் சாதிக்க முடியாதது. ஆனால் அது அபிவிருத்திக்குத் தடையாவதால் அது பிற்போக்கானதும் விதிவிலக்கானதுமென்று ஏன் அவர் வெளிப்படையாகக் கூறவில்லை.

அவர் அப்படி கூறவில்லையெனில் அப்படி தெளிவாக முறைப்படுத்திக் கூறினால் அது இவரையே அம்பலப்படுத்து மாதலால் அதைச் சமரசம் செய்ய முயன்றுள்ளார்.

பொருளாதாரச் செறிவின் விதியைப் பற்றியும் சின்ன உற்பத்தி முறைகளை பெரிய உற்பத்தி முறைகள் வென்றதைப் பற்றியும் எங்களது வேலைத்திட்டத்திலே அங்கீகரித்ததோடு அதைப் பற்றி எழுதியுமுள்ளோம். எங்கும் அரசியல் அன்றேல் அரசுச் செறிவாக்கம் பற்றிய விதி அங்கீகரிக்கப்படவில்லை என்பதை கீவ்ஸ்கி ஒத்துக் கொண்டுள்ளார். அப்படியொரு விதியிருந்தால் கீவ்ஸ்கி ஏன் எங்களின் வேலைத்திட்டத்தில் சேர்க்கும்படி யோசனை தெரிவிக்கவில்லை. அரச செறிவாக்கம் என்ற புதிய சரியான ஒன்றை; அவர் கண்டுபிடித்த பின்பும், அதன் நடைமுறை முக்கியத்துவத்தினால் அதைவிட்டால்; எங்களது வேலைத் திட்டம் தவறோடு கூடியதாகி விடுமென்பதால், பூரணமற்ற, பிழையான வேலைத் திட்டத்தை நாங்கள் வெளியிட, அவர் அனுமதித்தது சரியாகுமா?

நோர்வே
உதாரணம்

கீவ்ஸ்கி அப்படியொரு விதியை முறைப்படுத்திக் கூறவில்லை. எங்களது வேலைத்திட்டத்தில் அதைச் சேர்க்கும்படி அவர் யோசனை கூறவில்லை. ஏனெனில் தெளிவற்ற உணர்வோடு அவர் அதைச் செய்திருந்தால், அவர் தன்னைத் தானே சிரிப்புக்குரிய மனிதனாக்கியிருப்பார். மகிழ்ச்சி தரக்கூடிய இந்த ஏகாதிபத்திய பொருளாதாரத்தைப் பற்றி வெளிப்படையாகச் சொல்லியிருந்தால் எல்லோரும் சிரிப்பார்கள். அதாவது பெரியளவு உற்பத்திமுறை சின்ன உற்பதிகளை இல்லாமல் செய்யும் விதிக்குச் சமாந்தரமாக இன்னொரு விதியுண்டு. அதாவது பெரிய தேசங்கள் சின்ன தேசங்களை இல்லாமல் செய்யும் என்ற விதி (இது முந்திய விதியோடு தொடர்புடையது அல்லது இரண்டும் அக்கம் பக்கம் நிலவுவது.)

இதை விளக்குவதற்காக கீவ்ஸ்கியை ஒரு கேள்வி கேட்கலாம் ஏன் பொருளாதாரவாதிகள் நவீன ட்றஸ்டுகளும் பெரிய வங்கிகளும் உருக்குலையும் என்று சொல்வதில்லை. (மேற்கோள் அடையாளம் இல்லாமல்) அல்லது அவை உருக்குலைவதற்கான சாத்தியக் கூறுகள் பற்றிப் பேசுவதில்லை. ஏகாதிபத்தியப் பொருளாதாரவாதிகள் (மேற்கோள் அடையாளத்தினுள்) பெரிய தேசங்கள் சின்னஞ் சின்னனாகச் சிதறும் என்று சொல்லக் கடைமைப்பட்டவர்கள். இது நடக்கக் கூடியதும் சாதிக்கக் கூடியதும். இது பொதுவானது மாத்திரமல்ல உதாரணமாக ரசியாவிலிருந்து சிறிய தேசங்கள் பிரிவது சாத்தியம் (தயவு செய்து கூர்ந்து கவனிக்கவும் –கீவ்ஸ்கியின் கட்டுரை இரண்டாவது பாடம்.)

கடைசியாக மிக நீளமாக எழுதிய எங்களது எழுத்தாளருக்கு எச்சரிக்கை செய்து பின்வருவனவற்றைச் சொல்கிறோம். பெரிய மட்ட உற்பத்தி முறை சிறியவற்றை இல்லாமல் செய்கின்றன என்பதை நாம் எல்லோரும் ஏற்றுக் கொள்கிறோம். பெரிய உற்பத்திக்குப் பதிலாகச் சின்ன உற்பத்தி முறை நிலவுவது பிற்போக்குத்தனமான நிகழ்வுப் போக்கு என்று சொல்ல நாம் ஒருவரும் பயப்படவில்லை. ஆனால் சுயநிர்ணயத்தின் எதிரிகள் எவரும் சுவீடனிலிருந்து நோர்வேபிரிந்தது பிற்போக்குத்தனமானது

என்று சொல்லவில்லை. 1914 இல் இருந்தே இந்தப் பிரச்சினையை எங்களது பத்திரிகைகளில் எழுதியுள்ளோம்.

கைவேலை இயந்திரங்கள் தொடர்ந்து இருந்திருந்தால் பெரியளவு உற்பத்திமுறையைச் சாதித்திருக்க முடியாது. இயந்திரங்கள் உருக்குலைந்து பின் கைவேலை உற்பத்தி வருவதை எண்ணுவதே முட்டாள்தனம். பெரிய சாம்ராச்சியமாகும் ஏகாதிபத்தியத்தின் முனைப்பு சாதிக்கப்பாலதுதான். தனித்துவமான பூரண சுயாதீனமான அரசுகளோடு ஏகாதிபத்திய ஐக்கியம் நடைமுறையில் எத்தனை முறை சாதிக்கப்பட்டு விட்டது. அப்படியான ஐக்கியங்கள் மேலும் நடக்கக் கூடியன. வெறுமனே பொருளாதாரக் கூட்டாக மாத்திரமல்ல ஏகாதிபத்திய யுத்தத்திலே இராணுவ ஐக்கியமாகவும் நிகழக்கூடியது. ஏகாதிபத்தியத்தினுள்ளே தேசியப் போராட்டங்கள், தேசிய யுத்தப் பயங்கரவாதங்கள், தேசங்கள் பிரிவது பூரணமாகச் சாதிக்கக் கூடியதோடு நடைமுறையிலும் உண்டு. முதலாளித்துவ வளர்ச்சியையும் வெகுஜனங்களுக்குள்ளே ஜனநாயகத்திற்கான இயக்கங்களையும் ஏகாதிபத்தியத்தால் தடுத்து நிறுத்திவிட முடியாது. எதிர்மாறாக ஜனநாயக வாஞ்சைக்கும் ட்றஸ்டுகளின் ஜனநாயக விரோத நடவடிக்கைகளுக்கும் இடையேயான முரண்பாடு இன்னும் முக்கியத்துவத்துக்கு வந்து இன்னும் அழுத்திச் சொல்லப்படும்.

ஏகாதிபத்திய பொருளாதாரவாதம் மாத்திரம்தான் அதாவது கேலிக்கூத்தாகிய மார்க்சிசம் மாத்திரம்தான் ஏகாதிபத்தியக் கொள்கையின் பிரத்தியேகத் தன்மையை உதாசீனம் செய்யும். ஒரு பக்கத்தில் இன்றைய ஏகாதிபத்திய யுத்தம் உதாரணங்களைத் தருகின்றன. எப்படி நிதிமூலதனத்தின் கால்விலங்கு கைவிலங்குகளின் சக்தியும் பொளாதார இலாப நோக்கும் சிறிய சுயாதீனமான அரசுகளை வலிந்து யுத்தத்திற்குள் இழுத்துவிட்டன என்பதைப் பாருங்கள்! (பிரித்தானிய போத்துக்கல்). மறுபக்கத்தில் ஏகாதிபத்திய எஜமானனிலும் பார்க்கப் பொருளாதார ரீதியிலும் அரசியல் ரீதியிலும் பலவீனமான சிறிய தேசங்களின் ஜனநாயக உரிமைகளைச் சீர்குலைத்ததால் அவை எஜமானனுக்கு எதிராகக் கிளர்ந்து எழுந்தன (உதாரணம் அயர்லாந்து). அன்றேல்

முழுப்படைகளும் எஜமானனுக்கு எதிராக எதிரியின் பக்கம் சரணடைந்தன (உதாரணம் செக்கோஸ்லவாக்கியா). இந்தச் சூழ்நிலையில் நிதிமூலதனத்தின் நோக்கில் —ஏன் சிலவேளைகளில் ட்ரஸ்டுகளின் லாபத்திற்கு, அவைகளின் ஏகாதிபத்திய கொள்கைக்கு, அவைகளின் யுத்தத்திற்கு ஏதுவாக— சாதிக்கக் கூடியது ஒன்றுதான். சின்னச் சின்னத் தனிப்பட்ட தேசங்களுக்கு எவ்வளவு ஜனநாயக சுதந்திரம் வழங்க முடியுமோ அவ்வளவுக்கு அவ்வளவு வழங்குவதுதான், எவ்வளவு அரசியல் சுதந்திரம் வழங்க முடியுமோ அவ்வளவு வழங்குவதுதான். ஏனெனில் சொந்த இராணுவ தலையீடுகள் ஆபத்தைத்தான் கொண்டு வரும். இந்த அரசியல் மூலோபாய உறவுகளின் தன்மைகளை குறைத்து மதிப்பிட்டு வெறுமனே எழுந்தமானத்தில் ஏகாதிபத்தியம் என்று கிளிப்பிள்ளைப் பாடம் சொல்லுவது மாக்சியம் ஆகாது.

நோர்வே
உதாரணம்

நோர்வேயைப் பற்றிக் கீவ்ஸ்கி சொல்லுகையில் முதலாவதாகச் சொல்கிறார், நோர்வே எப்பொழுதும் சுயாதீனமான அரசென்று. இது உண்மையன்று. அரசியல் பிரச்சினைகளைக் கரிசனையோடு பாராத அவரது மிக இலகுவான விளக்கமாகும். நோர்வே 1905 க்குமுன் அதிகளவு பிரதேசசுயாட்சி உரிமைகளை அனுபவித்தாலும் ஒருநாளும் ஒரு சுதந்திர நாடாக இருக்கவில்லை. சுவீடன் நோர்வேயின் அரசியல் சுதந்திரத்தை அது பிரிந்த பின்புதான் அங்கீகரித்தது. நோர்வே ஒரு சுதந்திர நாடாக இருந்திருந்தால் ஒக்டோபர் 26ம் திகதி 1905 ஆண்டு சுவீடன்; தான் நோர்வேயை சுதந்திர நாடாக அங்கீகரிப்பதாக மற்றைய நாடுகளுக்கு அறிவிக்க வேண்டிய அவசியமில்லை.

இரண்டாவதாக, நோர்வே கிழக்கு நாடுகளோடு ஐக்கியப்படப் போவதாகவும் சுவீடன் மேற்கு நாடுகளோடு போகப் போவதாகவும் கூறி இதை நிறுவுவதற்கு பல கூற்றுக்களை வெளியிட்டுள்ளார். அதாவது பிரித்தானிய, ஜேர்மன் நிதிமூலதனத்தின் செயற்பாடு உள்ளதாகக் கூற்று வெளியிட்டிருக்கிறார். இந்தக் கூற்றுக்களிலிருந்து எடுத்த முடிவானது அவர் கூறும் நோர்வேக்குப் பொருந்தும்.

அங்கே பல ஏகாதிபத்தியப் பொருளாதாரவாதத்திற்கான உதாரணங்களைக் காணலாம். எங்களது வியாசத்தில் நாம் கூறியிருக்கிறோம், நிதிமூலதனமானது எந்த நாட்டையும், ஏன் சுதந்திர நாட்டையும் ஊடறுக்கவல்லதென்று. நிதிமூலதனத்தின் நோக்கிலே "சுயநிர்ணய உரிமை" சாதிக்க முடியாத ஒன்றென்று சொல்லுவது வீணே குழம்பிப் போவதாகும். எங்களது பிரேரணையிலே பல புள்ளிவிபரங்களைக் காட்டியிருந்தோம். நோர்வே பிரிவதற்கு முன்னர் நிதிமூலதனத்தின் தலையீடு எப்படி இருந்ததென்றும், நோர்வே பிரிந்த பின்பு அதன் தலையீடு எப்படி இருந்ததென்றும் காட்டியிருந்தோம். இந்தத் தரவுகள் எங்களது பிரேரணைக்கு எதிராகவா விளங்குகின்றன!

அரசியல் பிரச்சினைகளைக் கருத்தில் கொள்ளாது நிதிமூலதனத்தைப் பற்றி சுற்றிவளைத்துப் பேசுவதுதானா— அரசியற் கலந்துரையாடல் முறை?

இல்லை. பொருளாதாரவாதத்தின் பிழையான தர்க்கமுறையினால் அரசியற் பிரச்சினைகள் அழிந்து விடாது. பிரித்தானிய நிதிமூலதனத்தின் தாக்கம் நோர்வேயில்; நோர்வே பிரிய முன்னரும். பிரிந்த பின்னரும் இருந்தது. ஜேர்மன் நிதிமூலதனம்; போலந்து ரசியாவிலிருந்து பிரிய முன்னரும், பிரிந்த பின்னரும்; போலந்திலே வேலை செய்தது. போலந்து என்ன அரசியல் அந்தஸ்தை அனுபவித்தாலும் நிதிமூலதனத்திற்கு ஒன்றும் ஏற்படவில்லை. இது ஓர் சின்ன விடயமாகும். மீண்டும் மீண்டும் அலட்டிக் கொள்வானேன். ஆனா, ஆவன்னாவையே மறந்தால் நாம் என்ன செய்ய முடியும்!

இது நோர்வேயின் அரசியல் அந்தஸ்திற்கு ஏதும் உதவுமோ? நோர்வே சுவீடனின் ஒரு பகுதியாக இருந்திருந்தால்? பிரிவினைப் பிரச்சினை தொழிலாளரது மனோநிலையாலா எழுந்தது. கீவ்ஸ்கி இந்தப் பிரச்சினைகளைத் தட்டிக்கழிக்கிறார். ஏனெனில் இவைகள் பொருளாதாரவாதிகளின் உச்சியில் கடுமையாகத் தாக்குகின்றன. ஆனால் இந்தப் பிரச்சினைகள் மீண்டும் மீண்டும் எழுகின்றன. உயிர்த்துடிப்போடு எழுகின்றன. வாழ்க்கையும் இந்தப்

பிரச்சினையைக் கிளப்புகின்றது. ஒரு சுவீடிஸ் தொழிலாளி நோர்வேயின் பிரிந்து செல்லும் உரிமையை அங்கீகரிக்காமல் சமூக ஜனநாயகக் கட்சியின் அங்கத்தவராக இருக்கலாமோ? அப்படி இருக்க முடியாது.

நோர்வே உதாரணம்

சுவீடிஸ் பிரபுக்களுக்கு நோர்வேயோடு யுத்தம் வேண்டும். பாதிரிமார்களுக்கும் அப்படித்தான். கீவ்ஸ்கி; நோர்வே மக்களின் வரலாற்றை படிக்க மறந்தால்; உண்மை மறைந்து போகாது. சமூக ஜனநாயகக் கட்சியின் அங்கத்தவராக இருக்கும் சுவீடிஸ் தொழிலாளி பிரிவினைக்கு எதிராக வாக்களிக்கும்படி நோர்வே தொழிலாளியைத் தூண்டலாம். (நோர்வே பிரிவதற்கான மக்களின் கருத்தறிய 1905 ஆகஸ்ட் 13 இல் வாக்கெடுப்பு நிகழ்ந்தது. 368,200 வாக்குகள் பிரிவினைக்காகவும் 184 வாக்குகள் பிரிவினைக்கு எதிராகவும் விழுந்திருந்தது. 80 வீதமான மக்கள் வாக்களிப்பில் கலந்து கொண்டிருந்தனர்.) ஆனால் ஒரு சுவீடிஸ் தொழிலாளி சுவீடிஸ் பிரபுக்களைப் போலவும் பூர்சுவாக்களைப் போலவும் நோர்வேயின் பிரிந்து போகும் உரிமையை நோர்வே மக்களுக்கே விடவில்லையென்றால், சுவீடிஸ்காரர்களின் கருத்து எப்படியிருந்தாலும் பரவாயில்லை, அவர் ஒரு சமூக சோவனிஸ்டும் அயோக்கியனுமாவர். சமூக ஜனநாயகக் கட்சி அவரை அங்கத்தவராக வைத்திருக்கக் கூடாது.

கட்சி வேலைத்திட்டத்தின் ஒன்பதாவது பந்தி அப்படித்தான் செப்புகிறது. ஏகாதிபத்தியப் பொருளாதாரவாதிகள் இந்தப் பந்தியிலிருந்து துள்ளிப் பாயப் பார்க்கிறார்கள். கனவான்களே! சோவனிசப் பட்டத்தை ஏற்றுக் கொள்ளாமல் இந்தப் பந்தியிலிருந்தும் துள்ளிக் குதிக்கமுடியாது.

நோர்வே தொழிலாளி என்ன செய்ய வேண்டும்? ஒரு சர்வதேசவாதி என்றளவில் பிரிவினைக்காக வாக்களிப்பதா அவரது கடமை? கட்டாயம் இல்லை. அவர் பிரிவினைக்கு எதிராக வாக்களித்தால் மாத்திரம்தான் சமூக ஜனநாயகக் கட்சிக்குள் இருக்கமுடியும். அன்றேல் நோர்வேயின் பிரிவினையை எதிர்க்கும்

www.padippakam.com



சுவீடிஸ் கறுப்பு நூற்றுவர் (Black-Hundred) தொழிலாளர்களோடு ஒத்துப்போய். அன்றேல் உளவாளியாகப் போய் எதிர்த்து வாக்களித்தால் மாத்திரம்தான் சமூக ஜனநாயகக் கட்சி அங்கத்தவர் என்ற முறையில் தனது கடமையைக் காட்டிக் கொடுத்தவர் ஆவார்.

சிலர் நோர்வே தொழிலாளர் நிலைப்பாட்டுக்கும் சுவீடிஸ் தொழிலாளர் நிலைப்பாட்டுக்கும் இடையேயுள்ள சின்ன வித்தியாசத்தைப் பார்க்க மறுக்கிறார்கள். இந்த ஸ்தூலமான அரசியல் பிரச்சினையை தட்டிக்கழிப்பவர்கள் தம்மைத் தாமே அம்பலப்படுத்துகிறார்கள். நிலைப்பாடு எடுக்காத மௌனிகளும் பெருமூச்சோடு வெளிவருபவர்களும் சரணாகதி அடைந்தவராவார்.

நோர்வே பிரச்சினை ரசியாவிலும் எழும் என்பதை நிறுவுவதற்காக வேண்டுமென்றே இந்தப் பிரேரணையைப் பிரேரித்தோம். இராணுவ நோக்கிலும் மூலோபாய நோக்கிலும் இன்றைய சூழ்நிலைமைகளிலே ஒரு பிரிந்த போலந்து அரசு கூட உண்டாவதற்கு இன்று சாத்தியக் கூறுகள் இருக்கின்றன. கீவ்ஸ்கி அதைப்பற்றி கலந்துரையாட வேண்டும் என்று சொல்லி விட்டு மௌனியாக இருக்கிறார்.

எங்களை மேலும் சொல்ல விடுங்கள். பின்லாந்து கூட வெறும் இராணுவ நோக்கிலும் மூலோபாய நோக்கிலும் ஒரு சிலபல இன்றைய ஏகாதிபத்திய யுத்தத்தின் விளைவாக (உதாரணமாக சுவீடன் ஜேர்மனியோடு சேர்ந்து ஜேர்மனிக்கு அரைவாசி வெற்றி கிடைத்தால்) ஒரு தனிநாடக பிரிந்து போகமுடியும். இங்கே நிதிமூலதனத்தின் ஒரு சின்ன நடவடிக்கையையும் சீர்குலைக்காமலும் சாதிக்க முடியாத பின்லாந்து புகையிரதப் பாதையினதும் தொழிற்சாலைகளினதும் பங்குகளை வாங்காமல் தனிநாடாக பிரிந்து போக முடியும். (இன்றைய யுத்தத்தின் விளைவாக ஏகாதிபத்தியத்தின் அபிவிருத்தி சூழ்நிலமைகளையும் அதிகாரத்தைப் பாதிக்காமல் ஐரோப்பாவில் புதிய அரசுகள் (போலந்து, பின்லாந்து போன்றன) முழுமையாக உருவாகக்



படிப்பகம்

கூடும். எதிர்மாறாக இந்த நிகழ்ச்சி நிதிமூலதனத்தின் அழுத்தத்தையும் செல்வாக்கையும் அதிகரிக்கும். இன்னுமொரு வெளிப்பாடு உண்டு. கங்கேரி, செக்கோஸ்லாவாக்கிய போன்ற புதிய நாடுகள் உருவாவதற்கான சாத்தியக் கூறுகள் உண்டு. பிரித்தானிய ஏகாதிபத்தியம் தாம் வெல்லுவோம் என்று எதிர்பார்த்து இந்த இரண்டாவது விளைவுக்கான தயாரிப்புக்களை ஏற்கனவே திட்டமிட்டுள்ளார்கள். ஏகாதிபத்திய சகாப்தம் உலக ஏகாதிபத்திய உறவு எல்லைகளைப் பொறுத்த மட்டில் தேசிய அரசியல் சகாப்தங்களையும் அது சாத்தியமாவதையும் நிர்மூலமாக்கவில்லை. ஏகாதிபத்திய உறவு எல்லைகளுக்கு அப்பால் ஏன் ஒரு ரசியக் குடியரசோ பொதுவாக வேறு ஏதும் ஜனநாயக உருமாற்றமோ பல தொடர்ச்சியான புரட்சிகள் இல்லாமல் சாத்தியமாகாது. அப்படி ஆகினாலும் அவை சோசலிசத்திற்குப் போகாதுவிடில் வீழ்ந்து விடும். கீவ்ஸ்கி ஏகாதிபத்தியத்திற்கும் ஜனநாயகந்திற்கும் இடையேயுள்ள உறவை பூரணமாக விளக்கவில்லை.

கீவ்ஸ்கி இன்பமளிக்காத அரசியல் பிரச்சினைகளிலிருந்து அவரது வியப்பூட்டும் நியாயங்களுக்கே சொந்தமான வியப்பூட்டும் வார்த்தை ஜாலங்களால் விமோசனம் தேடுகிறார். எந்தக் கணத்திலாவது டாமொக்கிளின் வாள்* (Sword of Damocles) அறுந்து அவரது தலை தீர்ந்து போகும். (சுவீடனிலும், நோர்வேயிலும்)

இதுதான் உண்மையான மார்க்கிசம் என்று நினைக்கலாம். சுவீடனிலிருந்து நோர்வே பிரிந்து ஒரு தனியான அரசை அமைத்தது ஒரு புரட்சிகர செயற்பாடாகும் என்றும்; அது

---

*(Sword of Damocles) - இது ஒரு கிரேக்க கர்ண பரம்பரைக் கதையின் மரபுத் தொடர். எதிர்பாராமல் எப்பவும் துர்அதிஸ்டம் நிகழலாம் என்பதைச் செப்புவது. ஒரு தலையை அறுக்கக்கூடிய வாள் சகல அதிகாரமும் உள்ள அரசனது தலைமேல் மயிர் போன்ற ஒரு நூலிழையில் தொங்கிக் கொண்டிருக்கும் - அது எப்பவும் விழுந்து தலையை அறுக்கலாம் என்றவாறு அர்த்தப்படுகிறது.

www.padippakam.com



பல தசாப்தங்களே உயிரோடு வாழுமென்று சுவீடிஸ் அரசாங்கம் கூறியுள்ளது. மேற்கூறிய கூற்றிலிருந்து பெறப்படும் அரசியல் பிரச்சினையை ஆராய்வதில் அர்த்தமில்லை. கில்பெர்டிஸ்கின் நிதிமூலதனத்தை வாசித்தவர்கள் விளங்கிக் கொள்வார்கள், நாம் கூறுவது புழுகில்லையென்று. அவர் கூற்றின்படி எப்படியென்றாலும் திடீரென்று ஒரு சின்ன அரசு அழிந்து விடுமாம்? இதுதான் மார்க்கிசத்தைப் பொருளாதாரவாதத்திற்கு சோரம் போகச் செய்கிறது. இந்த அரசியல் தான் பழைய கஞ்சியைப் புதுப்பானைக்குள் தருவதாகும். இதுதான் கிழடுதட்டிக் கெட்டி பற்றிய ரசியா சோவனிசமாகும். *1905* ஆம் ஆண்டு ரசியத் தொழிலாளர்கள் ஒரு குடியரசுக்காகப் போராடியபொழுது என்ன தவறு செய்தார்கள்? அதற்கெதிராகப் பிரான்சிலும் இங்கிலாந்து போன்ற நாடுகளிலும் நிதிமூலதனத்தை அணிதிரட்டினார்கள். எந்தக் கணத்திலும் டாமொக்கிளின் வாள் அறுந்து விழுந்து அதை சிரச்சேதம் செய்வதாகவே இருந்தது

~~~

"தேசிய சுயநிர்ணயக் கோரிக்கையை குறைந்த பட்சமாகப் பார்க்குமிடத்து ஒரு கற்பனா வேலைத்தட்டமல்ல. அது சமூக அபிவிருத்தியை முரண்படுத்தவில்லை. ஆனால் அது சமூக அபிவிருத்தியை அதனோடு நிறுத்தாமல் மேலும் அபிவிருத்தியடைய விடுமாக இருந்தால்" மாட்டோவின் இந்தப் பந்திக்கு நோர்வேயைக் காட்டி கீவ்ஸ்கி சவால் விடுகிறார். அவர்கள் மீண்டும் மீண்டும் எல்லோருக்கும் தெரிந்த உண்மையான நோர்வே பிரிந்தது நிதிமூலதனத்தின் தொடர்ந்த அபிவிருத்தியையோ விஸ்தரிப்பையோ நிறுத்தவில்லை என்றும்; குறிப்பாக நோர்வேயை இங்கிலாந்து விலைக்கு வாங்குவது தடைப்படவில்லை என்றும் நிறுவுகிறார்கள்.

எங்களுக்குள்ளே போல்ஷெவிக்குகள் இருந்தார்கள். *1908*–*1910* அலெக்ஸ்சின்ஸ்கி (Alexinsky) அப்பொழுது மாட்டோவோடு விவாதித்தார். அப்பொழுது மாட்டோ சரியான நிலைப்பாட்டை எடுத்திருந்தார். அப்படியான நண்பர்களிடமிருந்து எங்களைக் கடவுள் காப்பாற்றட்டும்!



படிப்பகம்
~~~

www.padippakam.com

# ஒருமை நிலைப்பாடும் இருமை நிலைப்பாடும்

**MONISM AND DUALISM**

"தேசிய இனங்களினது கோரிக்கை இரண்டு விதமாக வியாக்கியானம் செய்யப்பட வேண்டும்" என்பதை நிந்தித்து கீவ்ஸ்கி எழுதுகிறார்...

"சர்வதேச கட்சியின் ஒரே செயற்பாட்டை இரட்டைப் பிரச்சாரத்தால் இடம் பெயர்க்கிறார்கள்."

இது கேட்பதற்கு மாக்சியம் போலவும் பொருள்முதல்வாதம் போலவும் தோன்றுகிறது. துர்அதிர்ஷ்டவசமாக இதைத் துருவி ஆராய்ந்தால் வெறும் வாயளவிலான ஒற்றைச் செயற்பாடு என்று தெரியவரும். டூறிங்கினது ஒற்றைச் செயற்பாடும் இப்படித்தான். ஏங்கல்ஸ் டூறிங்கின் ஒற்றைச் செயற்பாட்டை அம்பலப்படுத்த "ஒரு சப்பாத்துத் துடைப்பான் பாலுாட்டியோடு ஐக்கியப்பட்டது போல" என்று 'டூறிங்குக்கு மறுப்பு' இல் எழுதினார்.

இதன் அர்த்தம் என்னவென்றால் குணாம்சம், நிகழ்வுப்போக்கு, நடைமுறை என்பன நிதர்சன உண்மையோடு ஐக்கியப்படுவதே உண்மையான ஐக்கியமாகும். இந்தப் பெருவிளக்கத்தைத்தான் எங்களது எழுத்தாளர் காணத் தவறினார். நாங்கள் சிறுபான்மை தேசிய இனத்திலுள்ள தொழிலாளர்களைக் கோருவதும், பெரும்பான்மைத் தேசிய இனத்திலுள்ள தொழிலாளர்களைக் கோருவதும் வித்தியாசப்படுவதனால்; கீவ்ஸ்கி எங்களை இரட்டை நிலைப்பாட்டாளர்கள் என்று நினைக்கிறார்.

டூறிங்கைப் போன்றே கீவ்ஸ்கியினதும் ஒற்றை நிலைப்பாட்டை யதார்த்தத்திலுள்ள உண்மையோடு ஆராய்ந்து பார்ப்போம்.

ஒரு நாட்டிலுள்ள ஒடுக்கப்பட்ட தேசிய இனத்தின் தொழிலாளர்களது வாழ்நிலைமையும் ஒடுக்குகின்ற தேசிய



படிப்பகம்

www.padippakam.com

**ஒருமை நிலைப்பாடும் இருமை நிலைப்பாடும்**

இனத்திலுள்ள தொழிலாளர்களது வாழ்நிலைமையும் உண்மையில் ஒரே மாதிரியானதா?

இல்லை. இரண்டு இனத்தவரினதும் ஒரே மாதிரியானதல்ல.

1) பொருளாதார ரீதியில் ஒடுக்கப்பட்ட தேசிய இனத் தொழிலாளர்களை ஒடுக்குகின்ற தேசிய இன முதலாளிகள் அதிகமாகச் சுரண்டிய அதீத லாபத்தில் சிறுபகுதியை ஒடுக்குகின்ற தேசிய இனத்திலுள்ள தொழிலாளர்களுள் ஒரு பகுதியினர் பெறுகிறார்கள். புள்ளிவிபரங்கள் காட்டுகின்றன, ஒடுக்குகின்ற தேசிய இன தொழிலாளர்களுள் கூடிய வீதமானவர்கள் குட்டி ராஜாக்களாக இருக்கிறார்கள். கூடிய வீதமானவர்கள் தொழிலாளப் பிரபுக்களாக இருக்கிறார்கள். (Hourwich எழுதிய *'அமெரிக்காவில் குடிபெயர்ந்த தொழிலாளர்களது வாழ்க்கை நிலைமைகள்'* என்ற புத்தகத்தை பாருங்கள்.) ஒரு மட்டத்திற்கு ஒடுக்குகின்ற தேசிய இன தொழிலாளர்கள் தங்களது முதலாளிகளோடு பங்காளராகி ஒடுக்கப்பட்ட தேசிய இன தொழிலாளர்களையும் (பெரும்பகுதி மக்களையும்) சூறையாடுகிறார்கள்.

2) அரசியல்ரீதியில் ஒப்புநோக்குகையில் ஒடுக்குகின்ற தேசிய இனத்திலுள்ள தொழிலாளர்கள், ஒடுக்கப்பட்ட தேசிய இனத்திலுள்ள தொழிலாளர்களோடு ஒப்புநோக்குமிடத்து சலுகை பெற்றவர்களாக இருக்கிறார்கள்.

3) சித்தாந்த ரீதியிலும் ஆத்மீக முறையிலும் உள்ள வித்தியாசம் என்னவென்றால், ஒடுக்குகின்ற தொழிலாளர்கள் பாடசாலைகளிலும் நாளாந்த வாழ்க்கை முறையிலும் ஒடுக்கப்படுகின்ற தேசிய இன தொழிலாளர்களை கேவலமாக எண்ணுவதற்கும் வேண்டாப் பிரஜைகளென்று யோசிப்பதற்கும் பயிற்றப்பட்டிருக்கிறார்கள். இதற்கு உதாரணம் பெரிய ரசியர்கள் தாங்கள் பெரியவர்களென்று யோசிப்பதும் அவர்கள் பெரிய ரசியர்களோடு மாத்திரம் வாழ்வதுமாகும்.

எப்பக்கம் பார்த்தாலும் ஒடுக்குகின்ற தேசிய இன தொழிலாளர்களுக்கும் ஒடுக்கப்படுகின்ற தேசிய இன



படிப்பகம்

www.padippakam.com

தொழிலாளர்களுக்கிடையேயும் வித்தியாசம் இருப்பதை காணலாம். புற உலக யதார்த்தத்திலே தனிப்பட்ட மனிதர்களின் ஆசை அபிலாசைகளுக்கு புறம்பாக இரண்டு வகை நிலைப்பாடுகள் நிலவுகின்றன.

**ஒருமை நிலைப்பாடும் இருமை நிலைப்பாடும்**

கீவ்ஸ்கி அடித்துக் கூறுவதுபோல் சர்வதேச கட்சிக்குள்ளே ஒரே நடைமுறை நிலவ முடியுமா? இது ஒரு வெற்றுக் கோம்பையான உரக்க ஒலிக்கும் வார்த்தை ஜாலமேயொழிய வேறொன்றுமில்லை.

சர்வதேச கட்சியானது உண்மையிலேயே ஒடுக்கப்பட்ட தேசிய இன தொழிலாளர்களையும் ஒடுக்குகின்ற தேசிய இன தொழிலாளர்களையும் கொண்ட ஒரு கூட்டமாகும். இதன் செயற்பாடு ஒன்றாக இருக்க வேண்டுமானால், இதன் பிரச்சாரம் ஒரு தன்மையானதாக கட்டாயம் இருக்கக்கூடாது. இப்படித்தான் இந்தப் பிரச்சினையை ஒரே தன்மையானதாக மதிப்பளித்து அதாவது மாக்சிய சடவாதமாக டூறிங்கின் ஒரு நிலைப்பாடாக இல்லாமல் பார்க்கிறோம்.

ஓர் உதாரணம் காட்ட வேண்டுமா? நோர்வேயை உதாரணமாகக் காட்டினோம். (சட்டபூர்வமான பத்திரிகையில் இரண்டு வருடத்திற்கு மேலாக) ஒருவரும் இதற்கு சவால் விடவில்லை. நடைமுறை வாழ்க்கையில் நடந்தேறிய ஒரு ஸ்தூலமான சம்பவத்திலே நோர்வே தொழிலாளர்களும் சுவீடிஸ் தொழிலாளர்களும் ஒரே நிலைப்பாட்டாய் ஐக்கியப்பட்டு, சர்வதேசியவாதிகளாக செயற்பட்டார்கள். எவ்வாறென்றால், சுவீடிஸ் தொழிலாளர்கள் நிபந்தனையில்லாமல் நோர்வேயின் பிரிந்துபோகும் சுதந்திரத்திற்காகப் போராடி வெற்றிவாகை சூடினார்கள். அதே நேரத்தில் நோர்வே தொழிலாளர்கள் பிரிவினை பிரச்சினையை நிபந்தனைக்குட்பட்டே கிளப்பினார்கள். சுவீடிஸ் தொழிலாளர்கள் நிபந்தனையில்லாமல் நோர்வேயின் பிரிந்துபோவதற்கான சுதந்திரத்திற்கு ஒத்தாசை அளிக்கவில்லையென்றால் அவர்கள் சோவனிஸ்டுகள், சுவீடிஸ் நிலச்சுவாந்தர்களதும் யுத்தத்தினால்



படிப்பகம்

நோர்வேயை நசுக்குகின்றவர்களதும் கூட்டாளர்களாவர். நோர்வே தொழிலாளர்கள் பிரிவினை கோரிக்கையை நிபந்தனைக்குட்பட்டுக் கிளப்பவில்லையென்றால், அதாவது சமூக ஜனநாயக கட்சி அங்கத்தவர்கள் பிரிவினைக்கு எதிராக பிரச்சாரம் செய்யவும் வாக்களிக்கவும் விடவில்லையென்றால், அவர்கள் தங்களது சர்வதேசக் கடமையிலிருந்து தவறியவர்கள் ஆவார்கள். அதனோடு கூடவே குறுமன நோர்வே முதலாளித்துவ தேசியவாதிகளுக்குத் தங்களை விற்றவர்களாவார்கள். ஏன்? பிரிவினை முதலாளித்துவவாதிகள் வேண்டி நிற்பது பாட்டாளிகள் அல்ல. ஏனெனில் நோர்வே முதலாளிகள் மற்றைய முதலாளிகளைப் போலவே தங்களது தொழிலாளர்களுக்கும் எதிர்நாட்டுத் தொழிலாளர்களுக்கும் இடையே ஆப்பைப் பாய்ச்சப் பார்க்கிறார்கள். ஏனெனில் வர்க்க உணர்மையுள்ள தொழிலாளர்களுக்கு ஒவ்வொரு ஜனநாயக கோரிக்கைகளும் (சுயநிர்ணய உரிமை உட்பட) **சோசலிசம் என்ற உயர்ந்த நலனுக்கு கீழ்ப்பட்டதாகும்.** உதாரணமாக நோர்வே சுவீடனிலிருந்து பிரிவது பிரித்தானியாவிற்கும் ஜேர்மனிக்குமிடையிலே யுத்தத்தை ஏற்படுத்துமானால் அல்லது ஏற்படுத்தக்கூடிய சாத்தியக்கூறுகள் தென்படுமானால், அந்தக் காரணத்திற்காக மட்டும் நோர்வே தொழிலாளர்கள் பிரிவினையை எதிர்க்க வேண்டும். சுவீடிஸ் தொழிலாளர்கள் கடந்த காலத்தில் வரிசைக்கிரமமாகவும் உறுதியாகவும் நோர்வேயின் பிரிந்து போவதற்கான சுதந்திரத்திற்காக சுவீடிஸ் அரசாங்கத்திற்கெதிராகப் போராடியிருந்தால்தான் அவர்கள் தங்களது சோசலிஸ்டுகள் என்ற கௌரவத்தை காப்பாற்றிக் கொண்டு யுத்தத்தை தவிர்க்கும் முகமாக நோர்வேயின் பிரிந்து போகும் உரிமையை எதிர்க்கலாம். அப்பொழுதுதான் அவர்கள் அதை எதிர்க்கும் உரிமையைப் பெறுகிறார்கள். இல்லையென்றால் நோர்வே தொழிலாளர்களும் பொதுமக்களும் சுவீடிஸ் தொழிலாளர்களது வர்க்க விசுவாசத்தை சந்தேகித்து அவர்களது வேண்டுகோளை ஏற்கமாட்டார்கள்.

அப்படி அவர்கள் ஏற்க வேண்டுமென்று எதிர்பார்க்கவும் முடியாது. சுயநிர்ணய உரிமையின் எதிரிகளோடுள்ள பிரச்சினை

www.padippakam.com



என்னவென்றால் அவர்கள் உயிரற்ற அருவப்படுத்திய விடயங்களிலே தங்களை கட்டுப்படுத்திக் கொண்டு ஒரு யதார்த்த வாழ்வையென்றாலும் கடைசி அந்தலை வரைக்கும் ஆய்வுசெய்யப் பயப்படுகின்றார்கள். எங்களது வியாசத்திலே திட்டவட்டமாகக் கூறிய கூற்றான, இன்றைய இராணுவ மூலோபாயச் சூழ்நிலைமைகளின் காரணமாக ஒரு புதிய போலந்து அரசு உருவாவதற்கான அதிக சாத்தியக்கூறுகள் இருக்கிறது என்பதை போலந்துக்காரரோ கீவ்ஸ்கியோ எதிர்க்கவில்லை. அவர்களது மௌனவிரதத்தின் அர்த்தம் நாங்கள் சரியென்று ஒருவரும் யோசிக்கவில்லை. இதிலிருந்து வெளிப்படையாகத் தெரிவது என்னவெனில், சர்வதேசக்கட்சி ரசியர்களையும் போலந்துக்காரரையும் ஒரே செயற்பாட்டிற்கு கொண்டுவர வேண்டுமானால் இரண்டு சாரார்க்குமிடையேயும் உள்ள பிரச்சாரம் ஒன்றாக இருக்க மாட்டாது என்பதே. பெரிய ரசிய, ஜேர்மன் தொழிலாளர்களது கடமை போலந்தின் பிரிவினையை நிபந்தனையின்றி நிர்ப்பந்திக்க வேண்டும். இல்லையென்றால் ரசியத் தொழிலாளர்கள் நிக்கொலஸ்–2 இனதும், ஜேர்மன் தொழிலாளர்கள் கின்டன்பேர்க்கினதும் செருப்பு நக்கிகளாவர்.

போலந்து தொழிலாளர்கள் பிரிவினையை நிபந்தனையோடு மாத்திரம் நிர்ப்பந்திக்க வேண்டும். ஏனெனில் ஏதாவதொரு ஏகாதிபத்தியம் வெல்லும் என்றதை ஊகித்துப் (போலந்து வலதுசாரி PSP போன்று) பிரிந்தவுடன் அந்த ஏகாதிபத்தியத்தை அடிவருடவேண்டி வரும். இந்த வித்தியாசத்தை விளங்கவில்லையானால் சர்வதேசக் கட்சியின் ஒரே இலக்கிலான நடவடிக்கைக்கான முன்நிபந்தனையை விளங்காததாகும். இதை விளங்காதவர்கள் ஏன் ஜாரின் இராணுவத்திற்கு எதிராக ஒரே இலக்கிலான செயற்பாடு தேவையென்பதை, அதாவது புரட்சிகர சக்திகள் மேற்கிலே Nizhizi-Novgorod இலிருந்து போல்சோவை நோக்கியும் கிழக்கிலிருந்து Somolenk இலிருந்து போல்சோவை நோக்கியும் புறப்பட வேண்டுமென்பதை விளங்காதவர்களாகும்.

~~~



படிப்பகம்
~~~

சமூகப்புரட்சி நடக்கும் காலங்களில் நாங்கள் வெவ்வேறு தேசிய இனங்களையும் சர்வதேசக் கட்சிக்குக்கீழே ஒன்றாக ஐக்கியப்படுத்தி அணிவகுக்க முனையவில்லையென்று ; எங்களது புதிய வித்தகரான டூறிங்கியன் ஒருமைப்பாட்டாளர் எங்களை நிந்திக்கிறார். சோசலிசத்தின்கீழ் தேசிய சுயநிர்ணய உரிமை தேவையற்றது என்றும் ஏனெனில் சோசலிசத்தின்கீழ் அரசே இருக்காது என்றும் கீவ்ஸ்கி எழுதுகிறார். இது எங்களுக்கு எதிரான நியாயமாம்! நாங்கள் எங்களது வியாசத்திலே மூன்று வரிகளில், பகுதி ஒன்றிலுள்ள கடைசி மூன்று வரிகளில், மிகத் தெளிவாகவும் திட்டவட்டமாகவும் எழுதினோம். 'ஜனநாயகம்' கூட ஒருவகை அரசுதான். அரசு உதிரும் பொழுது ஜனநாயக அரசும் உதிர்ந்துவிடும் என்று. இந்தத் தேவவாக்கைத்தான் கீவ்ஸ்கி, எங்களை நிராகரிப்பதற்காகத் திருப்பித் திருப்பி முதலாம் பாடத்திலுள்ள பல பக்கங்களில் 'திரிச்சு' எழுதினார். எங்களுக்கு நாமே உருவம் தீட்டிக் காட்டினோமாம் என்று கீவ்ஸ்கி எழுதுகிறார். "சோசலிச அமைப்பு முறை கறாரான ஜனநாயகமும் மையப்படுத்தப்பட்ட பொருளாதார அமைப்புமுள்ள அரசு" என்றும், "ஒருபகுதி மக்களை மற்றப் பகுதி மக்கள் ஆதிக்கம் செலுத்தும் அரச யந்திரமென்ற முறையில் அது உலர்ந்து உதிரும்" என்றும் நாம் எழுதினோமாம். இது ஒரு குழப்பமாகும். ஜனநாயகம்கூட ஒருபகுதி மக்கள் மற்றப்பகுதி மக்களை ஆதிக்கம் செலுத்தும் ஓர் அரச வடிவமாகும். சோசலிசம் வெற்றிவாகை சூடிய பின்பு எவ்வாறு அரசு உலர்ந்து உதிர்ந்துவிடும், எந்த நிகழ்வுப்போக்கால் உலர்ந்து உதிர்ந்துவிடும் என்று எங்களது எழுத்தாளருக்கு உண்மையிலேயே விளங்கவில்லை.

அவரது சோசலிச புரட்சிக்கான சகாப்தம் பற்றியதற்கு எதிரான முக்கிய விடயம் இதுதான். அவர் எங்களை 'சுயநிர்ணய உரிமை வேதாந்திகள்' என்று கூறுகிறார். என்ன பயங்கொள்ளிப் பேச்சு. மேலும் சொல்கிறார். "சோசலிசப் புரட்சி என்பது எல்லா நாட்டுத் தொழிலாளர்களதும் ஐக்கியப்பட்ட செயற்பாடாகும். அவர்கள் முதலாளித்துவ அரசு போட்ட நாட்டு எல்லைகளை அழிப்பதோடு எல்லைக் காவற்படைகளை இல்லாமற் செய்வார்கள். அவர்கள்

தேசிய ஐக்கியத்தை இல்லாமற் செய்து வர்க்க ஐக்கியத்தை ஏற்படுத்துவார்கள்" என்று நாம் கூறினோமாம். வேதாந்திகளுக்கு எதிராக கோபமாக தீர்ப்பு தீர்த்தவரின் எழுத்துக்களைப் பற்றி நாம் கூறமுற்பட்டால் இங்கே அதிக சொல்லுகள் இருந்தனவே யொழிய 'யோசனைகள்' ஒன்றும் இல்லை என்று கூறலாம்.

சோசலிசப் புரட்சி எல்லா நாட்டுத் தொழிலாளர்களதும் ஐக்கியப்பட்ட செயற்பாட்டால் வருவதல்ல. அதற்கான சின்னக் காரணம் உலகத்திலுள்ள அதிகமான நாடுகளிலுள்ள பெரும்பான்மையான மக்கள் இன்னமும் முதலாளித்துவ அபிவிருத்தி மட்டத்திற்கு வரவில்லை. அல்லது இப்பொழுதுதான் வந்து கொண்டிருக்கிறார்கள். இதை நாங்கள் எங்களது வியாசத்தின் ஆறாவது பகுதியிலே கூறியிருக்கின்றோம். கீவ்ஸ்கி கவலையீனத்தாலோ, சிந்திக்க லாயக்கற்றதாலோ அதைப் பார்க்க தவறிவிட்டார். மாக்சியத்தை கேலிக்கூத்தாக்குவதை நிராகரிக்க வேண்டும் என்பதற்காகவே நாம் இதை திட்டவட்டமான நோக்குடனேயே எழுதினோம். தனிய வளர்ச்சியடைந்த நாடுகளான மேற்கு ஐரோப்பாவிலும் வட அமெரிக்காவிலும் மாத்திரம்தான் சோசலிசத்திற்கான முதிர்ச்சி நிலை வந்துள்ளது. ஏங்கல்ஸ் கவுட்ஸ்கிக்கு எழுதிய கடிதத்திலே; கீவ்ஸ்கி ஒரு ஸ்தூலமான யதார்த்த விஸ்தரிப்பை பார்க்கலாம். அதாவது வெறுமனே சத்தியம் செய்வதல்ல. எல்லா நாட்டுப் பாட்டாளிகளையும் ஐக்கியப்படுத்தும் கனவில் வாழ்ந்தால் சோசலிசத்தை கிரேக்கக் கலண்டர் காலத்துக்கு ஒத்திப் போட வேண்டியதுதான். அதாவது ஒருநாளும் வராது. சோசலிசத்தை எல்லா நாட்டுப் பாட்டாளிகளின் ஐக்கியப்பட்ட செயற்பாட்டால் சாதிப்பதல்ல. வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளான சிறுபான்மை நாடுகளின் பாட்டாளிகளின் ஐக்கியத்தால் சாதிப்பதாகும். இதை விளங்க முடியாததாற்தான் கீவ்ஸ்கி தவறு செய்ய வேண்டி வந்தது. இந்த வளர்ச்சியடைந்த நாடுகளான இங்கிலாந்து, பிரான்சு, ஜேர்மனி போன்றவற்றில் தேசிய பிரச்சினை எப்பவோ தீர்ந்து விட்டது. தேசிய ஐக்கியம் தனது கடமையை செய்து ஒய்ந்து ஒழிந்துவிட்டது. யதார்த்தத்தில் பொதுவான தேசியக் கடமைகள் என்று செய்வதற்கு

www.padippakam.com



ஒன்றுமில்லை. எனவே இந்த நாடுகளில் தேசிய ஐக்கியத்தை உடைத்தெறிந்து வர்க்க ஐக்கியத்தை ஏற்படுத்துவது முடியக்கூடிய காரியமாகும்.

வளரா நாடுகளோ வேறுவிதம். அவையாவன எல்லா கிழக்கு ஐரோப்பிய நாடுகளும், காலனித்துவ அரைக்காலனித்துவ நாடுகளுமாகும். இந்த இரண்டாம் மூன்றாம் வகை நாடுகளைப் பற்றி எங்களது வியாசத்திலே ஆறாவது பகுதியிலே விஸ்தரித்துள்ளோம். இந்த நாடுகளில் இப்பொழுதும் ஒடுக்கப்பட்டதும் முதலாளித்துவ வளர்ச்சியை அடையாததுமான நாடுகள் இருக்கின்றன. உண்மையிலேயே இந்த நாடுகளில் பொதுவான தேசியக் கடமைகள் நிறைவேற்றப்பட வேண்டியிருக்கின்றன. அதாவது ஜனநாயகக் கடமைகள், வெளிநாட்டு ஒடுக்குமுறையைத் தோற்கடிக்க வேண்டிய கடமைகள் இருக்கின்றன.

ஏங்கெல்ஸ் அப்படியான நாடுகளுக்கு இந்தியாவை உதாரணம் காட்டிச் சொல்கிறார். இந்தியா வெற்றிவாகை சூடிய சோசலிசத்திற்கு எதிராக புரட்சி செய்யக்கூடும். இயற்கைக்கு விரோதமான ஏகாதிபத்திய பொருளாதாரவாதத்தோடு ஏங்கெல்சுக்கு நெருங்கிய உறவு கிடையாது. ஏனெனில் ஏங்கெல்ஸ் யோசித்தார் -- வளர்ச்சியடைந்த நாடுகளில் வெற்றிவாகை சூடிய பாட்டாளி வர்க்கம் திட்டவட்டமான ஜனநாயக நடவடிக்கைகளை செய்யாமல் தானாகவே எல்லா இடங்களிலும் தேசிய ஒடுக்குமுறையை இல்லாமல் செய்யக்கூடுமென்று. வெற்றிவாகை சூடிய பாட்டாளி வர்க்கம் தான் வெற்றியடைந்த நாடுகளில் மீள்சீரமைப்பு செய்யும். அதை ஒரேயடியாக செய்ய முடியாது. கட்டாயமாக செய்யக்கூடாது. முதலாளித்துவத்தை ஒரேயடியாக நிர்மூலமாக்க முடியுமா? நாங்கள் வேண்டுமென்றே எங்களது வியாசத்தில் இதை அடித்துக் கூறினோம். தேசிய விடுதலை இயக்கங்கள் தொடர்பாக ஏன் நாங்கள் இதைச் சுட்டிக்காட்டி அடித்துக் கூறினோம் என்று மீண்டும் கீவ்ஸ்கி யோசிக்கத் தவறினார்.



படிப்பகம்

வளர்ச்சியடைந்த நாடுகளிலுள்ள பாட்டாளி வர்க்கம் முதலாளித்துவத்தை தோற்கடித்து அதன் எதிர்ப்புரட்சியை எதிர்த்து எதிர்கொள்ளும் வேளையில், வளர்ச்சியடையாததும் ஒடுக்கப்பட்டதுமான தேசிய இனம் சும்மா பார்த்துக்கொண்டு இராது. தன்னைத் தானே அழித்துக் கொள்ளாது. தானே மறைந்து போகாது. சோசலிசப் புரட்சியோடு ஒப்பிடுகையில் சின்ன நெருக்கடியான 1905–1915 ஏகாதிபத்திய நெருக்கடியில் காலனித்துவ நாடுகளும் அயர்லாந்தும் கிளர்ந்தெழுந்தது போல வளர்ச்சியடைந்த நாடுகளில் பெரிய நெருக்கடியான உள்நாட்டுக் கிளர்ச்சி எழுச்சி நடைபெறும் பொழுது, வளரா நாடுகளும் காலனித்துவ நாடுகளும் அந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி எல்லா இலாபத்தையும் அடையப் பார்ப்பார்கள். சோசலிசப் புரட்சிக்கான சகாப்தம் வளர்ச்சியடைந்த நாடுகளிலுள்ள பாட்டாளி வர்க்கத்தின் முதலாளித்துவத்திற்கு எதிரான உள்நாட்டு யுத்தத்தோடு கூடவே, வளரா நாடுகளிலும் பின்தங்கிய நாடுகளிலும் ஒடுக்கப்பட்ட நாடுகளிலும் தேசிய விடுதலை இயக்கங்கள் உள்ளடங்கலான ஜனநாயகஇயக்கங்களும் புரட்சிகர இயக்கங்களும் முழுமையாகவும் தொடராகவும் வரும் ஒட்டுமொத்த வடிவத்திலேதான் வரும்.

ஏன்?. ஏனெனில் முதலாளித்துவம் சீரற்ற முறையிலேயே அபிவிருத்தியடையும். உச்சக்கட்டத்திற்கு வளர்ச்சியடைந்த முதலாளித்துவ தேசங்களுக்கு அக்கமும் பக்கமுமாக ஒரு தொகை பொருளாதாரத்தில் அற்பமாகவே வளர்ந்த நாடுகளையும் பூரணமாக வளராத நாடுகளையுமே புறநிலை யதார்த்தம் எங்களுக்குத் தந்துள்ளது. சோசலிசப் புரட்சிக்கான புறநிலை சூழ்நிலைமைகளை வெவ்வேறு நாடுகளின் பொருளாதார முதிர்ச்சியை அடிப்படையாகக் கொண்டு ஆய்வுசெய்வதற்கு கீவ்ஸ்கி முற்றாகவே தவறிவிட்டார். நாங்கள் தேசிய சுயநிர்ணய உரிமையை பிரயோகிக்க பொருத்தமான உதாரணங்களை கண்டு பிடிப்பதாக நிந்திக்கிறார். அவர் குற்றஞ்சாட்டக் கூடாத இடத்திலே பழியைப் போடுகிறார்.

சொந்தத் தலையாலே விசயங்களை கண்டு பிடியாமல் மனித

www.padippakam.com



சமுதாயத்தை சமூகக் குற்றங்களிலிருந்து விடுதலை செய்ய நிலவுகின்ற புறநிலை சூழ்நிலைமைகளை கண்டுபிடிப்பதற்கு சொந்தத் தலையை பாவிக்க வேண்டுமென்ற உயர்ந்த நோக்கத்தோடு கீவ்ஸ்கி மார்க்ஸ் ஏங்கெல்ஸைத் திருப்பி திருப்பி மேற்கோள் காட்டுகிறார். அடிக்கடி வரும் அந்த மேற்கோள்களை நான் வாசிக்க வேண்டி வந்த பொழுது முதலாளித்துவம் ரசியாவில் வெற்றிவாகை சூடிவிட்டது என்று காலம் தாழ்த்தி மிக நீளமாக ஒப்பாரி வைக்கும் பொருளாதாரவாதியின் புதிய கண்டுபிடிப்பிற்கு என்னால் எந்தவித உதவியும் செய்ய முடியவில்லை. கீவ்ஸ்கி இந்த மேற்கோளால் எம்மை தண்டிக்கப் பார்க்கிறார். ஏகாதிபத்திய சகாப்தத்தில் சுயநிர்ணய உரிமையை பிரயோகிக்கலாம் என்று நாம் எங்களது சொந்த தலைக்குள்ளேயே கண்டுபிடித்தோம் என்று சொல்கிறார். இதோ அவரது கட்டுரையிலே அவர் அஜாக்கிரதையாக ஒத்துக் கொண்ட விடயம். உண்மை என்னவென்றால் தேசிய கிளர்ச்சி எழுச்சிகளை நசுக்குவதை நாங்கள் உற்சாகத்தோடு எதிர்ப்பது நாங்கள் தந்தை நாட்டைப் பாதுகாப்பதை எதிர்க்கிறோம் என்பதை வலு தெளிவாகக் காட்டுகிறது. இதனால் எமது ஜீவமரண எதிரியான ஏகாதிபத்தியத்தை எதிர்க்கிறோம். (இரண்டாம் பாடம் ஷ பகுதி)

ஓர் எழுத்தாளனை விமர்சிக்கும் பொழுதும் அவனுக்கு விடையிறுக்கும் பொழுதும் அவனது கட்டுரையிலுள்ள மிக முக்கியமான பிரேரணையையாவது மேற்கோள் காட்ட வேண்டும். ஆனால் கீவ்ஸ்கியின் பிரேரணையில் வசனத்திற்கு வசனம் இரண்டு மூன்று தவறுகளையோ அன்றேல் மாக்சியத்தை திரிக்கும் தர்க்கத்திற்கு ஒவ்வாத விடயங்களையோ காணலாம்.

1) அவருக்குத் தெரியவில்லை, தேசிய கிளர்ச்சி எழுச்சிகளும் கூட தந்தை நாட்டைக் காப்பதாகும் என்று. ஒரு சின்ன சிந்தனை இதனை நறுக்குத் தெறித்தாற்போல் தெளிவாக்கும். ஒடுக்குகின்ற தேசத்திற்கு எதிராக தனது தாய்மொழியை தனது நிலப்பரப்பை தனது தாய் நாட்டை தானே பாதுகாப்பதற்கான தேசியக் கலகம் தேசிய விடுதலை இயக்கமாகும்.



படிப்பகம்

www.padippakam.com

ஒருமை நிலைப்பாடும் இருமை நிலைப்பாடும்

ஒவ்வொரு தேசிய ஒடுக்குமுறையும் வெகுஜன எதிர்ப்பை கிளறிவிடும். தேசிய ரீதியில் ஒடுக்கப்பட்ட வெகுஜனங்கள் எப்பொழுதும் தேசந்தழுவ கலகம் செய்வர். ஒருதரம் இரண்டு தரமல்ல அடிக்கடி ரசியாவிலும் ஆஸ்திரியாவிலும் ஒடுக்கப்பட்ட தேசங்களின் முதலாளிகள் தேசியக்கலகம் என்று சொல்லிக் கொண்டு நடைமுறையிலே ஒடுக்குகின்ற முதலாளித்துவ நாட்டோடு வெகுஜனங்களை கட்டுப்படுத்தும் ஒப்பந்தத்திற்கு பின்கதவால் போனதோடு தன் சொந்த மக்களுக்கு எதிராகவும் செயற்பட்டிருக்கிறார்கள். அப்படியான சந்தர்ப்பங்களில் புரட்சிகர மாக்சியவாதிகள் தங்களது விமர்சனங்களை தேசிய விடுதலை இயக்கத்திற்கு எதிராக அல்லாமல் தேசிய விடுதலையை சீரழித்தவர்களுக்கு எதிராக, கேவலப்படுத்தியவர்களுக்கு எதிராக, தேசிய விடுதலையை அற்ப சச்சரவாக சுருக்கியவர்களுக்கு எதிராக முடுக்கிவிட வேண்டும். தற்செயலாக அனேக ஆஸ்திரிய ரசிய சமூக ஜனநாயகவாதிகள் இதை கவனிக்கத் தவறி, கடைகெட்ட துரோகத் தேசியத் தலைவர்கள் மேலுள்ள நியாயபூர்வமான வெறுப்பினால் ஒருவரோடொருவர் மான்பிடியும் மயிர்பிடியும் கத்தியும் கிடாயுமென்று சண்டைப்பட்டு, எடுத்துக் காட்டாக தெருப்பலகைகளில் எந்த மொழியைக் கொட்டை எழுத்தில் எழுதுவது என்பதிலே காலத்தைக் கழிப்பதோடு தேசிய விடுதலைப் போராட்டத்தை ஆதரிப்பதை ஒட்ட நிராகரிக்கின்றனர்.

நாங்கள் மொனாக்கோ போன்ற பாசாங்குக் குடியரசையோ அன்றேல் தென்னமெரிக்காவிலும் பசுபிக்தீவுகளிலுமுள்ள இராணுவத் தளபதிகளின் குடியரசு சாகசங்களையோ ஆதரிக்கவில்லை. அப்படியென்றால் கரிசனையான ஜனநாயக சோசலிச இயக்கங்கள் குடியரசு சுலோகங்களை கைவிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. நாங்கள் கட்டாயமாக அருவருக்கத்தக்க அற்ப விசயத்திற்குப் பிடிவாதமாக பேரம் பேசுகின்ற துரோக ரசிய, ஆஸ்திரிய தேசிய தலைமைகளை பரிகாசஞ்செய்ய வேண்டும் தான். ஆனால் இது தேசிய கிளர்ச்சி எழுச்சிகளுக்கோ அன்றேல் தேசிய ஒடுக்கு முறைக்கு எதிரான கரிசனையான போராட்டத்திற்கோ ஆதரவு வழங்காதிருப்பதை அனுமதிப்பதாக அர்த்தப்படாது.



படிப்பகம்

2) ஏகாதிபத்திய சகாப்தத்திலே தேசியக் கிளர்ச்சிகள் நிகழமுடியாத ஒன்றென்றால் அதைப்பற்றிக் கதைப்பதற்கு கீவ்ஸ்கிக்கு எந்த உரிமையும் இல்லையாகும். அது நிகழமுடியுமென்றால்; அவர் எங்கள்மேல் பிரயோகிக்கும் 'ஒருமைத்துவம்', ஏகாதிபத்தியத்தின் கீழ் சுயநிர்ணய உரிமைக்கான உதாரணங்களை 'கண்டுபிடித்தல்' போன்ற வனப்பான வார்த்தை ஆலாவருணங்கள் சுக்குநூறாக வெடித்துச் சிதறும். கீவ்ஸ்கி தான் கூறிய காரணத்தை தானே தோற்கடிக்கிறார்.

தேசியக் கிளர்ச்சி எழுச்சியை ஒடுக்குவதை நாங்கள் உற்சாகத்தோடு எதிர்க்க வேண்டுமானால் அப்படியொரு விடயம் நடக்குமென்பதை கீவ்ஸ்கி தானே ஒத்துக்கொண்டால் அதன் அர்த்தம் யாதோ?

எங்களது எழுத்தாளர் பிழையாகக் கையாண்ட தத்துவார்த்த சொல் போலவே அதன் அர்த்தம்; செயலானது இரட்டை மடிப்பானதாய் அன்றேல் இருமைப்பாடு உடையதாய் இருக்க வேண்டும் என்றால்;

அ) முதலாவது, தேசிய ரீதியில் ஒடுக்கப்பட்ட பாட்டாளிகளும் விவசாயிகளும், தேசிய ரீதியில் ஒடுக்கப்பட்ட முதலாளிகளோடு ஐக்கியப்பட்டு; ஒடுக்குகின்ற தேசியத்திற்கு எதிராகப் போராடுதல்.

ஆ) இரண்டாவது, ஒடுக்கப்பட்ட தேசத்திலுள்ள பாட்டாளி வர்க்கம் அல்லது வர்க்க உணர்மையடைந்த பாட்டாளி வர்க்கத்தின் பகுதி தனது தேச முதலாளித்துவத்திற்கும் அதன் அடிவருடிகளுக்கும் எதிராகப் போராடுதல்.

கீவ்ஸ்கி அடிக்கடி சொல்லும் தேசிய அணிக்கு எதிராக தேசியப் பிரமை, தேசிய நஞ்சு, தேசியத்தை வெறுக்கச் சொல்லி தூண்டுதல் போன்ற சொற்களும் வசனங்களும் அர்த்தமற்றவை என்று நிறுவப்படுகின்றன. ஒடுக்குகின்ற தேசத்து பாட்டாளி வர்க்கத்திற்கு "தேசியக் கிளர்ச்சி எழுச்சிகளை நசுக்குவதை உற்சாகத்தோடு எதிருங்கள்" என்று புத்திமதி சொல்லுகில் (கீவ்ஸ்கி அதை ஒரு சக்தியாக அங்கீகரிக்கிறார்) அதனால்; ஒடுக்கப்பட்ட தேசியத்தின் பாட்டாளி வர்க்கத்தின் தேசிய வெறுப்பை ஊக்குவித்து; ஒடுக்கப்பட்ட தேசத்து முதலாளித்துவத்தோடு கூட்டுச்சேருவதற்கு ஒத்தாசை வழங்குவார்.

3) ஏகாதிபத்தியத்திற்கு எதிரான கிளர்ச்சி எழுச்சிகள் நிகழக் கூடியதென்றால், தேசிய யுத்தங்களும் நிகழக் கூடியதுதான். இரண்டுக்குமிடையே சடத்துவ அரசியல் வித்தியாசங்கள் கிடையாது. இராணுவ வரலாற்றாளர்கள் கலகக்காரர்களை யுத்தம் செய்பவருக்கு நிகராகப் பார்ப்பது கறாரான சரியாகும். கீவ்ஸ்கி தெரியாமல் தன்னை மாத்திரம் நிராகரிக்கவில்லை. றோசா லக்சம்பேர்க் ஐயும் சர்வதேசக் குழுவையும் நிராகரிக்கிறார். இவர்கள் ஏகாதிபத்தியத்தின்கீழ் தேசிய யுத்தம் நிகழ்வதற்கான சாத்தியக்கூறை நிராகரிப்பவர்களாகும். இந்த நிராகரிப்பே ஏகாதிபத்தியத்தின் கீழ் தேசிய சுயநிர்ணய உரிமையை நிராகரிப்பதற்கான தத்துவார்த்த அடிப்படையாகும்.

4) எதற்காக தேசியக் கிளர்ச்சி எழுச்சி? இது ஒடுக்கப்பட்ட தேசிய இனம் அரசியல் சுயாதீனத்தை சாதிப்பதற்கான கிளர்ச்சி எழுச்சியாகும். அதாவது ஒரு தனியான தேசிய அரசை ஏற்படுத்துவதாகும்.

ஒடுக்குகின்ற தேசிய இனத்தின் பாட்டாளி வர்க்கம் ஒரு முக்கிய சக்தியானால் (ஏகாதிபத்திய சகாப்தத்தில் எங்களது எழுத்தாளர் யோசிக்கிறார் அப்படி); அது தேசிய எழுச்சியை நசுக்குவதற்கு எதிராக நிர்ணயமாகப் போராடுமானால்; அது ஒரு தனித் தேசிய அரசு உருவாவதற்கு ஒத்தாசை புரியாதா? கட்டாயம் அது புரியும்.

இருந்தபோதும் சுயநிர்ணய உரிமை சாதிக்கப்படக்கூடியது என்பதை நிராகரிக்கும் எங்களது துணிகரமான எழுத்தாளர் இப்பொழுது நியாயம் காட்டுகிறார் -- சாதிக்கக் கூடிய இலக்கை சாதிப்பதற்கு வளர்ச்சியடைந்த நாடுகளிலுள்ள வர்க்க உணர்மையுள்ள பாட்டாளி வர்க்கம் ஒத்தாசை வழங்குமாம்.

5) ஏன் நாங்கள் தேசிய கிளர்ச்சி எழுச்சியை நசுக்குவதை உற்சாகத்தோடு எதிர்க்க வேண்டும்? கீவ்ஸ்கி ஒரேயொரு காரணத்தை முன்வைக்கிறார். அதனால் எங்களது ஜீவமரண எதிரியான ஏகாதிபத்தியத்தை இல்லாமல் செய்வோம். நியாயத்தின் கடினம் கடுமையான சொல்லான ஜீவமரண என்றதிற்தான்

www.padippakam.com



நிற்கிறது. மற்றவர்களால் ஏற்றுக்கொள்ளாத, கடுமையான நியாயங்களுக்குப் பதிலாக கடுமையான சொற்களை கையாள்வது அலெக்சிங்கி பாவித்ததுபோன்று நடுங்குகின்ற முதலாளித்துவத்தின் உடலத்திலே ஈட்டியை பாய்ச்சுதல் போன்ற உரக்க ஒலிக்கும் வார்த்தை வனப்பால் பூத்துக் குலுங்குகின்றது கீவ்ஸ்கியின் கட்டுரை.

ஆனால் கீவ்ஸ்கியின் நியாயம் பிழையானது. முாலாளித்துவம் போன்றே ஏகாதிபத்தியமும் எங்களது ஜீவமரண எதிரியாகும். நிலப்பிரபுத்துவத்திலும் பார்க்க முதலாளித்துவம் முற்போக்கானது. ஏகாதிபத்தியம் ஏகபோகத்திற்கு முந்தைய முதலாளித்துவத்திலும் பார்க்க முற்போக்கானது என்பதை எந்த மாக்சியவாதியும் மறுக்க மாட்டார்கள். ஆதலால் ஏகாதிபத்தியத்திற்கு எதிரான எல்லாப் போராட்டத்தையும் நாங்கள் ஆதரிப்பதில்லை. ஏகாதிபத்தியத்திற்கு எதிராக, பிற்போக்கு வர்க்கங்கள் போராடினால் நாங்கள் அதை ஆதரிப்பதில்லை. ஏகாதிபத்தியத்திற்கும் முதலாளித்துவத்திற்கும் எதிரான பிற்போக்கு வர்க்கங்களின் கிளர்ச்சி எழுச்சிகளை நாங்கள் ஆதரிப்பதில்லை.

அதன்காரணமாக ஒடுக்கப்பட்ட தேசங்களின் கிளர்ச்சி எழுச்சிகளை ஆதரிக்க வேண்டுமென்பதை எங்களது எழுத்தாளர் ஏற்றுக்கொண்டுள்ளார். (ஒடுக்கப்பட்ட தேசங்களின் கிளர்ச்சி எழுச்சிகளை நசுக்குவதை உற்சாகத்தோடு எதிர்க்க வேண்டும்.) தேசியக் கிளர்ச்சி எழுச்சிகள் முற்போக்கானதென்று அவர் ஏற்றுக் கொண்டுள்ளார். ஆதலால் வெற்றிகரமான கிளர்ச்சி எழுச்சிகளால் புதிய தேசங்களையும் புதிய தேச எல்லைகளையும் உருவாக்குதல் முற்போக்கானதாகும்.

அவரது எந்த அரசியல் நியாயங்களும் உறுதியானதல்ல. 1916 இல் நிகழ்ந்த அயர்லாந்துக் கலகம் எங்களது வியாசம் Vorbote இன் இரண்டாவது இதழில் வெளியான பின்பு நிகழ்ந்ததாகும். இது ஐரோப்பாவில்கூட இடையிடையே தேசியக் கிளர்ச்சி எழுச்சிகள் நிகழும் என்பதை நிறுவிக் காட்டுகின்றது.



படிப்பகம்

# கீவ்ஸ்கி கிளப்பியதும் திரித்ததுமான மற்றைய அரசியற் பிரச்சினைகள்

**THE OTER POLITICAL ISSUES RAISED AND DISTORTED BY P.KIEVSKY**

நாங்கள் எங்களது வியாசத்திலே கூறினோம் காலனிகளின் விடுதலை என்பது, சுயநிர்ணய உரிமையாகும். காலனித்துவ மக்களும் தேசியங்கள் என்பதை ஐரோப்பியர்கள் அடிக்கடி மறந்து விடுவதுண்டு. இந்த மறதியை சகிப்பதென்பது சோவனிசத்தை சகிப்பதாகும். கீவ்ஸ்கி ஆட்சேபிக்கிறார்:

"தூய காலனி விதங்களில் உண்மையிற் பாட்டாளி வர்க்கம் இல்லையாகும். (பாடம் இரண்டில் R பகுதியிற் கடைசியில்) அப்படியென்றால் யாருக்குச் சுயநிர்ணய உரிமை சுலோகம்? காலனித்துவ முதலாளிகளுக்கா? நிலச் சுகாந்தர்களுக்கா? விவசாயிகளுக்கா? கட்டாயம் வேண்டியதில்லை. சோசலிஸ்டுக்கள் காலனிகளுக்கு 'சுயநிர்ணய உரிமையை' கோருவது முட்டாள்தனமாகும். தொழிலாளரே இல்லாத நாடுகளில் பாட்டாளி வர்க்கக் கட்சிகளை பிரேரித்தல் முட்டாள்தனமாகும்."

தேசிய விடுதலை இயக்கங்கள் சம்பந்தமான எங்களது பார்வை 'முட்டாள்தனமானது' என்று கீவ்ஸ்கி கோபத்தோடு நிந்தித்தாலும் அவரது நியாயங்கள் பிழையென்று துணிந்து கூறுவோம். காலம் கடந்த மனவிசனப்படாத பொருளாதாரவாதி மாத்திரம் நம்புகிறார். "பாட்டாளி வர்க்க கட்சி" என்ற சுலோகம் தொழிலாளருக்கு மாத்திரம் கோரப்பட்டதென்று. இல்லை இந்த சுலோகம் தொழில் செய்யும் எல்லா மக்களுக்கும் முழு வெகுஜனங்களுக்குமானதாகும். எங்களது சுலோகத்தின் ஜனநாயகப் பகுதியைப்பற்றி கீவ்ஸ்கி சிந்திக்கவில்லை. இது எல்லா மக்களுக்கும் கோரப்பட்டதாகும். நாங்கள் ஏன் எல்லா மக்களையும் விழித்தோம். (பிற்குறிப்பு:– சில விசமத்தனமான எதிரிகள் எங்களது "தேசங்களின் சுயநிர்ணய உரிமை" கோரிக்கையை எதிர்க்குமுகமாக தேசங்கள் இரண்டு வர்க்கங்களாக பிரிந்து இருக்கின்றன என்ற விவாதத்தை

www.padippakam.com



முன்வைக்கிறார்கள்! இந்தக் கேலிக்கூத்து மாக்சியவாதிகளுக்கு நாங்கள் வழமையாக வழங்கும் பதில், எங்களது வேலைத்திட்டத்தின் ஜனநாயகப் பகுதி சொல்கிறது மக்களின் அரசாங்கம் என்று. என்பதை சுட்டிக் காட்டுகிறோம்.)

1000 மில்லியன் மக்கள் காலனித்துவ அரைக்காலனித்துவ தேசங்களில் இருக்கிறார்கள் என்று நாங்கள் கூறினோம். கீவ்ஸ்கி அந்த ஸ்தூாலமான கூற்றை நிராகரிக்க ஏதும் முயற்சியை எடுக்கவில்லை. இந்த ஆயிரம் மில்லியன் மக்களிலே 700 மில்லியன் மக்கள் சீனா, இந்தியா, பேர்சிய எகிப்திலே இருக்கிறார்கள். இந்த நாடுகளில் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். ஏன் தொழிலாளர்கள் இல்லாத அடிமை எஜமானர்களும் அடிமைகளும் உள்ள நாடுகளுக்கு கூட சுயநிர்ணய உரிமை முட்டாள்தனமானதல்ல. எல்லா மாக்சியவாதிகளுக்கும் அது கட்டாயமானதாகும். கீவ்ஸ்கி இந்த விடயத்தை சிறிது ஆழ்ந்து யோசித்தார் என்றால் விளங்கிக் கொள்ளுவார். சுயநிர்ணய உரிமை கோரிக்கையானது எப்பொழுதும் ஒடுக்கப்பட்ட தேசத்திற்கும் ஒடுக்குகின்ற தேசத்திற்குமான இரண்டு தேசங்களுக்கு இடையிலான கோரிக்கையாகும் என்பதை.

கீவ்ஸ்கியின் அடுத்த 'ஆட்சேபம்' :

"இந்த காரணத்திற்காகத்தான் நாங்கள் காலனிகளைப் பொறுத்தவரை ஒரு எதிர்மறையான சுலோகத்தை முன்வைப்பதை மட்டுப்படுத்தினோம். சோசலிஸ்டுக்கள் 'காலனிகளை விட்டு வெளியேறு' என்ற சுலோகத்தை, இது முதலாளித்துவத்தின் கீழ் சாதிக்க முடியாதிருந்த போதிலும் முதலாளித்துவத்துடனான போராட்டத்தை உக்கிரப்படுத்தவே முன்வைக்கிறார்கள். சோசலிச சமூகம் காலனிகளை வைத்திருப்பதில்லையாதலால் இந்தச் சுலோகம், சோசலிசத்திற்கான அபிவிருத்தியை முரண்படுத்த வில்லை."

இந்த எழுத்தாளர் அரசியற் சுலோகங்களின் தத்துவார்த்த உள்ளடக்கத்தைப்பற்றி விளங்கிக் கொள்ள சிறிதும் வக்கற்று வகையற்று இருக்கிறார்! இரத்தினச் சுருக்கமான தத்துவார்த்த



படிப்பகம்

கலைச்சொல்லை வெறும் வார்த்தை ஜாலம் மாற்றும் என்று எங்களை நம்பச் சொல்கிறாரா? தத்துவார்த்த ஆய்வை தட்டிக் கழிப்பவர்கள்தான் "காலனிகளை விட்டு வெளியேறு" என்ற பிரச்சார வசனத்திற்குப் பிறகாற் பதுங்கியிருக்கிறார்கள். உக்கிரேன், போலாந்து, பின்லாந்தைப் பொறுத்தவரை எங்களது கட்சிக்குள்ளேயுள்ள பிரச்சாரவாதிகள் தங்களது சொந்த அரசாங்கமான ஜார் அரசாங்கத்தை "பின்லாந்தை விட்டு வெளியேறு" போன்றவற்றை முன்வைக்கிறார்கள். புத்திக் கூர்மையுள்ள இந்த பிரச்சாரவாதிகளுக்கு சொல்லிக் கொள்ள விரும்புகிறோம். நாங்கள் போராட்டத்தை உக்கிரப்படுத்துவதற்காக நேர்ச் சுலோகத்தையோ மறைச் சுலோகத்தையோ வைக்கவில்லை. அலெக்ஸ்சிங்ஸ்கி போன்றவர்கள் மாத்திரம் தான் ஏதோ ஒரு பேய்க்கெதிரான போராட்டத்தை உக்கிரப்படுத்துவதற்காக 'மறைச் சுலோகமான' "கறுப்புநூற்றவர் டூமாவை விட்டு வெளியேறு" என்ற சுலோகத்தை முன்வைப்பார்கள்.

போராட்டத்தை உக்கிரப்படுத்தல் என்பது அகவயவாதிகளின் வெற்று வசனமாகும். ஒவ்வொரு சுலோகமும் பொருளாதார நிதர்சனம், அரசியற் சூழ்நிலை, அரசியல் முக்கியத்துவம் என்ற விலைமதிப்பற்ற ஆய்வுகளின் மூலம் மாக்சியவாதிகளுக்கு நியாயப்படுத்தப்பட வேண்டும் என்பதை அவர்கள் மறந்து விட்டார்கள். இதை வீட்டுக்கு ஓட்டுதல் சங்கடமானதாகும். ஆனால் நாம் என்ன செய்யலாம்?

தத்துவார்த்த பிரச்சனைகளை தீர்ப்பதற்கான தத்துவார்த்தக் கலந்துரையாடல்களை பிரச்சாரவாத ஊளையிடுதல் மூலம் திடீரென சுருக்குவதுதான் அலெக்ஸ்கிங்கியின் வழக்கம் என்பது எங்களுக்கு நன்றாக தெரியும். இது ஒரு கெட்ட பழக்கம். "காலனிகளை விட்டு வெளியேறு" என்ற சுலோகம் ஒரேயொரு அரசியற் பொருளாதார உள்ளடக்கத்தைக் கொண்டுள்ளது! காலனித்துவ தேசியங்களின் பிரிந்து போவதற்கான சுதந்திரம், தனிநாட்டை ஏற்படுத்துவதற்கான சுதந்திரம்! ஏகாதிபத்தியத்தின் பொதுவான நியதி, தேசங்களின் சுயநிர்ணய உரிமையை தடுப்பதும்

அதை கற்பனையாக்குவதும் பிரமையாக்குவதும் என்று கீவ்ஸ்கி எண்ணினால் இந்தப் பொதுவிதியிலிருந்து உலகத்தின் அதிகமான நாடுகளை எப்படி ஒருவர் யோசிக்காமல் விதிவிலக்காக்க முடியும்? வெளிப்படையாகவே கீவ்ஸ்கியின் 'தத்துவம்' கேலிக்கூத்து தத்துவமாகும்.

பெருவாரியான காலனித்துவ நாடுகளிற் பண்டங்களின் உற்பத்தியும் முதலாளித்துவமும் இவைகளைக் கோர்த்துக் கட்டியிருக்கும் நிதிமூலதனமும் நிலவுகின்றன. அப்படியாயின் ஏகாதிபத்திய நாடுகளையும் அவைகளின் அரசாங்கங்களையும் 'காலனிகளை விட்டு வெளியேறும்படி' எப்படி தூண்ட முடியும்? பண்ட உற்பத்தியையும் முதலாளித்துவத்தையும் ஏகாதிபத்தியத்தையும் பொறுத்தவரை இது ஒரு விஞ்ஞானபூர்வமற்ற கற்பனைக் கோரிக்கையாகும். இதை லென்ஸ் (Lensch), கூனோவ் (Cunow) போன்றவர்களே நிராகரித்தார்கள்.

எழுத்தாளரின் நியாயங்களின்படி அவர் இம்மியத்தனையாவது சிந்தித்தாரோ தெரியவில்லை. காலனிகளின் விடுதலை அனேக தொடர்ச்சியான புரட்சிகளினூடுதான் சாத்தியமாகும். அன்றேற் சாத்தியமாகாது என்பதை அவர் சிந்திக்கவில்லை. ஐரோப்பாவில் சோசலிசப்புரட்சி வருவதன் மூலம் காலனிகளின் விடுதலை சாத்தியமாகும் என்பதை அவர் சிந்திக்கவில்லை. சோசலிச சமுதாயம் 'காலனிகளை மாத்திரம் வைத்திருப்பதல்ல'. பொதுவாக எந்த தேசத்தையும் அடக்கி ஆள்வதில்லை என்பதை அவர் சிந்திக்கவில்லை. ரசியா போலந்தை வைத்திருந்தாலென்ன துருக்கிஸ்தானை வைத்திருந்தாலென்ன வைத்திருப்பதிலே இரண்டுக்குமிடையே பொருளாதார வித்தியாசமோ அரசியல் வித்தியாசமோ இல்லையென்பதுதான் விவாதத்திற்குரிய விடயமென்று அவர் சிந்திக்கவில்லை. சோசலிச சமூகம் காலனிகளை விட்டு வெளியேற விரும்புவதன் ஒரே அர்த்தம் அவைகட்கு பிரிந்து போகும் உரிமையை வழங்குவது தானேயன்றி திட்டவட்டமாக அவர்களைப் பிரிந்து போகச் சொல்லி சிபாரிசு செய்யும் அர்த்தத்தில் அல்ல.

பிரிந்து போகும் உரிமையை வழங்குவதற்கும் பிரிந்துபோகும்படி சிபாரிசு செய்வதற்கும் உள்ள வித்தியாசம் 'ஏமாற்றுவித்தை' என்றும் இதை விஞ்ஞானபூர்வமாக உறுதிப்படுத்த முடியாதென்றும் எங்களை கண்டிக்கும் கீவ்ஸ்கி இதை தொழிலாளர்கள் தங்கள் கண்களுக்கு முன்னால் தீர்மானித்து நீதிவழங்க விட வேண்டும் என்றும் எழுதுகிறார். இதோ: "உக்கிரேனது சுதந்திரத்தை எப்படி மதிப்பதென்று ஒரு பிரச்சாரவாதியை கேட்ட பாட்டாளி எப்படி யோசிப்பார்? அவருக்குக் கிடைக்கும் விடை: சோசலிஸ்டுக்கள் பிரிந்து போகும் உரிமைக்காகப் பாடுபடுவார்கள். ஆனால் அவர்களின் பிரச்சாரம் பிரிவினைக்கு எதிரானதாகும்."

இந்தக் கேள்விக்கு ஓரளவு சரியான மறுமொழியை கூறுவேன் என்று நம்புகின்றேன். பகுத்தறிவுள்ள எந்த தொழிலாளியும் கீவ்ஸ்கிக்கு யோசிக்கும் தகமை இல்லையென்று யோசிப்பான்.

ஒவ்வொரு பகுத்தறிவுள்ள தொழிலாளியும் யோசிப்பான்: எங்களது கீவ்ஸ்கி தொழிலாளர்களுக்குச் சொல்கிறார். "காலனிகளை விட்டு வெளியேறுங்கள்!" என்று கத்துங்கள். மறுதலையாகச் சொல்வதென்றால் பெரிய ரசியர்களாகிய நாங்கள் மங்கோலியா, துருக்கிஸ்தான், பேர்சியாவிலிருந்து எங்கள் அரசாங்கம் வெளியேற வேண்டும் என்று கோர வேண்டும். ஆங்கிலேயத் தொழிலாளர்கள் எகிப்து, இந்தியா, பேர்சியாவை விட்டு ஆங்கிலேய அரசாங்கம் வெளியேற வேண்டும் என்று கோர வேண்டும். இதன் அர்த்தம் பாட்டாளிகளாகிய நாங்கள் எகிப்தியத் தொழிலாளரோடும் விவசாயிகளோடும் மங்கோலியா துருக்கிஸ்தான், இந்திய தொழிலாளிகளோடும் விவசாயிகளோடும் பிரிந்து போவதை விரும்புகின்றோமா? இதன் அர்த்தம் நாங்கள் காலனிகளிலுள்ள வெகுஜனங்களை வர்க்க உணர்மையுள்ள ஐரோப்பியத் தொழிலாளரோடு பிரியும்படி புத்திமதி கூறியதாகுமா? அப்படி ஏதும் இல்லை. இப்பொழுதும், எப்பொழுதையும் போலவே வர்க்க உணர்மையுள்ள வளர்ச்சி அடைந்த நாடுகளிலுள்ள தொழிலாளர்களோடு ஒடுக்கப்பட்ட நாடுகளிலுள்ள தொழிலாளர்களும் விவசாயிகளும் அடிமைகளும் மிக நெருங்கிய ஐக்கியத்தோடு

சங்கமம் ஆவதற்கே நாங்கள் நிற்கிறோம். தொடர்ந்து அதற்காகவே நிற்போம். நாங்கள் காலனிகள் உட்பட்ட எல்லா ஒடுக்கப்பட்ட நாடுகளிலுமுள்ள ஒடுக்கப்பட்ட வர்க்கங்களை எங்களோடு பிரிந்து போகாமல் மேலும் எங்களோடு மிக நெருங்கிய ஐக்கியத்தை ஏற்படுத்தி எங்களோடு சங்கமம் ஆகும்படியே எப்பொழுதும் புத்திமதி கூறியுள்ளோம். தொடர்ந்தும் அந்தப் புத்திமதியையே கூறுவோம்.

நாங்கள் எங்களது அரசாங்கத்தை காலனிகளை விடும்படி கோருவோம். இதை வெறும் போராட்டக் கொக்கரிப்பில்லாமல் சரியான அரசியல் வார்த்தையிற் சொல்வதென்றால் காலனிகளுக்குப் பிரிந்து போவதற்கான பூரண உரிமை வழங்க வேண்டும் என்றும், மிக விசுவாசமான சுயநிர்ணய உரிமையை வழங்க வேண்டும் என்றும் கோருவோம். இதை நாங்கள் கோருவதோடு நில்லாமல் நாங்கள் ஆட்சிக்கு வந்ததுதான் தாமதம் இந்த உரிமைகளை கட்டாயம் நடைமுறைப்படுத்துவோம். இப்ப ஆட்சியில் இருக்கிற அரசாங்கத்தை நாங்கள் கோருவோம். நாங்கள் அரசாங்கம் ஆனபோது செய்வோம். இதைப் பிரிந்து போகும்படி சிபாரிசு செய்வதற்காக அல்ல. மாறாக ஜனநாயக ரீதியில் தேசங்கள் ஐக்கியப் படுவதையும் சங்கமமாவதையும் துரிதப்படுத்துவதற்கான வசதிகளையும் வாய்ப்புக்களையும் அளிப்பதற்காகவே செய்கிறோம். மங்கோலியா, பேர்சியா, இந்தியா, எகிப்தோடு ஐக்கியப்படுவதற்கும் சங்கமமாவதற்கும் வேண்டிய அத்தனை முயற்சிகளையும் செய்வோம். இதுவே எங்களது கடமை. இதுவே எங்களுக்கு நலனைத் தரும். இது இல்லையென்றால் ஐரோப்பாவில் சோசலிசத்தை காப்பாற்ற முடியாதென்றே நாம் நம்புகின்றோம்.

எங்களிலும் பார்க்க பின்தங்கியதும் ஒடுக்கப்பட்டதுமான நாடுகள் போலாந்து சமூக ஜனநாயகவாதிகளின் சந்தோசமான வெளிப்பாடுகளை கடன் வாங்கவும் பாரபட்சமற்ற கலாச்சார உதவிகளைப் பெறவும் எங்களாலான எல்லா முயற்சிகளையும் செய்வோம். மறுவார்த்தையில் சொல்வதென்றால் அவர்கள் யந்திரங்களை எப்படி உபயோகிக்க வேண்டும் என்றும்,

தொழிலாளர்களின் தொழில்நுட்ப அறிவை ஒளிரப்பண்ணவும் ஜனநாயகத்தையும் சோசலிசத்தையும் அடையவும் உதவி செய்வோம்.

நாங்கள் மொங்கோலியா, பேர்சியா, எகிப்து மற்றய எல்லா ஒடுக்கப்பட்ட தேசங்களுக்கும் சமத்துவமற்ற தேசங்களுக்கும், ஒன்றும் புறநீங்கல் இல்லாமல் பிரிந்து போகும் உரிமையைக் கோருவது; நாங்கள் பிரிவினையை விரும்புவதனால் அல்ல, மாறாக அவர்களை பலாத்காரமாக இணைப்பதை விரும்பாமையாலும் அவர்கள் தாங்களாகவே சுயாதீனமாக விரும்பி இணைவதையும் சங்கமமாவதையும் விரும்புவதனாலேயே. இதுதான் அதற்குரிய ஒரே காரணம்!

மொங்கோலிய அல்லது எகிப்திய விவசாயிகளுக்கும் தொழிலாளர்களுக்கும் போலாந்து அல்லது பின்லாந்திற்கும் இடையேயுள்ள வித்தியாசம் என்னவென்றால் பின்னவர்கள் பெரிய ரசியர்களிலும் பார்க்க அதிக வளர்ச்சியடைந்தவர்கள், அதிகம் அரசியல் ரீதியில் தயாரானவர்கள். மேலும் பலவற்றில்– அந்தக் காரணத்தினால்; அவர்களது பெரிய ரசியர்கள் மேலுள்ள இன்றைய நியாயபூர்வமான வெறுப்பினால், சோசலிசத் தொழிலாளர்களையும், சோசலிச ரசியாவையும் பழைய பெரிய ரசியாவாக எண்ணி வெறுப்பது புத்திசாதுரியமல்ல என்று நம்பப்பண்ணுதல் வெகு சீக்கிரம் சாத்தியமாகும். சோசலிஸ்டுகள் தங்களது பொருளாதார தகுதியினாலும் சர்வதேசியவாத ஜனநாயக பாரம்பரியத்தினாலும் உணர்மையாலும் நம்பப் பண்ணி, எல்லாத் தேசங்களையும் சோசலிச சமுதாயத்தோடு சீக்கிரம் இணைவதையும் சங்கமமாவதையும் கோருவார்கள். கலாச்சாரத்தில் உயர்ந்த போலந்து, பின்லாந்து மக்கள் சோசலிஸ்டுகளின் மனோநிலையின் சரித்தன்மையை கூடிய சீக்கிரத்தில் கண்டு கொள்வதினால் சோசலிசத்தில் போலந்தும், பின்லாந்தும் பிரிந்து இருப்பது ஒரு கொஞ்ச கால இடைவெளிக்குத் தான். ஒப்பு நோக்குமிடத்து குறைந்த கலாச்சார வளர்ச்சியடைந்த பெல்லாக்கள் (Fellahs) மொங்கோலியர்கள், பாரசீகர்கள் சிறிது நீண்ட காலம் பிரிந்து

இருப்பர். ஆனால் நாங்கள் மேற்கூறியது போன்று பாரபட்சமற்ற கலாச்சார உதவிகள் வழங்குவதினால் அந்த காலத்தைச் சுருக்க முயற்சிப்போம்.

போலந்துகாரர்களுக்கும் மொங்கோலியர்களுக்கும் இடையே இதைத் தவிர வேறெந்த வித்தியாசமான அபிப்பிராயமும் எங்களுக்கு கிடையாது. எங்களது பிரிந்து போவதற்கான சுதந்திரம் பற்றிய பிரச்சாரத்திற்கும்; எங்களது ஐக்கியப் படுவதற்கும் சங்கமமாவதற்குமான பிரச்சாரத்திற்கும்; நாங்கள் அரசாங்கமானால், அந்த சுதந்திரத்தைத் திடமாக நடைமுறைப்படுத்துவதற்கும் இடையே வேறொரு முரண்பாடும் கிடையாது. அப்படி இருக்கவும் முடியாது. ஆதலால் நாங்கள் கட்டாயமாக உணருகின்றோம்; ஒவ்வொரு சிந்திக்கும் திறனுள்ள தொழிலாளர்களும், சோசலிஸ்டுகளும் ஒவ்வொரு உண்மையான சர்வதேச வாதிகளும் பி. கீவ்ஸ்கியோடு எங்களுக்குள்ள கருத்து முரண்பாட்டை சரி என்று யோசிப்பார்கள்.

(பிற்குறிப்பு: 'காலனிகளை விட்டு வெளியேறு' என்ற சுலோகத்தை ஜேர்மன், டச்சு மாக்சியவாதிகள் அதன் தத்துவார்த்த உள்ளடக்கத்தையும் அதை நடைமுறைப்படுத்தும் பின்விளைவு, முன்விளைவுகளைக் கருத்திற் கொள்ளாமலும் பிரேரித்தார்கள். இதையே கீவ்ஸ்கி அதன் ரசியாவின் பிரத்தியோக தன்மையை யோசியாமல் இலகுவாக மீளச் சொல்கிறார் என்பது வெளிப்படை. 'காலனிகளை விட்டு வெளியேறு' என்ற மட்டத்திற்கு தங்களை உள்ளடக்குவதால் ஜேர்மன் டச்சு மாக்சியவாதிகளை ஓர் அளவுக்கு மன்னிக்கலாம்.

முதலாவது அதிகமான மேற்கு ஐரோப்பிய நாடுகளின் உதாரணம் தேசிய ஒடுக்குமுறை காலனிகளை ஒடுக்குவது தான். இரண்டாவது மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கு காலனி என்ற சொல் படம் போட்டாற் போன்று மிகத் தெளிவான உயிரோட்டமுள்ள அர்த்தத்தை வகுக்கின்றது.

www.padippakam.com

ரசியாவுக்கு எப்படி? ரசியாவின் காலனிக்கும் ரசிய தேசிய இனங்களை ஒடுக்குவதற்கும் இடையேயுள்ள வித்தியாசம் தெளிவற்றதோடு ஸ்துாலமற்றதால் உயிரோட்டமாக ஒருவரும் அதை உணருவதில்லை.

ஒரு மாக்சிய எழுத்தாளன் உதாரணமாக ஒரு ஜேர்மன் மாக்சியவாதி எழுதும் பொழுது ரசியாவின் பிரத்தியேக தன்மையை, பாராமையை மன்னிக்கலாம். ஆனால் கீவ்ஸ்கியை மன்னிக்க முடியாது. ரசியாவிலே ஒடுக்கப்பட்ட தேசங்களுக்கும் காலனிகளுக்கும் ஒரு பாராதுாரமான வித்தியாசத்தை கண்டு பிடிக்க முயற்சிப்பது வெறும் முட்டாள்தனமாகும். ஒரு ரசிய சோசலிசவாதிக்கு அது மிகத் தெளிவாகத் தெரியும். அதை மீண்டும் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை.)

கீவ்ஸ்கியின் கட்டுரையை வாசிக்கும் பொழுது அவருக்குள்ள அடிப்படைச் சந்தேகம்: நாங்கள் ஆட்சியிலிருக்கும் போது ஏன் பிரிந்துபோகும் சுதந்திரத்திற்கு ஆதரவாக இருக்க வேண்டும். அப்போதுள்ள அபிவிருத்திப் போக்கு தேசங்கள் சங்கமமாவதாகத்தான் இருக்கும் என்று அவர் யோசிக்கிறார்? அதே காரணத்தினால் தான் நாங்கள் சொல்கிறோம்; பிரிந்து போகும் சுதந்திரத்திற்கு ஒத்தாசையாய் இருப்போம் என்று. நாங்கள் ஆட்சியிலிருந்தால் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை நடைமுறைப்படுத்துவோம். அப்போதுள்ள முழு அபிவிருத்தியும் பலவந்தமாய் சமூகத்தில் ஒரு பகுதி மற்றைய பகுதியை அடக்கியாள்வதை இல்லாமற் செய்வதாகத்தான் இருக்கும். சர்வாதிகாரம் ஒருபகுதி சமூகம் எஞ்சியுள்ள பகுதி சமூகத்தை அடக்கியாள்வதாகும். அதுவும் எஞ்சியுள்ள பகுதியை பலாத்காரமாக அடக்கியாள்வதாகும். ஒரேயொரு உறுதியான வர்க்கமான பாட்டாளி வர்க்கம் தவிர்க்க முடியாத அவசியத்தால் முதலாளித்துவ வர்க்கத்தை துாக்கியெறிந்து பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்தை நிர்மாணிக்கும். முதலாளி வர்க்கம் மீண்டும் எதிர்ப் புரட்சி செய்ய முயற்சித்தால் அதை முறியடிக்க வேண்டும். பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் பற்றிய பிரச்சனை மிக





படிப்பகம்

முக்கியமானதாகும். யாராவது அப்படியொரு சர்வாதிகாரத்தை வாயளவில் மாத்திரம் அங்கீகரித்தால் சமூக ஜனநாயகக் கட்சியில் அங்கத்தவராக இருக்கமுடியாது. இருந்தபோதும் சில பிரத்தியேக சம்பவங்கள் தவிர்க்க முடியாமல் நிகழும். உதாரணமாக ஒரு பெரிய நாட்டிலே சோசலிசப் புரட்சி வெற்றிவாகை சூடினால் அதற்குப் பக்கத்திலுள்ள சிறிய நாட்டு முதலாளித்துவம் சாத்வீக முறையிற் சரணாகதி அடையக் கூடுமென்பதை மறுக்க முடியாது. ஏனெனில் போராடினால் தோல்வி காணும் என்று நம்பிக் கொண்டால் மாத்திரம் அது நிகழும். சின்ன நாடாக இருந்தாலும் சோசலிசப் புரட்சி உள்நாட்டு யுத்தம் இல்லாமல் நிகழாது. இதனால்தான் சர்வதேச சமூக ஜனநாயகக் கட்சி உள்நாட்டு யுத்தத்தை அங்கீகரிக்கின்றது. இந்த மாற்றுவழி தேசியங்களுக்கும் பிரயோகிக்கக் கூடியதே. நாங்கள் தேசங்கள் இணைவதைத்தான் விரும்புகின்றோம். தானாகவே இணைவதை விடுத்து பிரிந்து போகும் சுதந்திரம் இல்லாமல் பலாத்காரமாக இணைப்பதையல்ல. பொருளாதார காரணிகள் ஆதிக்கம் செலுத்தும் என்பதை நாங்கள் ஏற்றுக் கொள்கின்றோம். ஆனால் கீவ்ஸ்கி கூறுவது போன்று மாக்சியக் கேலிக்கூத்தான பொருளாதார காரணியல்ல.

நவீன ஏகாதிபத்தியத்தில்; ரஸ்டுகளும் வங்கிகளும் வளர்ச்சியடைந்த முதலாளித்துவத்தின் ஒரு பகுதியாக; நாட்டுக்கு நாடு தவிர்க்க முடியாமல் வித்தியாசமாக காணப்படும். வளர்ச்சியடைந்த நாடுகளான அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ் ஜேர்மனி போன்ற நாடுகளில் இது ஏகவினமாக இருக்க வேண்டிய அத்தியாவசியமாக இருந்தாலும் இப்பொழுதும் பெரிய வித்தியாசம் உள்ளதாகவே காணப்படுகிறது. இதே வகையாகவே மனித குலத்தின் பாதையில் நேற்றைய ஏகாதிபத்தியத்தைப் போல நாளைய சோசலிசமும் வித்தியாசம் வித்தியாசமாக வெளிப்படும். எல்லாத் தேசங்களும் சோசலிசத்தை அடைவது தவிர்க்க முடியாதது. எல்லாம் ஒரே மாதிரியாக அடைய மாட்டாது. ஒவ்வொன்றும் தனக்கே உரிய பாணியில் தனது சொந்த பங்களிப்பை செய்யும். ஒவ்வொரு வகையான ஜனநாயகத்தையும், ஒவ்வொரு பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தையும் நிர்மாணித்து; வித்தியாசமான

வாழ்க்கை முறைக்கு ஏற்றவாறு வித்தியாசமான வேகத்தில் சோசலிச மாற்றத்தை உண்டாக்கும். எதிர்காலத்தை வரலாற்றுப் பொருள்முதல்வாதத்தின் பேரில் ஒருமைப்பாடு உடையதாக நரைத்த சாயம் பூசுவது தத்துவத்தின் பார்வையில் பழையதும் நடைமுறையில் அதிகம் பரிகசிக்கத்தக்கதுமாகும். இதன் விளைவு கரடு முரடானதாகும். நிதர்சனத்தில் முதலாவது சோசலிசப்புரட்சிக்கு முன்பு இன்றைய ஒடுக்கப்பட்ட தேசங்களில் 1/500 மாத்திரம் விடுதலையையும் பிரிந்து போகும் உரிமையையும் பெறும். உலகளாவ சோசலிசப் புரட்சி நடந்து கடைசியான சோசலிசப் புரட்சிக்கு முன்பு 1/500 ஒடுக்கப்பட்ட தேசம் மாத்திரம்தான் குறுகிய நாட்களுக்குப் பிரிந்திருக்கும். சம்வங்கள் இவ்வளவு அருமையாக நடந்தேறினாலும் கூட, தத்துவத்தைப் பொறுத்தமட்டிலும் நடைமுறை அரசியலைப் பொறுத்த மட்டிலும் நாங்கள் ஏற்கனவே சமூக ஜனநாயகக் கட்சியிலுள்ள தொழிலாளர்களுக்கு புத்திமதி கூறுவோம்; ஒடுக்குகின்ற தேசத்திலுள்ள சோசலிஸ்டுகள் யாராவது சுதந்திரத்தையும் பிரிந்து போகும் உரிமையையும் அங்கீகரிக்கவில்லை என்றால் கட்சிக்குள் விடாதீர்கள் என்று. உண்மை என்னவென்றால் எத்தனை ஒடுக்கப்பட்ட தேசங்கள் தாங்கள் சொந்தத்தில் ஒரு வித்தியாசமான ஜனநாயகத்தையும், சொந்தத்தில் ஒரு வித்தியாசமான ரூபமுள்ள சோசலிசத்தினையும் தந்து தமது பங்கை செலுத்துவதற்காக பிரிவினையை நடைமுறையில் கோரி நிற்கின்றனர் என்று சொல்ல முடியாது. பிரிந்து போகும் சுதந்திரத்தை எதிர்மறுப்பவர்கள் தத்துவார்த்தத்தில் தொடக்கத்திலிருந்து முடிவு வரைக்கும் தவறு செய்கிறார்கள். நடைமுறையில் ஒடுக்குகின்ற தேசத்து சோவனிஸ்டுகளின் அடிமைகளாகும். இதுதான் எங்களுக்குத் தெரியும். இதைத்தான் நாங்கள் ஒவ்வொரு நாளும் உணருகின்றோம்.

பி. கீவ்ஸ்கி எழுதுகிறார் தமது பிற்குறிப்பிலே; பலாத்காரமாக இணைப்பதற்கு எதிரான கோரிக்கைக்கு நாங்கள் ஒத்தாசையாக இருப்போம் என்று அடித்துக் கூறுகிறோம். சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பதற்குச் சமனான எங்களது மிகத்

www.padippakam.com



தெளிவான கூற்றுக்கு ஒரு தனிச் சொல்லாற்கூட விடையிறுக்கிறார் இல்லை. சுயநிர்ணய உரிமையோடு சம்பந்தப்படுத்திப் பார்க்காது விட்டால் 'இணைப்பு' என்பதற்கு சரியான வரைவிலக்கணம் கிடையாது. ஒரு கலந்துரையாடலில் ஒரு நியாயத்தையும் ஒரு கோரிக்கையையும் வழங்கினாற் போதும். அதற்கு ஒத்தாசையான சாட்சிகளை வழங்காமல் விடலாம் என்று கீவ்ஸ்கி நம்புகிறார் என்று நாம் முன்னனுமானிக்கலாம்.

அவர் தொடர்கிறார்....... "அவர்களுடைய எதிர்மறையான வழமைப்படுத்தலை (Negative Formulation) நாங்கள் முழுமையாக ஏற்றுக் கொள்கிறோம். பல கோரிக்கைகள் ஏகாதிபத்தியத்திற்கு எதிரான பாட்டாளிவர்க்க உணர்மையைக் கூர்மைப்படுத்துவன. ஆனால் இன்று நிலவும் அமைப்பை அடிப்படையாகக்கொண்டு அதற்கேற்ற நேரான வழமைப்படுத்தலை (Positive Formulation) இயம்புவதற்கு பரிபூரணமாக வாய்ப்பில்லை. யுத்தத்திற்கு எதிராக என்றால் ஆம், ஆனால் ஜனநாயக ரீதியான அமைதிக்கென்றால் இல்லை..."

பிழை..பிழை.... ஆதியிலிருந்து அந்தம் வரை பிழை. கீவ்ஸ்கி "சாந்தமும் சமாதானமும் –சுலோகம்" பற்றிய எங்களது தீர்மானத்தை வாசித்ததோடு (சோசலிசமும் யுத்தமும் என்ற குறுநூல்) அதை நல்லதென்று ஏற்றுக்கொண்டார் என்று நான் நம்புகிறேன். ஆனால் வெளிப்படையாகவே அவர் அதை விளங்கிக் கொள்ளவில்லை. இன்றைய முதலாளித்துவ அரசாங்க அமைப்புகளினுள்ளே ஒருகொள்ளை தொடர் புரட்சிகள் இல்லாமல் அப்படியொரு சமாதானம் வருமென்று சொல்வது செப்படி வித்தையென்று நாம் தொழிலாளர்களை எச்சரிக்கிறோம்! வர்க்கக் குணாம்சங்களைக் கருத்திற் கொள்ளாமல் அல்லது குறிப்பாக போர் நடாத்துகிற நாடுகளின் இப்போதைய அரசாங்கங்களின் ஏகாதிபத்தியக் குணாம்சத்தை கருத்திற் கொள்ளாமல் 'சூக்குமமாக' சமாதானத்திற்காகப் பரிந்து பேசுதல் தொழிலாளர்களை ஏமாற்றும் சதியாகும். இன்றைய யுத்தத்தின் போது புரட்சியானது எங்களது கட்சியை ஆட்சிக்குக் கொண்டுவருமானால் அந்த



படிப்பகம்

அரசாங்கமானது உடனடியாக யுத்தத்தில் ஈடுபடும் நாடுகளை ஜனநாயக சமாதானத்திற்கு வரும்படி பிரேரிக்கும் என்று சமூக ஜனநாயகப் பத்திரிகையின் 47வது இதழில் எழுதிய வியாசத்தில் நாம் திட்டவட்டமாகக் கூறினோம்.

தான் தனித்துச் சுயநிர்ணய உரிமையை மாத்திரம்தான் எதிர்த்ததாகவும், பொதுவாக ஜனநாயகத்தை எதிர்க்கவில்லை என்றும், நாம்தான் ஜனநாயக சமாதானத்தின் பக்கம் இல்லை என்றும் அடித்துக் கூறியதானது கீவ்ஸ்கி இப்பொழுது தன்னையும் மற்றவர்களையும் ஆவலோடு அதை நம்பச் செய்யும் முயற்சியாகும். நூதனமான தர்க்கம்.

அவர் காட்டிய மற்றைய உதாரணங்களிலே நேரத்தைக் கழிப்பது வீணாகும். அவற்றை நிராகரிப்பதில் பக்கங்களைச் செலவழிப்பது அர்த்தமற்றது. அவைகளும் அதேமட்டமான குழந்தைத்தனமானதும் பொய்யானதுமான தர்க்கந்தான். அது வாசகர்களை நகைக்கத்தான் வைக்கும். சமூக ஜனநாயகவாதிகள் ஆட்சிக்கு வந்தால் எப்படி இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பார்கள் என்ற நேரான தீர்வைக் கொடாமல், ஏகாதிபத்தியத்திற்கு எதிரான பாட்டாளி வர்க்கத்தின் உணர்மையை உயர்த்தவல்ல 'மறையான' சமூக ஜனநாயக சுலோகமென்று ஒன்று இல்லை. அப்படி இருக்கவும் முடியாது. ஒரு நேரான தீர்வோடு தொடர்பற்ற ஒரு 'மறையான' சுலோகம் பாட்டாளி வர்க்கத்தின் உணர்மையை மழுங்கடிக்கும். அப்படியான சுலோகம் ஒரு வெற்றுக் கோம்பையான வார்த்தை ஜாலம். உரத்த கூச்சல். அர்த்தமற்ற பிரசங்கம்.

அரசியற் கெடுதி செய்து அழியாத வடுவை ஏற்படுத்தும் 'மறையான' சுலோகத்திற்குமான வித்தியாசத்தை கீவ்ஸ்கியால் விளக்க முடியவில்லை. சில பொருளாதாரத் தீங்குகள் முதலாளித்துவத்தின் பகுதியாகும். அரசியல் மேற்கட்டுமானம் எப்படியிருந்தாலும் சரி, முதலாளித்துவத்தை இல்லாமற் செய்யாமல் அவற்றை பொருளாதார ரீதியில் இல்லாமல் செய்யமுடியாது

என்பதுவே உண்மையான வித்தியாசம் ஆகும். ஒருக்காலாவது அந்தக் கூற்றைப் பிழையென நிறுவ முனையவில்லை. மறுதலையாக நோக்குமிடத்து அரசியற் தீங்குகள் ஜனநாயகத்திலிருந்து விலகுவதாலேயே வருவதாகும். அவை இப்போது நிலவும் அமைப்புமுறையான முதலாளித்துவ அமைப்புமுறையிலே பொருளாதார ரீதியில் முழுமையாக நிகழக்கூடியன. அவை முதலாளித்துவத்தின்கீழ் விதிவிலக் கில்லாமல், சில விடயங்கள் ஒரு நாட்டில் பிரயோகிக்கற்பாலதாக இருந்தால் மற்றையவை வேறொரு நாட்டில் பிரயோகிக்கற் பாலதாகும். மேலும் சுருக்கமாகக் கூறின், ஜனநாயகத்தைப் பிரயோகிக்கக்கூடிய அடிப்படை நிலைமைகளை விளங்கத் தவறிவிட்டார் எங்கள் எழுத்தாளர்.

இதேமாதிரித்தான் விவாகரத்துப் பிரச்சினையுமாகும். இதை முதலில் தேசிய இனப்பிரச்சினை சம்பந்தமான கலந்துரையாட லின்போது ரோசா லக்சம்பேர்க் கூறினார் என்பது வாசகர்களுக்கு ஞாபகம் இருக்கும். நாங்கள் மையப்படுத்தப்பட்ட சமூக ஜனநாயகவாதிகளாதலால் ஓர் அரசின்கீழ் ஒரு திட்டவட்டமான பகுதிக்கோ நிலப்பரப்புக்கோ பிரதேச சுயாட்சி வழங்கியிருந்தால், நானாவித பெரிய தேசிய இனப்பிரச்சினைகளிலும், மத்திய அரசிலும் மத்திய பாராளுமன்றத்திலும், விவாகரத்து உரிமைச் சட்டத்தை அமுல்படுத்த வேண்டும் என்று அவர் மிக நியாயமான கூற்றைக் கூறியிருந்தார். விவாகரத்துக்கான பூரண உரிமையைக் கோராம லிருந்தால் ஒரு சோசலிசவாதியாகவும் ஜனநாயகவாதியாகவும் இருக்கமுடியாது என்பதை இந்த உதாரணம் தெளிவாக் காட்டுகிறது. இந்த உரிமை இல்லையென்றால் ஒடுக்கப்பட்ட பாலினர்க்கு மேலும் கூடுதலான ஒடுக்குமுறையாகும். இதை நிதர்சனமாக்குவது எவ்வளவு கடினமானதாக இருந்தாலும்கூட இதை அங்கீகரிக்க வேண்டும். இந்த கணவனை விட்டுவிலகும் சுதந்திரத்தை அங்கீகரிப்பதானது எல்லா மனைவிகளையும் கணவன்மாரை விடும்படியான அழைப்பிதழாகாது.

கீவ்ஸ்கி இதை பின்வருமாறு ஆட்சேபிக்கிறார் :

"இது என்ன உரிமை? இதை மூன்றாம் ஆளின்

விருப்பத்திற்காக மட்டும் நடைமுறைப்படுத்தலாம். அப்படியென்றால் அது இன்னும் கொடுமையாகும். அவளின் அன்பை மூன்றாம் ஆளிற்கு உரிமையாக்குவதற்காக ஆகும். அப்படியான உரிமைக்காக அறைகூவுவதை நாங்கள் ஏற்பதா? அபத்தம். ஒருநாளும் நாங்கள் இதை ஏற்கக் கூடாது!"

இந்த ஆட்சேபமானது பொதுவாக ஜனநாயகத்துக்கும் முதலாளித்துவத்துக்கும் இடையே நிலவும் உறவை பூரணமாக விளங்காததையே காட்டுகிறது. ஒடுக்கப்பட்ட வர்க்கங்கள் தங்களது ஜனநாயக 'உரிமைகளை' முதலாளித்துவத்தின் கீழ் அனுபவிக்கமுடியாததிற்கான சூழ்நிலை நிலவுவது ஒரு விதிவிலக்கல்ல. இந்த அமைப்புமுறையின் குணாம்சமே அதுதான். முதலாளித்துவத்தின் கீழே ஒடுக்கப்பட்ட பாலினர் பொருளாதார ரீதியில் அடிமைப்படுத்தப்பட்டபடியால் விவாகரத்து உரிமையானது அதிகமாக நிதர்சனம் ஆகாததாகும். முதலாளித்துவத்தின் கீழே எவ்வளவு ஜனநாயகம் இருந்தாலும்சரி, பெண்கள் வீட்டு அடிமையாகவும், பூட்டிவைக்கப்பட்ட பள்ளியறை பதுமையாகவும், குழந்தை வளர்ப்பு மற்றும் அடுப்படி வேலைக்காரியாகவும் மட்டுமே இருக்க முடியும். தங்களது; மக்கள் நீதிபதிகளை, உத்தியோகத்தர்களை, பள்ளியாசிரியர்களை, யூரிகள் போன்றோரை தேர்ந்தெடுக்கும் உரிமை முதலாளித்துவத்தின் கீழே நிதர்சனமாக்க முடியாததிற்கான காரணம்; சுருக்கமாகக் கூறுமிடத்து, தொழிலாளர்களும் விவசாயிகளும் பொருளாதார ரீதியில் அடிமைப்படுத்தப்பட்டமையே ஆகும். இதுவே ஜனநாயகக் குடியரசுக்கும் பிரயோகிக்கற்பாலது. எங்களின் வேலைத்திட்டம் 'மக்களின் அரசு' என்று வரையறுக்கின்றது. எல்லா சமூக ஜனநாயகவாதிகளுக்கும் நன்றாகவே தெரியும், முதலாளித்துவத்தின் கீழே அதியுயர் ஜனநாயகக் குடியரசிலேகூட உத்தியோகத்தர்கள் முதலாளிகளாலும், பங்குப் பரிவர்த்தனைக்காரரதும் அரசாங்கத்தின தும் கூட்டினாலும் லஞ்சத்திற்கு உள்ளாகக் கூடியவர்களாகும்.

நேராகச் சிந்திக்கத் தெரியாதவர்களும் மாக்சியத்திலே எந்த அறிவும் இல்லாதவர்களும் மாத்திரமே இந்த முடிவுக்கு வருவர்.

www.padippakam.com



அப்படியென்றால் ஒரு குடியரசு இருப்பதே அர்த்தமற்றது. விவாகரத்துச் சுதந்திரம் இருப்பதும் அர்த்தமில்லாதது. ஜனநாயகமும் அர்த்தமற்றது. தேசிய சுயநிர்ணய உரிமையும் அர்த்தமற்றது. ஜனநாயகம் வர்க்க ஒடுக்குமுறையை இல்லாமல் செய்யாதென்று மாக்சியவாதிகளுக்கு நன்றாகத் தெரியும். இது வர்க்கப் போராட்டத்தை நேரடியானதாக்கும், பரந்ததாக்கும், ஒளிவுமறைவு அற்றதாக்கும். அதுவே எங்களுக்குத் தேவையானதுமாகும். விவாகரத்துச் சுதந்திரம் எவ்வளவு பூரணமானதாக இருக்கின்றதோ அவ்வளவுக்கவ்வளவு பெண்கள் புரிந்துகொள்வர்— தாங்கள் 'வீட்டு அடிமைகளாக' இருப்பது முதலாளித்துவத்தினாலே ஒழிய உரிமைகள் பற்றாததனால் அல்ல என்று. எவ்வளவுக்கெவ்வளவு ஜனநாயகமுள்ளதாக அரசாங்கம் இருக்கின்றதோ அவ்வளவக்கவ்வளவு எளிதாக தொழிலாளர்கள் கண்டுகொள்வர்— இந்தத் தீங்குகளுக்கான காரணம் முதலாளித்துவமே ஒழிய உரிமைகள் பற்றாததால் அல்ல என்று. எவ்வளவக்கெவ்வளவு பூரணமாகத் தேசிய சமத்துவம் இருக்கின்றதோ (இது பிரிந்துபோகும் உரிமை இல்லாமல் பூரணமாகாது) அவ்வளவுக்கவ்வளவு தெளிவாக ஒடுக்கப்பட்ட தேசிய இனத்தவர் கண்டுகொள்வர்— ஒடுக்குமுறைக்கான காரணம் முதலாளித்துவமே ஒழிய உரிமைகள் பற்றாததால் அல்ல என்று. இன்னும் அப்படியே....

இது திருப்பித் திருப்பிச் சொல்லப்பட வேண்டும். மாக்சியத்தின் ஆனா ஆவன்னாவை மூட்டைகட்டி அனுப்புவது மனக்கிலேசம் தருவதாகும். என்ன செய்ய முடியும்? கீவ்ஸ்கிக்கு அது தெரியவில்லை. எனது ஞாபகசக்தி சரியென்றால், பரிசிலுள்ள 'எங்கள் குரல்' (Golos) பத்திரிகையாளர்களின் (இது ஒரு மென்செவிக் தினப் பத்திரிகை) வெளிநாட்டிலுள்ள அணிவகுப்புச் செயலாளர்களில் ஒருவரான செம்கோவ்ஸ்கியைப் போல (Semkovsky) அவர் விவாகரத்துப் பற்றி அதிகம் பிரசங்கிக்கிறார். அவர் கொடுக்கும் நியாயம், விவாகரத்துச் சுதந்திரம் எல்லா மனைவிமார்களையும் தங்களது கணவன்மார்களை விடும்படியான அழைப்பிதழ் இல்லைத்தான், உண்மையிலேயே



படிப்பகம்

www.padippakam.com

அப்படி இல்லைத்தான் – ஆனால், சீமாட்டியே! மற்றைய எல்லாக் கணவன்மார்களும் உனது கணவனிலும் சிறப்பானவர்களென்றால் அது கணவனை விடும்படியான அழைப்பிதழ்தான்!!

இப்படியான நியாயங்களும், இப்படி சுத்திவளைச்சு யோசிப்பதும் சோசலிச ஜனநாயக மூலதர்மங்களை மீறுவதாகும் என்பதை செம்கோவ்ஸ்கி மறந்துவிட்டார். செம்கோவ்ஸ்கி ஒரு பெண்ணுக்கு மற்றைய எல்லாக் கணவன்மார்களும் அவளுடைய கணவனிலும் சிறப்பானவர்கள் என்று சொல்வாரானால், ஒருவரும் இது ஜனநாயக மூலதர்மத்தை மீறுவதாக யோசிக்க மாட்டார்கள். அதிகமான மக்கள் சொல்வார்கள்: 74 பெரிய கட்சிகளினுள்ளே பெரிய குழப்பங்கள் இருக்குமென்று. ஆனால் செம்கோவ்ஸ்கி ஒரு ஜனநாயகவாதி என்ற முறையில் விவாகரத்துச் சுதந்திரத்தை எதிர்க்கும் ஒருத்தரைப் பாதுகாக்குமுகமாக நீதிமன்றத்துக்கோ, பொலீசுக்கோ, திருப்பள்ளிகளுக்கோ அவரது மனைவியை அவரிடமிருந்து பாதுகாக்கும்படி முறையிட்டாரென்றால், செம்கோவ்ஸ்கியின் வெளிநாட்டுச் செயலாளர் குளாத்தின் சகாக்கள் –அவர்கள் ஒரு கூடாத சோசலிசவாதிகளாக இருந்தாலும்கூட– அவருக்கு ஒத்தாசையாக இருக்கமாட்டார்கள் என்றே நாம் உணருகிறோம். செம்கோவ்ஸ்கி, கீவ்ஸ்கி இருவருமே 'விவாகரத்து' பற்றிய அவர்களது கலந்துரையாடலிலே பிரச்சினையையும் அதன் சாராம்சத்தையும் விளங்கத் தவறிவிட்டார்கள். முதலாளித்துவத்தின் கீழே மற்றைய ஜனநாயக உரிமைகளைப் போலவே விவாகரத்து உரிமையும் புறநீங்கலற்று நிபந்தனைக்கு உட்பட்டது, கட்டுப்பாட்டுக்கு உள்ளானது, சம்பிரதாயமானது, ஒப்பாசாரமானது, குறுகியதோடு நிதர்சனமாக்குவதற்குக் கடுமையானது என்பதை விளங்கத் தவறிவிட்டனர். தன்மானமுள்ள எந்தச் சமூக ஜனநாயகவாதிகளும் விவாகரத்து உரிமையை எதிர்க்கும் எவரையும் ஜனநாயகவாதிகளாகவோ, அதுவும் சோசலிசவாதியாகவோ, கருதமாட்டார்கள். இதுதான் விசயத்தின் மையக் கரு. எல்லா 'ஜனநாயகமுமே' உரிமைகளை அறிக்கையிடுவதையும் அவைகளை நிதர்சனமாக்குவதையும் தன்னகத்தே கொண்டுள்ளன. இந்த உரிமைகள்கூட





படிப்பகம்

www.padippakam.com



முதலாளித்துவத்தின் கீழே அற்பமாகவே நிறைவேற்றப்படக்கூடியன மாத்திரமல்ல, அவையும் சார்புரீதியாக மட்டுமே. இந்த உரிமை களை அறைகூவாமல், அவைகளை இப்பொழுதே உடனடியாக அமுலாக்குவதற்கு போராடாமல், அந்தப் போராட்ட அவாவினுள்ளே வெகுஜனங்களைப் பயிற்றியெடுக்காமல், சோசலிசம் முடியாத காரியமாகும்.

இதை விளங்கிக் கொள்ளாமல் கீவ்ஸ்கி எப்படி சமூக ஜனநாயகவாதிகள் தேசிய ஒடுக்குமுறையை இல்லாமல் செய்வார்கள் என்ற அவரது புலமைமிக்க விடயத்தின் மையப் பிரச்சினையை நழுவியோட விட்டுள்ளார். "உலகம் இரத்த வெள்ளத்தில் கழுவப்படும்" போன்ற வார்த்தை ஜாலங்களால் விடயத்தை அங்காலே தள்ளிவிடுகின்றார். (இருந்தபோதும் கலந்துரையாடிக் கொண்டிருக்கும் விடயத்தை இது தாங்கி வைத்திராது) இது ஒரு நியாயத்தை மட்டும் விட்டு வைத்திருக்கும். சோசலிசப் புரட்சி ஒரு சர்வரோக நிவாரணி! அல்லது வேறுவிதமான நியாயத்தைச் சிலபேர் சொல்வர்: சுயநிர்ணய உரிமையானது முதலாளித்துவத்தின் கீழே நிறைவேற்ற முடியாத ஒன்றாகும். சோசலிசத்தின் கீழ் அது மிதமிஞ்சியதாகும்.

தத்துவார்த்த நோக்கில் இந்தப் பார்வை அர்த்தமற்றதாகும். நடைமுறை அரசியலில் இது ஒரு சோவனிசமாகும். (Chauvanistic -பேரின மேட்டுமைவாதம்) இது ஜனநாயக த்தின் முக்கியத்துவத்தை ஏற்கத் தவறியதாகும். ஜனநாயகம் இல்லாமல் சோசலிசம் இயலாத ஒன்றாகும்.

ஏனெனில்,

1. ஜனநாயத்திற்காகப் போராடாவிடில் பாட்டாளி வர்க்கத்தால் புரட்சியைச் செய்ய முடியாது.

2. வெற்றிவாகை சூடிய சோசலிசம் பரிபூரண ஜனநாயகத்தை அமுல்படுத்தாமல் அந்தச் சோசலிசத்தை கெட்டியாக்கி மானிட சமுதாயத்திலே அரசை உலர்ந்து உதிரச் செய்யமுடியாது. சோசலிசத்தின் கீழ் சுயநிர்ணய உரிமையானது மிதமிஞ்சி வழிவது என்று கூறுவதே அர்த்தமற்றதாகுவதோடு, சோசலிசத்தின் கீழ்



படிப்பகம்

www.padippakam.com

ஜனநாயகம் மிஞ்சி வழியுமென்று சொல்லி தேவையற்று குழப்புவதாகும்.

சோசலிசத்தின் கீழ் பொதுவாக ஜனநாயகம் போலவே சுயநிர்ணய உரிமை மிதமிஞ்சி வழிவது மாதிரி முதலாளித்துவத்தின் கீழும் சுயநிர்ணய உரிமை நிதர்சனமாக்கக்கூடிதுதான்.

பொருளாதாரப் புரட்சியானது நானாவித அரசியல் ஒடுக்குமுறைகளையும் இல்லாமல் செய்வதற்கு வேண்டிய முன்நிபந்தனைகளை உருவாக்கும். இந்தக் காரணத்தினாலேதான் எல்லாவற்றையும் பொருளாதாரப் புரட்சியினுள்ளே சுருக்குவது தர்க்க நியாயம் அற்றதாகும். பிரச்சினை என்னவென்றால் எப்படி தேசிய ஒடுக்குமுறையை இல்லாமல் செய்வது என்பதாகும். பொருளாதாரப் புரட்சி இல்லாமல் அதை இல்லாமல் செய்யமுடியாதுதான். இதற்குச் சவால்விட இயலாது. எங்களை அதற்குள்ளே மட்டுப்படுத்திவிடுவது முட்டாள்தனம் மாத்திரமல்ல, வெறும் ஏகாதிபத்தியப் பொருளாதாரவாதமாகும்.

நாங்கள் தேசிய சமத்துவத்தை ஏற்படுத்த வேண்டும். எல்லாத் தேசிய இனங்களுக்குமான சமத்துவத்தை அறைகூவித் தெளிவாகச் சொல்லி அந்த உரிமையை அமுல்படுத்த வேண்டும். இதை ஏற்றுக்கொள்பவர்கள் சிலவேளைகளில் கீவ்ஸ்கியைக் காப்பாற்றக் கூடும். ஆனால் இது, "தேசிய அரசை உருவாக்குவதை நிராகரிப்பது சமத்துவத்தை நிராகரிப்பதாகாதா?" என்று கீவ்ஸ்கி தொடுத்த பிரச்சினையைக் கிளப்புகிறது.

கட்டாயம் அப்படித்தான். உண்மை இதுதான். சோசலிசவாதிகளும் ஜனநாயகவாதிகளும் சுயநிர்ணய உரிமையை அறைகூவி, தெளிவாகச் சொல்லி இந்த உரிமையை அமுல்படுத்தவும் வேண்டும். இந்த உரிமையை அமுல்படுத்தாமல் தேசங்கள் தாங்களாகவே பூரணமாக விரும்பி இணைவதற்கான வழி திறவென்றாலும் திறவாது.





படிப்பகம்

CONCLUSION
ALEXINSKY
METHODS

# முடிவுரை, அலெக்ஸின்ஸ்கியின் முறை

நாங்கள் கீவ்ஸ்கியின் ஒரு பகுதி நியாயங்களை மாத்திரம் ஆய்வு செய்தோம். அதை முழுமையாக ஆய்வு செய்வதென்றால் இக்கட்டுரை ஐந்து மடங்காகப் பெருக்கும். ஆனால் அவைகளில் ஒரு சின்னச் சரியான பார்வையும் இல்லையாகும். அங்கே பிற்குறிப்பிலிருந்த வங்கிகள் பற்றிய புள்ளிவிபரங்கள் மாத்திரம்தான் சரியாக இருந்தன. மற்றையவையெல்லாம் நடக்க முடியாத, சிக்கலான, தெளிவின்மை ஏற்படுத்தும் வசன மொங்கான்களாகும். 'அதிருகின்ற உடம்பிலே ஈட்டி பாய்ச்சியது போல்....', 'நாங்கள் வெற்றி கொண்ட வீரர்களை எடைபோடக் கூடாது. அவர்களைக் கண்டித்து எமனுலகம் அனுப்ப வேண்டும்', 'சேடமிழுக்கிற மரணவலிப்பிலே புதுவுலகம் பிறக்கும்', 'சாசனம் வழங்குவதும் உரிமை வழங்குவதுமல்ல பிரச்சினை, தேசங்களின் சுதந்திரங்களை அறிக்கையிடுவதுமல்ல', 'ஒரு விசுவாசமான உறவை நிர்மாணிப்பது', 'கிளடு தட்டிய அடிமைத்தனத்தையும் சமூக ஒடுக்குமுறையையும் பொதுவாக இல்லாமல் செய்வது!, குறிப்பாக தேசிய ஒடுக்குமுறையை இல்லாமல் செய்வது.........' போன்ற வசனங்களாகும்.

இந்த வார்த்தை ஜாலங்கள் ஒரு கல்லிலே இரண்டு மாங்காயை விழுத்துகின்றன. இரண்டு விசயங்களைப் பூசி மெழுகுகின்றன. முதலாவது, ஏகாதிபத்தியப் பொருளாதாரவாதம் என்ற எண்ணக்கரு'. இது அருவருப்பூட்டும் மாக்சியக்கேலிக்கூத்தாகும். இது சோசலிசத்திற்கும் ஜனநாயகத்திற்கும் இடையேயுள்ள உறவை முழுமையாகப் பிழையாக வியாக்கியானம் செய்வது. காலம்கடந்த கிஞ்சித்தும் விசனப்படாத 1894–1902 காலத்தைய பொருளாதாரவாதமாகும்.

இரண்டாவதாக, அலெக்ஸின்ஸ்கியின் வழிமுறையான வசனங்களை மீட்டுப் பாவிப்பதாகும். இதை விசேடமாக அடித்துக்



படிப்பகம்

கூறவேண்டும். பாடம்-2 ஆனது யூதர்களின் விசேட நிலைமை பற்றிய கீவ்ஸ்கியின் முழுக் கட்டுரையும் இதே வழிமுறையிலேயே எழுதப்பட்டுள்ளன. 1907 லண்டன் காங்கிரசிலே போல்ஷெவிக்குகள் அலெக்ஸின்ஸ்கியோடு உறவை முறித்துக் கொண்டார்கள். அவர் ஒரு பிரச்சாரப் பீரங்கி மாதிரி ஏதோ அந்த மாதிரியானதோ இந்த மாதிரியானதோவான, சுரண்டலையும் ஒடுக்குமுறையையும் எதிர்ப்பதாக, பூரணமாக ஒத்துவராத வசன மொங்கான்களைப் போடுவார். அவர் மீண்டும் தனது கூச்சலை தொடங்கியதுதான் தாமதம் "ஊளையிடுதல் அலெக்ஸின்ஸ்கிக்கு நன்மையளிக்காது" என்று அங்கு வந்த பிரதிநிதிகள் சொல்லவேண்டி வந்தது.

**முடிவுரா, அலெக்ஸின்ஸ்கியின் முறை**

அதே மாதிரியான கூச்சல் தான் கீவ்ஸ்கியின் கட்டுரையிலும். அவர் எங்களது வியாசத்திலே கூறியிருந்த தத்துவார்த்தப் பிரச்சினைகளுக்கும் நியாயங்களுக்கும் விடையிறுக்கவில்லை. ஒரு பிரச்சாரப் பீரங்கி மாதிரி யூதர்களின் ஒடுக்குமுறை பற்றிக் கூச்சலிடுகின்றார். அவரது கூச்சலுக்கும் யூதர்களின் பிரச்சினைகளுக்கும் நாம் கலந்துரையாடிக் கொண்டிருக்கும் பிரச்சினைக்கும் ஒரு சம்பந்தமும் இல்லையென்பது எந்த பகுத்தறிவுள்ளவர்க்கும் விளங்கும். அலெக்ஸின்ஸ்கியின் வழிமுறை நல்லதைச் செய்யாது. அவரது "பலாத்காரமான இணைப்புக்கு எதிரான கோரிக்கைக்கும் பூரண ஆதரவு வழங்குவோம்" என்பது சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பதற்குச் சமமாகுமா? என்று நாம் தெட்டத் தெளிவாகக் கேட்ட கேள்விக்கு ஒரு சின்னச் சொல்லால் கூட விடையிறுக்கவில்லை. சுயநிர்ணய உரிமையோடு ஒப்புநோக்காமல் 'இணைப்பு' என்ற எண்ணக் கருவைச் சரியாக வரையறுக்கமுடியாது. ஒரு கலந்துரையாடலில் நியாயங்களை முன்வைத்தால் போதும், இந்த நியாயங்களை தெளிவாக்கும் உண்மையான சாட்சியங்களை காட்டத் தேவையில்லை என்று கீவ்ஸ்கி நம்புகிறார் என்று தோன்றுகிறது.

அவர் மேலும் தொடர்கிறார்..... "அவர்களது மறையான முறைப்படுத்துதலாலான அனேககோரிக்கைகள் ஏகாதிபத்தியத்திற்கு எதிரான பாட்டாளி வர்க்க உணர்மையைக் கூர்மையாக்குகின்றன

www.padippakam.com



என்று நாங்கள் பூரணமாக ஏற்றுக் கொள்வோம். ஆனால் இன்று நிலவுகின்ற அமைப்பு முறைக்கு ஏற்றாற் போன்ற நேரான முறைப்படுத்தலை எழுதுவதற்குப் பரிபூரணமாகச் சாத்தியக் கூறுகள் இல்லையாகும். யுத்தத்திற்கு எதிராகவென்றால், ஆம்! ஆனால் ஜனநாயகத்தோடான அமைதிக்காகவென்றால், இல்லை!....”

பிழை... முதற் சொல்லிருந்து கடைசிச் சொல்வரை பிழை! கீவ்ஸ்கி 'சோசலிசமும் யுத்தமும்' என்ற எங்களது குறுநூலில் இருந்த 'அகிம்சையும் அமைதியும் சுலோகத்தைப் பற்றிய' எங்களது பிரேரணையை வாசித்திருப்பார். வாசித்ததோடு அதை ஏற்றுக் கொண்டிருப்பார் என்று நம்புகின்றேன். ஆனால் வெளிப்படையாக அதை அவர் விளங்கவில்லை. நாங்கள் ஜனநாயக அமைதியின் பக்கமே, எங்களது பிரேரணை சுட்டிக் காட்டியது போல, அத்தகைய அமைதியானது இன்றைய முதலாளித்துவ அரசாங்கங்களில் ஒரு தொகை தொடர் புரட்சிகளினாலல்லாமல் சாத்தியமென்று கூறுவது ஒரு மோசடியாகுமென்று தொழிலாளர்களை எச்சரிக்கின்றோம். இந்த 'அருவமான' சமாதானத்தை ஆதரிப்பவர்கள் தொழிலாளர்களை மோசடி செய்கிறார்கள் என்று பகிரங்கமாகக் கண்டிக்கிறோம். அதாவது அவர்கள் உண்மையான வர்க்க நிலைமைகளைக் கருத்திற் கொள்ளாமல் அல்லது விசேடமாக இன்று போர் செய்கின்ற நாடுகளின் அரசாங்கங்களின் ஏகாதிபத்தியத் தன்மையை கருத்திற் கொள்ளாமல் சொல்கிறார்கள். இன்றைய யுத்தகாலத்தில் புரட்சியானது எங்களை ஆட்சிக்குக் கொண்டுவருமானால் இந்த அரசாங்கம் உடனே போர் செய்யும் நாடுகளை அமைதிக்கு வரும்படி பிரேரிக்குமென்று நாம் எங்களது சமூக ஜனநாயகம் பத்திரிகையின் 47ம் இதழில் வந்த வியாசத்தில் திட்டவட்டமாகக் கூறினோம்.

இன்று கீவ்ஸ்கி தான் சுயநிர்ணய உரிமையை மாத்திரம் எதிர்ப்பதாகவும் பொதுவாக எல்லா ஜனநாயகத்தையும் எதிர்க்கவில்லை என்றும், நாங்கள் தான் “ஜனநாயக அமைதியின்



படிப்பகம்

www.padippakam.com

பக்கம் இல்லை" என்றும் அடித்துக்கூறி தன்னையும் மற்றவர் களையும் அதை நம்பச்செய்ய அவாவுள்ளவராக இருக்கிறார். புதுமையான நியாயம்!

**முடிவுரை, அலெக்ஸின்ஸ்கி யின் முறை**

அவரது மற்றைய உதாரணங்களிலேயே நேரத்தைக் கழிக்க வேண்டிய அவசியமில்லை. அவைகளை நிராகரிப்பதிலே பக்கங்களை வீணாக்குவது புத்திசாதுரியமாகாது. அவைகளும் குழந்தைத்தனமான உண்மையற்ற நியாயங்கள் தான். அது வாசகர்களை சிரிக்க வைக்கச் செய்ய மாத்திரம் தான் உதவும். சமூக ஜனநாயகவாதிகள் ஆட்சிக்கு வந்தால் எப்படி தேசிய இனப் பிரச்சினையைத் தீர்ப்பார்கள் என்பதற்கான நேரான விடையில்லாமல் தனியே ஏகாதிபத்தியத்திற்கு எதிராக பாட்டாளி வர்க்கத்தின் உணர்மையைக் கூர்மைப்படுத்தும் 'மறையான' சமூக ஜனநாயகவாத சுலோகம் என்று ஒன்றில்லை. திட்டவட்டமான நேரான தீர்வோடு தொடர்பில்லாத ஒரு 'மறையான' சுலோகம் ஒரு நாளும் உணர்மையைக் கூர்மையடையச் செய்யாது. மாறாக இன்னும் மழுங்கடிக்கச் செய்யும். அப்படியான சுலோகம் வெறும் ஊளையிடலும் அர்த்தமில்லாத ஆலாவருணமுமாகும்.

அரசியற் தீங்கை ஏற்படுத்தும் 'மறையான' சுலோகத்திற்கும், பொருளாதாரத் தீங்கை ஏற்படுத்தும் 'மறையான' சுலோகத்திற்கும் இடையிலேயுள்ள வித்தியாசத்தை கீவ்ஸ்கி விளங்கவில்லை. சில பொருளாதாரத் தீங்குகள் முதலாளித்துவத்தினால் உண்டாவன. அரசியல் மேற்கட்டுமானம் என்னவாக இருந்தாலும் முதலாளித்துவத்தை அகற்றாமல் அந்தப் பொருளாதாரத் தீங்கை அகற்ற முடியாததென்பதிலே தான் அந்த வித்தியாசம் இருக்கின்றது. இதை பிழையென்று நிறுவ எப்படியென்றாலும் ஒரு சின்ன ஆதாரத்தையாவது காட்டவில்லை. மறுதலையாகச் சொல்வதென்றால் ஜனநாயகத்தை விட்டு விலகுவது தான் அரசியற் தீங்கு. நிலவுகின்ற பொருளாதார அடிப்படையில் இது பொருளாதார ரீதியில் பூரணமாக சாத்தியமாகும். அதாவது முதலாளித்துவ முறையில், இந்த அரசியற் தீங்கு, எந்தவித புறநீங்கலும் இல்லாமல் ஒரு நாட்டில் ஒரு ரகமென்றால் வேறொரு நாட்டில் வேறொரு



படிப்பகம்

ரகமாக நிர்மாணிக்கப்படுகிறது. மேலும் சுருக்கமாகக் கூறுவதென்றால், ஜனநாயகத்தை நிர்மாணிப்பதற்கு அத்தியாவசியமாக வேண்டிய பொதுவான அடிப்படை சூழ்நிலைமைகளை எழுத்தாளர் விளங்கத் தவறிவிட்டார்!

விவாகரத்துப் பிரச்சினையிலும் இதுவே பிரயோகிக்கப்படுகிறது. வாசகர்களுக்கு ஞாபகமிருக்கும்– இதை முதன்முதலாக தேசிய இனப் பிரச்சினையின் கலந்துரையாடலிலே றோசா லக்சம்பேர்க் சொல்லியிருந்தார். நறுக்குத் தெறித்த நியாயமான அபிப்பிராயத்தை அவர் வெளிப்படுத்தியிருந்தார். நாம் ஓர் அரசியற் பிரதேச சுயாட்சிக்கு சம்மதம் தெரிவித்தால் (ஒரு திட்டவட்டமான பகுதியில், பரப்பளவில்....) நாங்கள் மையப்படுத்தப்பட்ட சமூக ஜனநாயகவாதிகளாதலால் ஒவ்வொரு முக்கியமான தேசியப் பிரச்சினைகளிலும், விவாகரத்துச் சட்டம், மத்தியஅரசாங்கத்தினதும் மத்திய பாராளுமன்றத்தினதும் சட்டதிட்டங்களிலே வரவேண்டும் என்று நிர்ப்பந்திப்போம். இந்த உதாரணம் வெளிப்படையாகக் காட்டும், பூரண விவாகரத்து உரிமையைக் கோராமல் ஒருவர் ஜனநாயக வாதியாகவும் இருக்க முடியாது. ஏனெனில் அந்தச் சுதந்திரம் இல்லையென்றால் ஒடுக்கப்பட்ட பாலான பெண்களுக்கு மேலும் கூடுதலான ஒடுக்குமுறையாகும். இதை சாதிப்பதும் கஷ்டமல்ல. கணவனை விடுவதற்கான சுதந்திரத்தை அங்கீகரிப்பது எல்லாப் பெண்களையும் விவாகரத்துச் செய்யும்படி சொல்லுவதாகாது.

கீவ்ஸ்கி ஆட்சேபிக்கிறார்.

"இந்த விவாகரத்து உரிமையென்றால் என்ன?"

"மனைவி தன் கணவனை விட விரும்பினாலும் கூட அவர் தனது உரிமையை அனுபவிக்க முடியுமா? மூன்றாமவரில் தங்கிநின்று அந்த உரிமையை நடைமுறைப்படுத்தினால் பிரச்சினை மேலும் கொடியதாகும். மூன்றாமவர் தனது வாஞ்சைக்கு அவர்மேல் உரிமை கொண்டாடுவார். அப்படியான உரிமையை அறிக்கையிடுவதை நாங்கள் ஆதரிக்கலாமா? கட்டாயம் ஆதரிக்கக் கூடாது!"

www.padippakam.com

பொதுவாக ஜனநாயகத்திற்கும் முதலாளித்துவத்திற்கும் இடையேயுள்ள உறவை பூரணமாக விளங்கத் தவறியதையே அவரது ஆட்சேபம் காட்டுகிறது. ஒடுக்கப்பட்ட வர்க்கங்கள் தங்களது ஜனநாயக உரிமைகளை அனுபவிக்காது விடுவதற்கான சூழ்நிலைகள் முதலாளித்துவத்தினுள்ளே விதிவிலக்கானவையல்ல. இந்த முதலாளித்துவ அமைப்பு முறைக்கு அது பொதுவானது. ஒடுக்கப்பட்ட பாலை பொருளாதாரத்தால் அடக்குவதால் முதலாளித்துவத்தின் கீழே அதிகமான பட்சங்களில் விவாகரத்து உரிமை நடைமுறைப்படுத்தற் பாலதன்று. எவ்வளவுதான் ஜனநாயகம் முதலாளித்துவத்தின் கீழ் இருந்தாலும் பெண்கள் வீட்டு அடிமைகளாகவும், பள்ளியறைப் பதுமைகளாகவும் அடுப்படி, குழந்தைவளர்ப்பு அடிமைகளாகவுமே இருக்க முடியும். முதலாளித்துவத்தின் கீழ் தொழிலாளர்களும் விவசாயிகளும் பொருளாதார ரீதியில் பணியப்பண்ணி வைக்கப்பட்டுள்ளதால் அவர்கள் தங்களின் நலனைப் பேணக்கூடிய நீதிபதிகளையும், நிர்வாகிகளையும், பள்ளியாசிரியர்களையும், யூரிகள் போன்றவர் களையும் தேர்ந்தெடுக்கும் உரிமையை அதிகமாகச் சாதிக்க முடியாதவர்களாக இருக்கிறார்கள். இதுவே ஜனநாயகக் குடியரசு க்கும் பிரயோகிக்கற்பாலது. இது மக்களின் அரசாங்கமென்று எங்களின் வேலைத்திட்டம் வரையறுக்கிறது. முதலாளித்துவத்தின் கீழ் ஏன் நல்ல ஜனநாயகக் குடியரசுகளின் உத்தியோகஸ்தர்கள்கூட முதலாளிகளதும் பங்குப் பரிவர்த்தனைக் காரர்களதும் அரசாங்கத் தினதும் ஊழலுக்கு உட்படுத்தப்படுவர் என்று சமூக ஜனநாயக வாதிகளுக்கு நன்றாகத் தெரிந்தபோதும் இப்படி வரையறுத்தோம்.

நேராக யோசிக்க முடியாதவர்களும் மாக்சிய அறிவு இல்லாதவர்களும் மாத்திரம் தான் பின்வருமாறு முடிவெடுப்பர் : குடியரசை வைத்திருப்பதிலே அர்த்தமில்லை. விவாகரத்துக்கான சுதந்திரத்தை வைத்திருப்பதிலே அர்த்தமில்லை, ஜனநாயகம் அர்த்தமில்லாதது, தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை அர்த்தமில்லாதது என்று!. மாக்சியவாதிகளுக்குத் தெரியும்– ஜனநாயகம் வர்க்க ஒடுக்குமுறையை இல்லாமல் செய்யாதென்று. இது வர்க்கப் போராட்டத்தை நேரடியானதாகவும், பரந்ததாகவும்,





படிப்பகம்

மிக வெளிப்படையானதாகவும் செய்யும். எங்களுக்கு வேண்டியதும் அதுதான். எவ்வளவு முழுமையாக விவாகரத்துச் சுதந்திரம் இருக்கின்றதோ அவ்வளவுக்கவ்வளவு தெளிவாகப் பெண்கள் காண்பார்கள். தம்மை வீட்டு அடிமைகளாகச் செய்யும் மூல ஊற்று முதலாளித்துவமேயொழிய உரிமைகள் பற்றாததல்ல என்று. எவ்வளவு அதிகளவு ஜனநாயக அமைப்புமுறை அரசாங்கம் இருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு தெளிவாக தொழிலாளர் காண்பர்-- தீங்கின் ஆணிவேர் முதலாளித்துவமே ஒழிய உரிமைகள் பற்றாததாலல்ல என்று. எவ்வளவு முழுமையாக தேசிய இனங்களின் சமத்துவம் இருக்கிறதோ (பிரிந்துபோகும் சுதந்திரமில்லாமல் அது முழுமையடையாது) அவ்வளவுக்கவ்வளவு தெளிவாக ஒடுக்கப்பட்ட தேசிய இனத்தின் தொழிலாளர் காண்பர், ஒடுக்குமுறையின் மூல இடம் முதலாளித்துவமேயொழிய உரிமைகள் பற்றாததால் அல்ல என்பதை.

இது திரும்பத் திரும்ப சொல்லப்பட வேண்டும். மாக்சியத்தின் ஆனா ஆவன்னாவை உள்வீட்டிலே படிப்பிப்பதும் மிகவும் சங்கடமானது தான். என்ன செய்வது, கீவ்ஸ்கிக்கு அது தெரியாமல் இருக்கிறது.

அவர் விவாகரத்துப் பற்றி வெளிநாடுகளில் ஸ்தாபனச் செயலாளர்களில் ஒருவரான (Semskovsky) செம்கோவ்ஸ்கி எனது ஞாபகசக்தி சரியென்றால் பரிசிலிருந்து வெளியான (GOLOS) 'எங்கள் குரல்' பத்திரிகையில் கூறியது போன்று கூறுகிறார். விவாகரத்துச் சுதந்திரத்திற்கு எதிராக அவர் கூறும் நியாயம். இது எல்லா மனைவிமார்களுக்கும் கணவன்மாரை விடும்படியான அழைப்பிதழாகும். என்கிறார். சீமாட்டியே! எல்லாக் கணவன்மார்களும் உன்னுடையதிலும் பார்க்க நல்லவர்களாக இருந்தால்; இது கணவனை விடும்படியான அழைப்பிதழாக ஏன் இருக்கக் கூடாது!!

தலைகீழாக யோசித்து இந்த நியாயத்தை எடுத்துக்கொண்டது சோசலிசமோ அன்றேல் ஜனநாயக மூலதர்மங்களை உடைத்தெறிவ தாகும் என்று செம்கோவ்ஸ்கி மறந்து விட்டார். செம்கோவ்ஸ்கி, ஒரு பெண்ணுக்கு அவளுடைய கணவனிலும் பார்க்க மற்றைய

கணவன்மார் நல்லவர்கள் என்று சொல்வராயிருந்தால், ஒருத்தரும் இதை ஜனநாயகமூலதர்மங்களை உடைப்பதாக; இதை அங்கீகரிக்க மாட்டார்கள். அதிகமான மக்கள் சொல்வார்கள்— பெரிய கட்சிக்குள்ளே பெரிய மூளைக் குழப்பம் நிலவுகிறதென்று. ஆனால் செம்கோவ்ஸ்கி, விவாகரத்துச் சுதந்திரத்தை எதிர்க்கும் ஒருவனை, ஒரு ஜனநாயகவாதி என்ற முறையில் பாதுகாப்பவராக அவனது மனைவி அவனை விட்டுப் பிரிவதை பொலிசும், சேர்ச்சும் தடைசெய்ய வேண்டுமென்று நீதவான் கோட்டுக்கு மனுச் செய்வதைச் சிரமேற் கொண்டாரானால், அதிகமான செம்கோவ்ஸ்கியின் வெளிநாட்டுச் செயலாளர் குழுமத்திலுள்ள சகபாடிகள், அவர்கள் கூடாத சோசலிஸ்ட்டுகளாக இருந்த போதிலும், ஒத்தாசை வழங்க மாட்டார்கள் என்று நாங்கள் உணருகிறோம்!

செம்கோவ்ஸ்கி, கீவ்ஸ்கி இரண்டு பேருமே அவர்களது விவாகரத்து உரிமை சம்பந்தமான கலந்துரையாடல்களில் பிரச்சினையை விளங்கத் தவறியதோடு அதன் சாராம்சத்தையும் தட்டிக் கழித்துள்ளார்கள். அதாவது முதலாளித்துவத்தினுள்ளே மற்றைய உரிமைகளைப் போலவே விவாகரத்து உரிமையும் புறநீங்கலற்று நிபந்தனைக்குட்பட்டது, கட்டுப்படுத்தப்பட்டது, வெறும் சம்பிரதாயமானது, குறுகியது, நிதர்சனத்தில் அடைவத ற்குக் கடினமானது.

தன்மானமுள்ள சமூக ஜனநாயகவாதிகளெவரும் விவாகரத்து உரிமையை எதிர்க்கும் எவரையும் ஜனநாயகவாதிகளென்றோ சோசலிசவாதிகளென்றோ கருதமாட்டார்கள். கடினமான பிரச்சினை இதுதான். எல்லா ஜனநாயகமுமே உரிமைகளை அறைகூவுவதை யும் அடைவதையும் கொண்டதாகும். இவை முதலாளித்துவ த்தின் கீழ் ஆக அருமையாகவே அடையப்படுவதும், அதுவும் சார்புரீதியானதாகும். இந்த உரிமைகளை அறிக்கையிடாமல் அதை உடனடியாகப் புகுத்த இப்பவே போராடாமல் அதை அடைவத ற்காகப் போராடும் அவாவினுள்ளே மக்களைப் பயிற்றியெடுக்காவிடில் சோசலிசம் முடியாத காரியமாகும்.

**முடிவுரை, அலெக்ஸின்ஸ்கி யின் முறை**

கீவ்ஸ்கியின் விஷேட பாடமான எப்படி சமூக ஜனநாயகவாதிகள் தேசிய ஒடுக்குமுறையை இல்லாமல் செய்வது என்பதை விளங்கத் தவறியதோடு மையப் பிரச்சினையை நழுவி ஓடவும் விட்டுள்ளார். உலகம் 'இரத்த வெள்ளத்தில் நனைகின்றது' போன்ற வார்த்தை ஜாலங்களைப் பேசிப் பிரச்சினைக்கு வேறு வாய்க்கால்கட்டி வழிந்தோடவிடப் பார்க்கிறார் (சம்பந்தமில்லாத விஷயங்களைப்பேசி). இது ஒரு நியாயத்தை விட்டு வைத்துள்ளது. சோசலிசப் புரட்சி எல்லாப் பிரச்சினையையும் தீர்க்கும்! அல்லது முதலாளித்துவத்தின் கீழ் சுயநிர்ணய உரிமை அடைய முடியாத ஒன்று. சோசலிசத்தின் கீழ் சுயநிர்ணய உரிமை தேவைப்படாத ஒன்று என்ற விவாதங் களை சிலர் முன்வைத்தார்கள்.

தத்துவார்த்த நிலைப்பாட்டில் இந்தப் பார்வை அர்த்தமில்லாதது. நடைமுறை நிலைப்பாட்டில் இது சோவனிஸ்ட் ஆனது. இது ஜனநாயகத்தின் முக்கியத்துவத்தைப் பாராட்டத் தவறிவிட்டது. ஜனநாயகமில்லாமல் சோசலிசம் சாத்தியமில்லை.

ஏனெனில்,

1. ஜனநாயகத்திற்காகப் போராடுவதற்குள்ளே பாட்டாளி வர்க்கத்தைத் தயாரிக்காமல் பாட்டாளி வர்க்கம் சோசலிசப் புரட்சியைச் செய்ய மாட்டார்கள்.

2. ஜனநாயகத்தை அமுல்படுத்தாமல் வெற்றிவாகை சூடிய சோசலிசம் தனது வெற்றியைக் கெட்டியாக்க மாட்டாததோடு அரசை உலர்ந்து உதிரச் செய்வதற்கு மானிடத்தைக் கொணரவும் மாட்டாது. சோசலிசத்தின் கீழ் ஜனநாயகம் தேவையில்லையென்று தடுமாறுவதைப் போல சோசலிசத்தின்கீழ் சுயநிர்ணய உரிமை தேவையில்லையென்பதும் அர்த்தமில்லாததாகும்.

சோசலித்தின் கீழ் பொதுவாக எல்லா ஜனநாயக உரிமைகளும் மிஞ்சிவழிவதைப் போலவே சுயநிர்ணய உரிமையும் இருப்பதால் ஜனநாயகத்தின் கீழ் சுயநிர்ணய உரிமை சாதிக்கப்பட முடியாத ஒன்றல்ல.

www.padippakam.com



பொருளாதாரப்புரட்சி நானாவித அரசியல் ஒடுக்குமுறைகளையும் இல்லாமல் செய்யக் கூடிய சூழ்நிலைமைகளை உருவாக்கும். சுருங்கக் கூறின் இந்தக் காரணத்திலே தான் எல்லாவற்றையும் பொருளாதாரப் பிரச்சினைக்குச் சுருக்குவது நியாயமற்றதும் சரியற்றதும் ஆகும். கேள்வி என்ன வென்றால், எவ்வாறு தேசிய ஒடுக்குமுறையை இல்லாமல் செய்யலாம்? பொருளாதாரப் புரட்சியில்லாமல் இதை அகற்றவே இயலாது. இந்த உண்மைக்கு எவரும் சவால்விட இயலாது. எங்களை இதனுள்ளே மட்டுப்படுத்தி முட்டாள்தனத்துள் நழுவி விழுவது துர்ப்பாக்கியமான ஏகாதிபத்திய பொருளாதாரவாதமாகும்.

நாங்கள் தேசியங்களின் சமத்துவத்தைக் கட்டாயம் ஏற்படுத்த வேண்டும். அதை அதிகாரபூர்வமாகப் பிரகடனப்படுத்த வேண்டும். தேசியங்களின் சமத்துவத்தை முறைப்படுத்தி அதை நடைமுறை யில் சாதிக்க வேண்டும். இதனோடு உடன்பாடுடைய எல்லோரும் சிலவேளைகளில் கீவ்ஸ்கியைக் காப்பாற்றலாம். இது கீவ்ஸ்கி தட்டிக்கழித்த ஒரு பிரச்சினையைக் கிளப்புகிறது. தேசியஅரசுகளை உருவாக்கும் உரிமையை எதிர்மறுப்பது சமத்துவத்தை எதிர்மறுப்பதாகுமா?

கட்டாயம் அதுதான். உறுதியாக அதாவது சோசலிசவாதிகளும் ஜனநாயகவாதிகளும் அந்த உரிமையைப் பிரகடனப்படுத்தி முறைப் படுத்தி நடைமுறைப்படுத்த வேண்டும். இது இல்லையென்றால் அரசுகள் தாமே பூரணமாக இசைந்து இயங்குவதற்கும் சங்கமமாவதற்கும் வழி திறவாது!



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# கம்யூனிசமும் தேசிய இனப் பிரச்சினையும்

## COMMUNISM AND THE PROBLEM OF NATIONALITY

*இந்தக் கட்டுரை 1919ம் ஆண்டு புகாரின் (N. Bukhrin) பிறியோபிறாற்ஸ்சேன்ஸ்கி (E. Preobrazhensky) ஆல் புதிதாகக் கட்சியில் சேர்ந்த தோழர்களைப் பயிற்றுவதற்காக எழுதப்பட்ட,*

**ABC of Communism**

*என்ற ஆங்கில மொழிபெயர்ப்புப் புத்தகத்திலிருந்து எழுதப்பட்டது. அந்நாட்களில் லெனின் ட்றொஸ்கி, ஸ்டாலின் உட்பட கட்சியின் எல்லா அங்கத்தவர்களும் கட்சியின் பாடவிதானமாக இந்தப் புத்தகத்தை ஏற்றார்கள் என்பது ஈண்டு குறிப்பிடத்தக்கது.*

படிப்பகம்

THE OPPRESSION OF SUBJECT NATIONS

# அடக்கப்பட்ட தேசியத்தின் மேலான ஒடுக்குமுறை

மனிதனை மனிதன் ஒடுக்கும் வடிவங்களிலே அடக்கப்பட்ட தேசியங்களை ஒடுக்குவதும் ஒன்றாகும். மனிதர்களை ஐக்கியப்பட விடாமல் பிரித்து வைத்திருக்கும் தடைகளிலே வர்க்கபேதத் தடையோடு கூடவே, தேசிய இனங்களுக்கிடையேயான பகைமை, தேசிய இனங்கள் ஒன்றையொன்று வெறுத்தல் போன்றன அடங்கும்.

பாட்டாளி வர்க்கத்தை முட்டாளாக்கி அவர்களின் வர்க்க உணர்மையை மழுங்கடித்து வைத்திருக்கும் காரணிகளுள் தேசிய இனங்களிடையேயான பகைமையும் மனஸ்தாபமும் முக்கியமானதாகும். எப்படி இந்தத் தேசிய உணர்ச்சிகளைப் பயன்படுத்தித் தூண்டிவிட்டுத் தங்களது சொந்த நலன்களை வெற்றி கொள்ள வேண்டுமென்று முதலாளிகளுக்கு நன்றாகத் தெரியும்.

வர்க்க உணர்மையுள்ள தொழிலாளர்கள் எப்படி இந்தத் தேசியப் பிரச்சினையை அணுகி, எப்படி அப் பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டால் கம்யூனிசத்தின் வெற்றியைத் துரிதமாக்கலாம் என்று பார்ப்போம். ஒரே மொழியைப் பேசி ஒரு திட்டவட்டமான பிரதேசத்திற் குடியிருக்கும் மக்கள் கூட்டம் தேசிய இனங்கள் அல்லது தேசிய மக்கள் என்று அழைக்கப்படுகிறார்கள். தேசிய இனங்களுக்கு மேலும் பல குணாம்சங்கள் இருக்க வேண்டும்.

பிற்குறிப்பு :

*முன்னொரு காலத்தில் யூதர்கள் ஒரு திட்டவட்டமான பிரதேசத்திற் குடியிருந்து ஒரு பொதுவான மொழியைப் பேசினார்கள். இன்றைக்கு அவர்களுக்கென்று ஒரு திட்டவட்டமான பிரதேசம் கிடையாது. அவர்களுள் அதிகமானவர்கள் இப்பொழுது கீப்புறா மொழியை மறந்து விட்டார்கள். (இக் கட்டுரை 1919ம் ஆண்டு எழுதப்பட்டது) கிப்ஸிக்கள் (Gybses நாடோடிகள்) ஒரே மொழியைப் பேசுவார்கள். ஆனால் அவர்கள் ஒரு திட்டவட்டமான பிரதேசத்தில் குடியிருப்பதில்லை. சைபீரியாவிலுள்ள மொமாடிக் அல்லாத துங்கூக்கள் (non-momadic Tunguses) ஒரு திட்டவட்டமான பிரதேசத்தில் வாழ்கிறார்கள். ஆனால் அவர்கள் தங்களது தாய் மொழியை மறந்து விட்டார்கள்.*

www.padippakam.com

**அடக்கப்பட்ட தேசியத்தின் மேலான ஒடுக்குமுறை**

ஆனால் இந்த இரண்டுமே முக்கியமானதும் அடிப்படையானதும் ஆகும்.

தேசிய இனங்கள் எப்படி ஒடுக்கப்படுகின்றன என்று சில உதாரணங்களைப் பார்ப்போம். ஜார் அரசாங்கம் யூதர்களைத் துன்புறுத்துகிறது, ரசியாவில் சில இடங்களில் வதிவதைத் தடை செய்துள்ளது, அவர்கள் அரசாங்க சேவைகளில் வேலை செய்வதைத் தடைபண்ணியுள்ளது, அவர்கள் பாடசாலைகளுக்குச் செல்வதைக் கட்டுப்படுத்தியுள்ளது, யூத விரோத இனசங்காரத்தை அணி வகுத்துள்ளது போன்றவை. ஜார் அரசாங்கம் மேலும் யுக்கிரேன் பிள்ளைகள் தங்கள் தாய்மொழியான யுக்கிரேன் மொழி மூலம் கல்வி கற்பதைத் தடைசெய்துள்ளது. யுக்கிரேன் மொழியிலே செய்திப் பத்திரிகை வெளியாவது தடைசெய்யப்பட்டுள்ளது. ரசியாவிலுள்ள எந்த ஒரு தேசிய இனமாவது தாம் ரசிய அரசோடு சேர்ந்து வாழ விரும்புகிறார்களோ இல்லையோ என்பதை அவர்களே தீர்மானிக்க விட்டது கிடையாது.

ஜேர்மன் அரசாங்கம் போலந்து பாடசாலைகளை மூடிவிட்டது. ஆஸ்திரிய அரசாங்கம் செக் பாஷையின் பாவனையைத் தடைசெய்ததோடு பலாத்காரமாக ஜேர்மன் பாஷையை அவர்கள் மேல் திணித்துள்ளது. பிரித்தானிய முதலாளிகள் ஆசிய ஆபிரிக்க ஏழைகளைத் துாஷிக்கிறார்கள். பின்தங்கிய அரைக் காட்டுமிராண்டிகளை அடக்கியாள்கிறது, சூறையாடுகிறது. அவர்கள் பிரித்தானிய அடிமைத் தனத்திலிருந்து விடுதலையடைய எத்தனித்தால் சுட்டுத் தள்ளுகிறது.

ஒரு சொல்லில் சொல்வதென்றால், ஏதாவதொரு அரசில் ஒரு தேசிய இனமக்கள் எல்லா உரிமைகளையும் அனுபவிக்க, மற்றொரு தேசிய இன மக்கள் ஒரு பகுதி உரிமைகளை மாத்திரம் அனுபவித்தால், பலவீனமான ஒரு தேசிய இனம் பலாத்காரமாக பலமான தேசிய இனத்தோடு சேர்க்கப்பட்டால், பலமான தேசிய இனம் பலவீனமான தேசிய இனத்தினுள் அன்னிய பழக்க வழக்கங்களைத் திணித்தால், பலவீனமான தேசிய இன மக்கள் தங்கள் சொந்த விருப்பம்போல் வாழ்க்கையை வாழவிடாது விட்டால், இந்தப் பலவீனமான தேசிய இனங்களை நாம் ஒடுக்கப்பட்ட தேசிய இனம் என்போம். தேசிய இனம் அடிமையாக்கப் பட்டுள்ளதென்போம்.

THE UNITY OF PROLETARIAT

# பாட்டாளி வர்க்கத்தின் ஐக்கியம்

முதலில் நாம் ஓர் அதிமுக்கியமான அடிப்படைப் பிரச்சினையை எடுத்துக் கூற வேண்டும். ரசியத் தொழிலாளிகளும் விவசாயிகளும், ஜேர்மன், பிரெஞ்சு, பிரித்தானியா, சீன அல்லது ராட்டார்ஸ் தொழிலாளர்களை அவர்கள் எந்தெந்த வர்க்கத்தைச் சேர்ந்ததவர்கள் என்று பாராமல் எதிரிகளாகப் பாக்கலாமா?. ரசியத் தொழிலாளர்களும் விவசாயிகளும் வேறொரு தேசிய இனத்தைச் சேர்ந்த தொழிலாளர்களை அவர்கள் வித்தியாசமான மொழியைப் பேசுகிறார்கள் என்பதற்காகவோ, அவர்களின் தோலின் நிறம் கறுப்பாகவோ, மஞ்சளாகவோ இருப்பதினாலோ, அன்றேல் அவர்கள் வித்தியாசமான பழக்க வழக்கங்களை அனுசரிப்பதினாலோ வெறுப்பதற்கோ சந்தேகப்படுவதற்கோ உரிமையுண்டோ? வெளிப்படையாகவே இது முழுப் பிழையாகும். ஜேர்மன் தொழிலாளர்களும், பிரெஞ்சுத் தொழிலாளர்களும் நீக்குரோத் தொழிலாளர்களும் ரசியத் தொழிலாளர்களைப் போன்று பாட்டாளிகளே. மற்றத் தேசத் தொழிலாளர்கள் என்ன மொழியைப் பேசினாலென்ன அவர்களெல்லோரும் மூலதனத்தால் சுரண்டப் படுகிறார்கள். அவர்களெல்லோரும் தோழர்கள். அவர்களெல்லோரும் வறுமையாலும் ஒடுக்குமுறையாலும் நீதியின்மையாலும் வருந்துகிறார்கள். ரசிய முதலாளி தொழிலாளர்களை அவர்களின் சொந்த மொழியான ரசிய மொழியால் ஏசுகிறான் என்பதற்காக, ரசியக் கையினால் கைவிலங்கிடுகின்றான் என்பதற்காக, ரசியச் சவுக்கால் அடிக்கிறான் என்பதற்காக.... ரசியத் தொழிலாளி அவனை நேசிக்கலாமா?. ஜேர்மன் முதலாளி ஜேர்மன் தொழிலாளர்களை ஜேர்மன் மொழியாலும் ஜேர்மன் வழக்கத்தாலும் தூசிக்கிறான் என்பதற்காக அவனை நேசிக்கலாமா?. எல்லா நாட்டைச் சேர்ந்த தொழிலாளர்களும் ஒரே வர்க்கத்தைச் சேர்ந்த சகோதரர்கள். அவர்கள் எல்லா நாட்டிலுமுள்ள முதலாளிகளின் எதிரிகள்.

மேற்கூறியாங்கு அமைவது தான் எல்லா நாடுகளிலுள்ள வறிய

www.padippakam.com



விவசாயிகளது நிலைமையும். ரசியாவிற் பிறந்து ரசிய மொழியைப்பேசி ரசிய விவசாயிகளைச் சுரண்டுகின்ற செல்வந்த விவசாயிகளிலும் உலோபித்தனமுள்ள நிலச் சொந்தக்காரர்களிலும் பார்க்க, ரசிய விவசாயிகளுக்கு (ஏழை விவசாயிகளுக்கும், நடுத்தர விவசாயிகளுக்கும்) கங்கேரி நாட்டுக் கூலி விவசாயிகளும் சிலி, பெல்ஜியம் போன்ற நாடுகளின் ஏழை விவசாயிகள் நெருக்கமும் நேசமும் நிறைந்தவர்களாகும்.

உலகிலுள்ள எல்லாத் தொழிலாளர்களும் வெறுமனே ஒரே வர்க்கம் என்றதனால் மட்டும் சகோதரர்களல்ல. அதனோடு கூடவே அவர்கள் ஒடுக்கப்பட்டும், அடிமையாக்கப்பட்டதனாலும் சகோதரர்களாகும். சொந்த நாட்டைச் சேர்ந்தவர் சொந்த மொழியால் நிந்திக்கிறார் என்பதால் திருப்தியடைந்து நிம்மதியாத் தூங்குதல் நல்லதல்ல. ஒவ்வொரு நாட்டிலுமுள்ள துன்பத்திற் சுழல்பவர்கள் ஒருவருக்கொருவர் பரஸ்பரம் தங்களது கண்ணீரை துடைத்துக் கொண்டு தங்களது சொந்த அரசிலேயுள்ள எதிரிகளுக்கெதிராகப் போராடவேண்டும். ஒடுக்கப்பட்டதாலும் அடிமையாக்கப்பட்டதாலும் சகோதரர்களானவர்கள் முதலாளித்துவத்திற்கு எதிராகப் போராடும் உலகளாவிய இயக்கத்தின் சகோதரர்களாகும். தங்களின் ஐக்கியத்திற்குத் தடையாக நானாவித தேசிய வித்தியாசங்களையும் மறந்து ஒரு பெரிய இராணுவமாக ஐக்கியப்பட்டு முதலாளித்துவ த்திற்கு எதிராக ஓர் இணைந்த யுத்தத்தை நடாத்த வேண்டும். இப்படி ஒரு சர்வதேச ஐக்கியத்தைச் சாதித்தால் மாத்திரம்தான் உலக முதலாளித்துவத்தை வெற்றி கொள்ளலாம். இதனால்தான் எழுபது வருடங்களுக்கு முன்னரேயே கம்யூனிசத்தை ஸ்தாபித்த வர்களான மாக்சும், ஏங்கல்சும் அவர்கள் எழுதிய கீர்த்தி வாய்ந்த கம்யூனிச அறிக்கையில் "உலகப் பாட்டாளிகளே ஐக்கியப்படுங்கள்!" என்று அறைகூவினார்கள்.

தொழிலாள வர்க்கம் தேசியங்களுக்கிடையிலான தப்பபிப்பிராயங் களையும் பகைமைகளையும் வெற்றி கொள்ள வேண்டியது அவசியமாகும். உலகளாவ மூலதனத்தைத் தாக்கி முதலாளித்துவ அமைப்பு முறையை பூரணமாகத் தூக்கி எறிவதற்கு



படிப்பகம்

**பாட்டாளி வர்க்கத்தின் ஐக்கியம்**

மாத்திரமல்ல, உலகம் முழுவதற்கும் ஒரேயொரு பொருளாதார அமைப்பை அணிவகுப்பதற்கும் அவசியமாகும். டோனேற்சின் நிலக்கரியில்லாமல் பக்குவின் எண்ணெய் இல்லாமல், துருக்கியின் பஞ்சில்லாமல் ரசியா உயிர்வாழ மாட்டாது. அதேபோன்றே ரசிய மரங்களும், சணலும் சணல் வகைகளும் பிளாட்டினமும் அல்லது அமெரிக்க கோதுமையுமில்லாமல் மேற்கு ஐரோப்பா உயிர் வாழமாட்டாது. பிரித்தானியாவிற்கு எகிப்திய பருத்தி போன்றன அத்தியாவசியமாகும். இத்தாலிக்கு பிரித்தானியாவின் நிலக்கரி அத்தியாவசியமாக வேண்டும் என்பது பெரிய உண்மையாகும். முதலாளித்துவம் ஒரு உலகப் பொருளாதாரத்தை அணிவகுக்க மாட்டாமற் திண்டாடுகின்றது. முதலாளித்துவ அமைப்பு முறை இந்த மீள முடியாத பிரச்சனைக்குள் இருக்கிறது. பாட்டாளி வர்க்கம் தான் ஒரு பொருளாதார அமைப்பை அணிவகுத்து வெற்றிவாகை சூட யோக்கியதையுள்ளதாக இருக்கிறது. இதைச் சாதித்து முடிப்பதற்காக தொழிலாள வர்க்கம் "முழு உலகமும், முழு உலகச் செல்வங்களும் உழைக்கும் உலகத்திற்கே சொந்தம்" என்ற காவற் குறிப்பை அறைகூவ வேண்டியுள்ளது. இந்த காவற் குறிப்பின் பிரகாரம் ஜேர்மன் தொழிலாளிகள் தங்களின் தேசியச் செல்வம் தமக்கு வேண்டாமென்று வெறுக்க வேண்டும். அப்படியே பிரித்தானியத் தொழிலாளர்களும் மற்றைய தேசத் தொழிலாளர்களும் கூறவேண்டும். தப்பபிப்பிராயமும் தேசியப் பேராசையும் தொழிற்சாலைகளையும் விவசாயத்தையும் சர்வதேச மயமாக்குவதை எதிர்த்தால், அது எங்கே எதிர்க்கப்பட்டால் என்ன, எந்த வர்ணப் பதாகையின் கீழ் எதிர்க்கப்பட்டாலென்ன அதைத் தூக்கியெறிய வேண்டும்!

www.padippakam.com

# தேசியப் பகைமைக்கான காரணங்கள்

THE CAUSES OF NATIONAL ENMITY

கம்யூனிஸ்டுகள் தேசிய ஒடுக்குமுறைக்கு எதிராகவும் தேசியங்களுக்கிடையிலான தப்பெண்ணங்களுக்கு எதிராகவும் யுத்தப் பிரகடனம் செய்தால் மட்டும் போதாது. அவர்கள் முதலாளித்துவத்திற்கு எதிரான போராட்டத்தில் சர்வதேச ஐக்கியத்தை ஊக்குவிப்பதோடு வெற்றிவாகை சூடிய பாட்டாளி வர்க்கத்தோடு ஒரு சர்வதேச பொருளாதார அமைப்பைக் கட்டியெழுப்ப அவாவுடையோராகவும் இருக்க வேண்டும். நாம் நானாவித யுத்த வெறியையும், தேசிய அகங்காரத்தையும், தேசிய முட்டாள்தனத்தையும், தேசிய தற்பெருமையையும், பற்பல தேசிய இனங்களிடையே நிலவும் பரஸ்பர நம்பிக்கையீனத்தையும் தோற்கடிப்பதற்கான ஆகக் கிட்டிய வழியைக் கடைபிடிக்க வேண்டும். மனித வாழ்வின் நெட்டூரம் நிறைந்த காலங்களினதும் நிலப்பிரபுத்துவ முதலாளித்துவ சகாப்தங்களினதும் நிலப்பிரபுத்துவ சகாப்தங்களில் நிலவிய தேசிய இனங்களிடையேயான சகிக்கவொண்ணாத வாக்குவாதங்களினதும் மிச்ச சொச்சங்கள் இப்பொழுதும் உலக பாட்டாளி வர்க்கத்தின் கழுத்திலே தாங்க முடியாச் சுமையாகத் தொங்குகின்றது.

தேசியப் பகைமைகள் ஆதிகாலத்திலேயே ஆரம்பமானவை. முன்னொரு காலத்தில் –மனிதர்கள் கணங்களாக வாழ்ந்த காலத்தில்– ஒரு கணம் இன்னொரு கணத்தோடு போரிட்டு அவர்களின் நிலங்களையும் அபகரித்ததோடு திருப்தி காணாமல் உண்மையிலேயே ஒருவரையொருவர் நரபலி வேட்டையாடிச் சாப்பிட்டார்கள். இந்த நெட்டூரத்தின் அனுபவம் தந்த சந்தேகத்தினதும் பகைமையினதும் மிச் சொச்சங்கள், தொடர்ந்து இன்று மட்டும் ஒவ்வொரு தேசத்திலுமுள்ள தொழிலாளிடையேயும் விவசாயிகளிடையேயும் நிலவுகின்றது. இந்த ஒன்றோடு ஒன்றான பகைமை படிப்படியாகச் செத்துக் கொண்டிருக்கிறது. எந்த



படிப்பகம்

மட்டத்திற்கு உலக வாணிபம் வளர்ந்துள்ளதோ, எந்த மட்டத்திற்கு வியாபாரத் தொடர்புகள் ஏற்பட்டுள்ளனவோ, எந்த மட்டத்திற்குக் குடியேற்றங்களும் இனக்கலப்புகளும் ஏற்பட்டு புதியகலப்பினங்களை உருவாக்கி புதிய கூட்டுவாழ்க்கை ஏற்பட்டுள்ளதோ அந்த மட்டத்திற்கு இது செத்துக்கொண்டிருக்கிறது. விசேடமாக எல்லா நாடுகளிலும் சர்வவியாபகமாக வர்க்கப் போராட்டம் ஏற்பட்டுள்ளது. அதற்கேற்றாற்போல இந்தப் பகைமை செத்துக்கொண்டிருக்கிறது. ஆனால் இந்த பரஸ்பர கணப் பகைமைகளின் மிச்ச சொச்சம் அணைந்து போவதற்குப் பதிலாக மேலும் பற்றியெரியத் தொடங்கி யுள்ளது. பழைய தேசிய பகைமையோடு வர்க்கப் பகைமையும் சேர்ந்துள்ளதால் இது மேலும் சுவாலைவிட்டு எரிகிறது.

ஒவ்வொரு தேசத்திலுமுள்ள முதலாளிகள் பாட்டாளிகளைச் சுரண்டுவதோடு அவர்களின் சொந்த நாட்டிலேயே ஒடுக்குகிறார்கள். இந்த முதலாளிகள் தங்கள் நாட்டு பாட்டாளிகளுக்குத் தாங்கள் பகைவர்கள் இல்லையென்றும் மற்ற நாட்டு மக்கள் தான் பகைவர்கள் என்றும் நம்பப் பண்ண பகீரதப் பிரயத்தனம் எடுக்கிறார்கள். ஜேர்மன் முதலாளிகள் ஜேர்மன் தொழிலாளர்களை நோக்கி 'பிரான்சைத் தோற்கடியுங்கள்' என்று கத்துகிறார்கள். 'ஆங்கிலேயரைத் தோற்கடியுங்கள்' என்று கத்துகிறார்கள். பிரித்தானிய முதலாளிகள் பிரித்தானியத் தொழிலாளர்களை நோக்கி 'ஜேர்மனியரைத் தோற்கடியுங்கள்' என்கிறார்கள். ஈற்றில் எல்லா நாட்டு முதலாளிகளும் ஒருமித்து யூதர்களைத் தோற்கடியுங்கள் என்கிறார்கள். இதன் நோக்கம் முதலாளித்துவ ஒடுக்குமுறை யாளர்களுக்கு எதிரான வாக்கப் போராட்டத்தை அணைத்து தேசிய இனங்களுக்கிடையேயான இனவாதச் சண்டையை முடுக்கி விடுவதாகும்.

சோசலித்திற்காகப் போராடும் தொழிலாளர்களது சிந்தனையைத் திசைதிருப்பி தேசிய இனங்கள் மீதான வெறுப்பை ஊட்டியதோடு மட்டும் முதலாளிகள் திருப்தி காணவில்லை. அது மற்றைய மக்களை ஒடுக்குவதாற் தொழிலாளர்களுக்குப் பொருள்வகைப்பட்ட லாபம் கிட்டும் என்று நம்பப் பண்ண பகீரதப் பிரயத்தனம்

www.padippakam.com



எடுக்கின்றது. அண்மைய யுத்தத்தில் ஜேர்மன் முதலாளிகள் *"ஜேர்மனி... ஜேர்மனி எல்லாவற்றிற்கும் மேலாக..."* என்ற தேசியகீதத்தைப் பாடியதோடு ஜேர்மன் முதலாளித்துவப் பொருளாதாரவாதிகள், வெற்றி கொண்ட நாட்டுத் தொழிலாளர்களை ஒடுக்குவதினாலும் சூறையாடுவதினாலும் அதிக லாபம் கிட்டுமென்று சொல்லி ஜேர்மன் தொழிலாளர்களை நம்பப் பண்ண முயன்றார்கள். யுத்தத்திற்கு முன்பு முதலாளிகள் காலனிகளைச் சூறையாடியதாலும், பின்தங்கியதும் பலவீனமானதுமான நாடுகளை ஒடுக்கியதாலும் கிடைத்த லாபத்திலிருந்து தொழிலாள வர்க்கத் தலைவர்களுக்கு லஞ்சம் கொடுத்து ஏமாற்றும் நடைமுறையை மேற்கொண்டார்கள். ஐரோப்பிய நாடுகளிலுள்ள வளர்ச்சியடைந்த நாட்டுத் தொழிலாளர்கள், அதிக சம்பளம் பெறும் தொழிலாளர்களது தூண்டுதலால் முதலாளித்துவப் பிரேரணைகளை ஏற்றுக்கொண்டு ஜிங்கோ சோசலிஸ்டுகளாக, தங்களுக்கு ஒரு தந்தை நாடு உண்டென்று ஏற்றுக்கொண்டு, காலனிகளையும் பாதி தங்கியுள்ள நாடுகளையும் சூறையாடுவதிலே பங்கு கொண்டார்கள். முதலாளித்துவத்தின் கீழேயுள்ள தொழிலாளி; தன்னை தேசபக்தனென்று கூறிக் கொண்டு காக்காசுக்கும் அரைக்காசுக்கும் தனது உண்மையான தந்தை நாடான சோசலிசத்தை விற்று பின்தங்கிய நாடுகளையும் பலவீனமான நாடுகளையும் ஒடுக்குகின்ற ஒடுக்குமுறையாளனாகினார்கள்.



படிப்பகம்

THE EQUAL RIGHTS OF THE NATIONS AND THE RIGHT TO SELF DETERMINATION; FEDERATION

# தேசங்களின் சமத்துவமும் சுயநிர்ணய உரிமையும் சமஸ்டி முறையும்

கம்யூனிஸ்ட் கட்சி மனிதனை மனிதன் ஒடுக்குவதற்கு எதிராகவும், முதலாளித்துவ அமைப்புமுறை --உயிர்வாழ்வதற்கு அத்தியாவசியமான அடக்கியாளப்படும்-- தேசிய இனங்களை ஒடுக்குவதற்கு எதிராகவும், உக்கிரமானதும் தீர்க்கமானதுமான போர்ப் பிரகடனத்தைச் செய்துள்ளது. தொழிலாளி வர்க்கத்தைச் சார்ந்தவர்கள் இந்தத் தேசிய இன ஒடுக்குமுறையில் ஓர் இம்மியளவு பங்குகொண்டாலும் அவர்களுக்கு எதிராக ஓர் உக்கிரமானதும் விட்டுக் கொடாததுமான போராட்டத்தை கம்யூனிஸ்ட் கட்சி நடாத்தும். இதுமட்டும் போதாது. ஒரு பெரியதும் வலிமை வாய்ந்ததுமான நாட்டைச் சேர்ந்த பாட்டாளி வர்க்கம் தங்கள் நாட்டைச் சேர்ந்த முதலாளிகளும் தனவந்தர்களும் மற்றைய மக்களை ஒடுக்க எத்தனிப்பதை எப்பாடுபட்டும் தடுப்பதோடு அவர்களை நசுக்கவும் வேண்டும். ஒடுக்கப்பட்ட தேசிய இனத்தைச் சேர்ந்த பாட்டாளிகள், ஒடுக்குகின்ற நாட்டைச் சேர்ந்த தங்களது பாட்டாளி வர்க்கத் தோழர்கள் மேல் சந்தேகம் ஏற்படாதபடிக்கு அவர்களது நடையுடை பாவனைகள் அமைந்திருப்பதும் இன்றியமையாததாகும். செக் (Czechs) தேசிய இனத்தை ஆஸ்திரிய ஜேர்மன் முதலாளிகள் ஒடுக்கும் போது, செக் தொழிலாளிகள் முழு ஜேர்மன்காரர்களும் தங்களை ஒடுக்குவதாகப் பார்க்கிறார்கள். ஜார் அரசாங்கம் போலந்தை ஒடுக்குகிறது. போலந்து மக்கள் ரசிய ஜார் அரசாங்கத்திலும், ரசிய நிலப்பிரபுக்களிலும், ரசிய முதலாளிகளிலும் மட்டுமல்ல, முழு ரசியர்களிலுமே நம்பிக்கையீனத்தை மனதில் பதியவைத்துள்ளனர். ஒடுக்கப்பட்ட தேசிய இனத்திலுள்ள தொழிலாளர்களுக்கு ஒடுக்குகின்ற தேசிய இனத்திலுள்ள தொழிலாளர்கள் மேல் ஏற்பட்டுள்ள நம்பிக்கையீனத்தை நிர்மூலமாக்க வேண்டுமானால் வெறுமனே தேசிய இனங்களின் சமத்துவம் பற்றி அறைகூவினால்

www.padippakam.com



மட்டும் போதாது. அதை நாளாந்த நடைமுறையிலே நிகழப் பண்ண வேண்டும். இந்தச் சமத்துவமானது ஒடுக்கப்பட்ட இனங்களின் மொழி, கல்வி, மதம் போன்றவற்றில் சம உரிமை வழங்குவதன் மூலம் வெளிவரவேண்டும். இதுமட்டம் போதாது. பாட்டாளி வர்க்கம் பூரண தேசிய சுயநிர்ணய உரிமையை வழங்கத் தயாராக இருக்க வேண்டும். ஒடுக்குகின்ற தேசிய இனத்தோடு பரஸ்பரம் இரண்டறக் கலப்பதோ, சமஸ்டி ஆட்சிமுறையை ஏற்படுத்துவதோ, அன்றேல் பூரணமாகப் பிரிந்து போவதோ என்பதை ஒடுக்கப்பட்ட தேசிய இனத்தைச் சேர்ந்த பெரும்பான்மை தொழிலாளர்களின் முடிவின்படி செயற்படுத்த வேண்டும்.

கம்யூனிஸ்ட்டுகள் நாடு துண்டாடுவதை ஏற்கலாமாவென்று வாசகர்கள் கேட்கக்கூடும். அப்படியானால் கம்யூனிஸ்டுகள் காணத்துடிக்கும் உலகப் பாட்டாளி வர்க்கத்தின் ஐக்கிய சோசலிச அரசு எவ்வாறு உதயமாகும்?. இது ஒரு முரண்பாடுபோலத் தோன்றும்.

இங்கே அப்படியொரு முரண்பாபடும் இல்லை. உலக பாட்டாளி வர்க்கத்தின் ஐக்கியத்தை ஆகக் கூடிய கெதியில் ஏற்படுத்த வேண்டுமானால், சில வேளைகளில் சில தேசங்கள் மற்றத் தேசத்திலிருந்து தற்காலிகமாகப் பிரிந்திருக்க வேண்டும்.

எந்தெந்தச் சூழ்நிலைகளிலே இப்படியான பிரிவினை ஏற்பட வேண்டுமென்பதைப் பார்ப்போம். பேர்லினில் சைடமன் (Scheidemann), நோஸ்கே (Noske) முதலாளித்துவ சர்வாதிகார அரசு இருக்கும்போது, ஜேர்மனியின் ஒரு பகுதியாகிய பவேறியா தன்னைச் சோசலிச குடியரசு என்று பிரகடனப்படுத்தியுள்ளது. இந்தச் சந்தர்ப்பத்தில் பவேறியக் கம்யூனிஸ்டுகள் சுதந்திரம் கோருவது முறையா? கட்டாயம் அது சரி. பவேறியன் கம்யூனிஸ்டுகள் மாத்திரமல்ல, ஜேர்மனியின் மற்றைய பகுதியிலுள்ள பாட்டாளிகளும் சோசலிச பவேறிய பிரிவதை ஆதரிக்க வேண்டும். இந்தப் பிரிவினை ஜேர்மன் பாட்டாளிகளிடமிருந்து பிரிவதல்ல. மாறாக ஜேர்மன் முதலாளித்துவ நுகத்தடியிலிருந்து விடுதலையடைவதாகும்.

இன்னுமொரு நல்ல உதாரணமுண்டு. ஜேர்மனி முழுவதும் ஒரு. சோசலிசக் குடியரசு பிரகடனப்படுத்தப்பட்டுள்ள பொழுது, பவேறியா மாத்திரம் பிரிவினையைக் கோருகிறது என்று வைத்துக்கொள்ளுவோம். இந்தக் கட்டத்தில் பவேறியன் முதலாளிகள் பிரிவினையை விரும்புகிறார்கள். ஆனால் பவேறியன் பாட்டாளிகள் ஐக்கியத்தை விரும்புகிறார்கள் என்றால், கம்யூனிஸ்டுகள் என்ன செய்ய வேண்டும்? ஜேர்மன் தொழிலாளிகள் பவேறியத் தொழிலாளர்களுக்கு உதவிசெய்ய வேண்டும். பவேறியப் பிரிவினை கோரும் முதலாளிகளை ஆயுதப் போராட்டத்தால் எதிர்க்க வேண்டும். இது பவேறியாவின் ஒடுக்குமுறையாகாது. இது பவேறியாவின் முதலாளிகளை ஒடுக்குவதாகும்.

இன்னுமோர் உதாரணம். இங்கிலாந்திலும், அயர்லாந்திலும் சோவியத் ஆட்சிகள் வந்தால் அதாவது ஒடுக்கப்பட்ட நாட்டிலும் ஒடுக்குகின்ற நாட்டிலும் சோசலிச ஆட்சிகள் வந்துள்ளது. இருந்தபோதும் பல நூற்றாண்டாக ஒடுக்கிய இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த பாட்டாளிகளை அயர்லாந்துத் தொழிலாளிகள் நம்பத் தயாராக இல்லையென்றால் என்ன செய்யலாம்? பொருளாதார நோக்கிற் பார்க்கும் போது பிரிவினை பாதகமானதுதான். அப்படியென்றால் இங்கிலாந்துக் கம்யூனிஸ்டுக்கள் என்ன செய்ய வேண்டும். என்னவாக இருந்தாலும் இங்கிலாந்து முதலாளிகள் செய்ததுபோன்று இங்கிலாந்து கம்யூனிஸ்டுகள் பலாத்காரமாக ஐக்கியத்தைப் பேணக் கூடாது. அவர்கள் அயர்லாந்துக்குப் பரிபூரண பிரிவினைச் சுதந்திரம் வழங்க வேண்டும். ஏன் அப்படிச் செய்ய வேண்டும்?

அயர்லாந்தை ஒடுக்கியது இங்கிலாந்து முதலாளிகளேயொழிய இங்கிலாந்துக் கம்யூனிஸ்டுகள் இல்லையென்பதை முதலில் நம்பச் செய்ய வேண்டும். இங்கிலாந்துத் தொழிலாளர்கள் அயர்லாந்துத் தொழிலாளர்களின் நம்பிக்கையை வென்றெடுக்க வேண்டும்.

இரண்டாவது அயர்லாந்துத் தொழிலாளர்கள் தங்களது சொந்த அனுபவத்தில் பிரிந்து போன சின்ன நாட்டிலுள்ள சாதகமற்ற கூறுகளை விளங்க வேண்டும். அவர்கள் தங்களது சொந்த அனுபவத்தில் இங்கிலாந்தோடும் மற்றைய பாட்டாளிவர்க்க அரசுகளோடும் அரசியல் ரீதியிலும் பொருளாதார ரீயிலும்

www.padippakam.com

ஐக்கியப்படாமல் அயர்லாந்தில் மாத்திரம் பொருளாதாரத்தைச் செம்மையாக அபிவிருத்தி செய்ய முடியாதென்பதை விளங்க வேண்டும்.

கடைசியாக இன்னுமொரு உதாரணத்தைப் பார்ப்போம். ஒரு முதலாளித்துவ தேசிய இனத்தைச் சேர்ந்த முதலாளித்துவ அரசு பாட்டாளிவர்க்க அரசிலிருந்து பிரிய விரும்பும்போது, அந்தத் தேசத்திலுள்ள பெரும்பான்மையான தொழிலாளர்களோ அன்றேல் கணிசமானளவு தொழிலாளர்களோ அதை ஆதரிக்கிறார்கள். பிரிவினை கோரும் நாட்டிலுள்ள தொழிலாளிகள் இன்று சோசலிச நாடான பழைய ஒடுக்கிய நாட்டின் முதலாளிகளில் மாத்திரமல்ல தொழிலாளிகள் மேலும் நம்பிக்கையீனமுற்றிருந்தார்கள் என்றால் என்ன செய்யலாம்?. இந்தச் சந்தர்ப்பத்திலும்கூட பிரிவினை கோரும் நாட்டிலுள்ள பாட்டாளி வர்க்கம், தனது சொந்த நாட்டு முதலாளியைப் பற்றி தனது சொந்த அனுபவத்தில் கற்றுக் கொள்ள விடவேண்டும். இல்லையேல் இந்த முதலாளித்துவ அரசு ஆட்சியதிகாரத்தை தொடர்ந்து வைத்திருப்பதாகச் சொல்லும். "நான் உங்களை ஒடுக்கவில்லை, அந்த நாட்டு மக்கள்தான் உங்களை ஒடுக்குகிறார்கள்" என்று சொல்லித் தப்பிக் கொள்ளும். முதலாளிகள் பிரிவினை கோருவது தனது சொந்த நாட்டுப் பாட்டாளிகளை தான் தனித்த ஏகபோகமாகச் சுரண்டுவதற் கென்பதை பாட்டாளி வர்க்கம் வெகுசீக்கிரம் விளங்கிக் கொள்ளும். அதனோடு கூடவே அயல்நாட்டுச் சோவியத் அரசாங்கத்திலுள்ள தொழிலாளர்கள் ஐக்கியத்தை விரும்புகிறார்கள் என்பதையும், இந்த ஐக்கியம் சிறிய நாட்டிலுள்ள தொழிலாளர்களைச் சுரண்டுவதற்கோ ஒடுக்குவதற்கோ அல்ல என்றும், எல்லாத் தொழிலாளர்களும் சுரண்டலிலிருந்தும் ஒடுக்குமுறையிலிருந்தும் விடுதலை பெறுவதற்கான ஐக்கியம் என்றும் வெகுசீக்கிரம் விளங்கிக் கொள்வார்கள். கம்யூனிஸ்டுகள் பொதுவாக கொள்கையைப் பொறுத்த மட்டில் ஒரு தேசம் மற்றதிலிருந்து பிரிவதை, விசேடமாக அந்தத் தேசங்கள் பொதுவான பொருளாதாரப் பிணைப்பைக் கொண்டிருந்தால் பிரிவதை விரும்பாதபோதும், தற்காலிகப் பிரிவினையை ஊக்குவிப்பார்கள். ஒரு தாயானவள் தனது பிள்ளையை நெருப்போடு பழக விட்டுவிட்டு, அது சுட்ட பயத்தால் திரும்ப ஒருகாலமும் நெருப்பண்டை போகாதுவிடச் செய்வதைப்போல் கம்யூனிஸ்டுகள் செயற்பட வேண்டும்.





படிப்பகம்

www.padippakam.com

WHO EXPRESS THE "WILL OF THE NATION"

# யார் தேசியத்தின் விருப்பத்தை வெளிப்படுத்துவது

கம்யூனிஸ்டுகள் தேசியங்களின் சுயநிர்ணய உரிமையை அவைகள் பிரிந்து போகுமட்டும் அங்கீகரிக்கிறார்கள். ஆனால் இந்த உரிமை பெரும்பான்மைத் தொழிலாள வர்க்கத்தின் விருப்பமாக இருந்தாலொழிய முதலாளிகளின் விருப்பமாக இருக்கக் கூடாது. இதை நாசூக்காகச் சொல்வதென்றால், நாங்கள் ஒரு தேசத்தின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கிறோம் என்று சொன்னோமென்றால், அத் தேசத்தின் பெரும்பான்மைத் தொழிலாள வர்க்கத்தின் உரிமையை அங்கீகரிக்கிறோம் என்பதே அர்த்தமாகும். முதலாளிகளைப் பொறுத்த மட்டில் அதுவும் உள்நாட்டு யுத்தகாலத்திலும், பாட்டாளி வர்க்க சர்வாதிகார காலத்திலும் முதலாளிகளது குடியுரிமைச் சுதந்திரத்தைப் பறிப்பதோடு, அவர்கள் தேசிய இனப் பிரச்சினையிலே எந்தவொரு குரலையும் எழுப்ப விடமாட்டோம்.

ஒப்புநோக்குமிடத்து ஆகக் குறைந்ததோ அன்றேல் இம்மியத்தனையும் நாகரீகமடையாத தேசிய இனங்களுக்கு சுயநிர்ணய உரிமையைப் பொறுத்த மட்டிலும், பிரிவினையைப் பொறுத்தமட்டிலும் நாங்கள் என்ன செய்ய வேண்டும்?. பாட்டாளிகளும் முதலாளிகளும் இல்லாத தேசங்கள் அல்லது அப்படி இருந்தாலும் அரும்பு வடிவத்திலிருக்கும் தேசங்களுக்கு என்ன நடக்கும்? உதாரணத்திற்கு ரசிய எல்லைக்குள்ளிருக்கும் துங்கூ (Tunguses), கல்மூக் (Kalmucks), அல்லது பூரியாட் (Buryats) தேசிய இனங்களை நோக்குவோம். பெரிய நாகரீகமடைந்த நாட்டிலிருந்து இவைகள் பிரிவினை கோரினால் என்ன செய்ய வேண்டும்? இதற்கும் மேலாக இவைகள் சோசலிசத்தை அடைந்த நாடுகளிலிருந்து பிரிவினை கேட்டால் என்ன செய்ய வேண்டும்?. இப்பேற்பட்ட நாடுகளுக்கு பிரிவினை வழங்கினால் நாகரீகத்தின் அழிவில் கட்டாயம் காட்டுமிராண்டித் தனம் வளருமா?.



படிப்பகம்

www.padippakam.com



உலகத்திலுள்ள வளர்ச்சியடைந்த நாடுகளில் சோசலிசம் ஏற்பட்டால், பின்தங்கிய அரைக் காட்டுமிராண்டி நாடுகள் பொதுவாக அவைகளோடு ஐக்கியப்பட்டு இருக்க விரும்பும் என்பதே எங்கள் அபிப்பிராயம். ஏகாதிபத்திய முதலாளிகள் இந்தத் தேசங்களை காலனிகளாக்கிப் பலாத்காரமாக இணைத்தவர்கள், காலனிகள் பிரிந்துபோய்விடுமென்று பயப்படுவதில் நியாயமுண்டு. பாட்டாளி வர்க்கம் ஏன் பயப்படுவான். பாட்டாளி வர்க்கத்திற்கு அவைகளைச் சூறையாடவேண்டுமென்ற ஆசை இல்லை. பாட்டாளி வர்க்கம் அவர்களுக்கு வேண்டிய பண்டங்களையும் மூலப் பொருட்களையும் பரிவர்த்தனை செய்து அவர்களின் உள்நாட்டு விசயங்களை அவர்கள் விரும்பியபடியே நிர்வகிக்க விட்டுவிடுவதால் அவர்களை இணங்கிப்போக வைக்க முடியும். ஆகவே கம்யூனிஸ்ட்கட்சி நானாவித தேசியஒடுக்குமுறைகளுக்கும் முற்றுப்புள்ளி வைப்பதோடு தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமைக்காக உரக்கக் குரல் கொடுக்கும்.

எல்லா நாட்டிலுமுள்ள பாட்டாளிகள் இந்த உரிமையைப் பிரயோசனமாக்கி முதலில் நானாவித தேசியவாதத்தையும் நிர்மூலமாக்கி, பின் தாங்களாகவே விரும்பி ஏற்படுத்தும் சமஸ்டிக் கூட்டுறவை ஏற்படுத்த வேண்டும்.

இந்த சமஸ்டிக் கூட்டுறவு உலகம் பரந்த பொருளாதார அமைப்புமுறையை ஏற்படுத்த லாயக்கற்றதாகக் காணுமிடத்து, பெரும்பான்மையானவர்கள் அனுபவத்தால் இதன் பற்றாக்குறையை கண்டுகொண்டு நம்பிக்கொண்ட பொழுது, ஓர் உலக சோசலிசக் குடியரசை ஏற்படுத்துவதற்கான காலம் முதிர்ந்துவிடும்.

முதலாளித்துவம் தனது இளமைப் பராயத்தில் அதிகம் சிக்கல் நிறைந்த இந்தத் தேசிய இனப் பிரச்சினையை எவ்வாறு தீர்த்ததென்று ஆராய்ந்து பார்த்தோமானால், அது அதனது கிழமைப் பராயத்து முறைகளிலும் பூரணமாக வேறுபட்டதாகும். முதலாளித்துவம் ஓர் ஒடுக்கப்பட்ட வர்க்கமாக இருந்த முன்னொரு காலந்தனில், மன்னர்களாலும் ஜார்களாலும் தலைமை தாங்கப்பட்ட பிரபுக்கள் ஆட்சியதிகாரத்தின் அழுங்குப் பிடியை



படிப்பகம்

வைத்திருந்த நாட்களில், மன்னர்களும் ஜார்களும் தேசங்களை முழுமக்களும் உள்ளடங்கலாக தங்களது சொந்தப் புத்திரிகளுக்கு சீதனமாக வழங்கிய காலங்களில், முதலாளித்துவம் தேசிய சுதந்திரம் பற்றி தேனினுமினிய தெவிட்டாத கீதங்களைப் பாடியது மாத்திரமல்ல, அந்தச் சுதந்திரத்தைக் கனவிலும் நனவிலும் அடைய நின்றும் இருந்தும் நடந்தும் கிடந்தும் பிரயத்தனப்பட்டது. இதைக் குறைந்தபட்சம் தங்களது சொந்த நாட்டைப் பொறுத்தவரையாவது செய்தது. உதாரணத்திற்கு, இத்தாலி ஆஸ்திரிய முடியாட்சியால் ஆளப்பட்ட காலங்களில், இத்தாலிய முதலாளித்துவம் தேசிய விடுதலை இயக்கத்திற்குத் தலைமை தாங்கி, அன்னிய அடிமைத் தழையறுத்து இத்தாலி பிரியவும், தமக்கென ஒரு தனி ஐக்கிய அரசை அமைக்கவும் பகீரதப் பிரயத்தனம் செய்தது. ஜேர்மனி சிற்றரசுகளாகச் சிதறிக்கிடந்து நெப்போலியனது கால்களின்கீழ் நசிபட்ட நாட்களில் ஜேர்மன் முதலாளித்துவம் ஒரு ஜேர்மன் பேரரசை அமைக்கப் பிரயத்தனப் பட்டதோடு, பிரெஞ்சு அடிமைத்தனத்திலிருந்து தங்களது நாடு பிரிந்து போகவும் போராடியது. ஐரோப்பிய முடியாட்சியெல்லாம் ஒன்றுகூடி பதினாறாம் லூயி மன்னனைத் தோற்கடித்தபோது, புரட்சிகரமான பிரெஞ்சு முதலாளித்துவம் மாசே என்ற தேசபக்த கீதத்தைச் சிருஸ்டித்து, தங்களது நாட்டைப் பாதுகாக்கப் போராடியது. ஒரு சொல்லில் சொல்வதென்றால் ஒடுக்கப்பட்ட நாட்டு முதலாளித்துவம் எப்பொழுதும் பிரிவினைக்காகப் போராடி யிருக்கிறது. ஒரு கொள்ளை தேசிய விடுதலை இலக்கியங்களைப் படைத்துள்ளது. ஒருகொள்ளை தீரர்களையும் வீரர்களையும் தியாகிகளையும் மகான்களையும் உருவாக்கியது. ஓவியர்களையும் பாடகர்களையும் கவிஞர்களையும் தத்துவஞானிகளையும் படை த்தது. முன்னொரு காலந்தன்னில் முதலாளித்துவம் முடக்கப்பட்டு ஒடுக்கப்பட்ட வர்க்கமாக வருந்தி வாழ்ந்த வரலாறு இது.

ஏன் ஒடுக்கப்பட்ட தேசத்து முதலாளித்துவங்கள் தேசிய விடுதலைக்காகப் பிரயத்தனப்பட்டன?. நாங்கள் முதலாளித்துவக் கவிஞர்களுக்கு காதுகொடுத்தோமென்றால், முதலாளித்துவக் கவின் கலைகளை ரசித்து ருசித்தோமென்றால் தெள்ளென விளங்கும், தேசிய ஒடுக்குமுறையை ஒவ்வொரு நாட்டு முதலாளித்துவமும் ஒட்ட வெறுத்திருக்கிறது. தேசிய சுயநிர்ணய

www.padippakam.com



உரிமைக்காக ஒரு சின்னத் தேசமாகவோ தேசிய இனமாகவோ இருந்தாலும்கூட கனவுகண்டுள்ளது. உண்மையிலேயே முதலாளித்துவம் அன்னிய அடிமைத்தளையிலிருந்து விடுதலை காணப் போராடியிருக்கிறது. போராடி. தங்களுக்கென ஒரு முதலாளித்துவத் தனியரசை அமைக்கப் பிரயத்தனப்பட்டுள்ளது. ஏனெனில் சொந்த நாட்டிலுள்ள மக்களைச் சுரண்டும் அதிகாரத்தை மற்றைய போட்டிச் சரண்டற்காரர்களிலிருந்து தடுத்து தாமே தனித்து அபகரிப்பதற்காக அனுபவிப்பதற்காக, நகரங்களிலும் கிராமப்புறங்களிலுமுள்ள உபரிஉழைப்பின் உபரிப் பெறுமானத்தினை சுரண்டும் ஒட்டுமொத்த உரிமைக்காக இந்தப் போராட்டத்தை நடத்தியுள்ளது.

முதலாளித்துவ நாடுகளின் வரலாறு எல்லாமே இந்த அசைக்க முடியாத உண்மைக்கான சாட்சியங்களாகும். முதலாளித்துவம் தொழிலாள வர்க்கத்தோடு கூடவே ஒடுக்கப்பட்ட வர்க்கமாக இருந்த நாட்களில் பொதுவாகவே விடுதலைக் கூக்குரலை எழுப்பியது. தேசங்களை அடிமையாக்குவதைத் தவறென்று கண்டித்தது. முதலாளித்துவ வர்க்கம் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றியதுதான் தாமதம், ஜெயங்கொண்ட வெளிநாட்டவர்களைத் துரத்தியதுதான் தாமதம், பிரபுத்துவமும் முதலாளித்துவமும் பலவீனமான தேசங்களை அடக்கியாள்வதால் லாபம் வரும் என்று கண்டுகொண்டதால் முன்பு செய்தவர்களிலும் உக்கிரமாக அடக்கியாண்டது. புரட்சிகரமான பிரெஞ்சு முதலாளித்துவத்தை பிரதிநிதித்துவப்படுத்திய டான்ரன் (Danton) றொபேஸ்பீயர் (Robospierre) போன்றவர்களும் மற்றைய செல்வாக்குப்பெற்ற புள்ளிகளும் புரட்சியின் முதலாவது சகாப்தத்தில், உலகத்திலுள்ள எல்லா மக்களின் சார்பாக, எல்லாவிதமான கொடுங்கோன்மையையும் நொருக்கியெறியுங்கள் என்று கூக்குரல் கொடுத்தார்கள். றோகெட் டீ இஸ்சில் (Rouget de Isle) எழுதிய மாசே (Marseillaise) என்ற விடுதலைக் கீதத்தை♦ புரட்சிகர ராணுவத்தின் இசையோடு பாடினார்கள். இது உலகத்திலுள்ள எல்லா ஒடுக்கப்பட்ட மக்களின் இதயங்களையும் கவ்வியது.

*♦குறிப்பு : இலங்கைச் சமசமாஜக் கட்சி சிங்கள மொழியிற் பாடித்திரிந்த மயிர்க்கூச்செறிய வைக்கும் "சாதுக்க பிளனவோ...." என்ற சர்வதேசிய விடுதலைக் கீதம் இதன் வழித்தோன்றலாகும்.*



படிப்பகம்

இதே பிரெஞ்சு முதலாளித்துவம் நெப்போலியனினது ஆட்சியின் கீழ் புரட்சியின் இரண்டாவது கட்டத்தினுள் புகுந்தபோது, ஸ்பானியா, இத்தாலி, ஜேர்மனி, ஆஸ்திரிய மக்களை முந்திச் சொன்ன அதே மாசே விடுதலைக் கீதத்தினுள் மூச்சுத்திணற அமுக்கி அடக்கியாண்டதோடு, தொடர்ந்த நெப்போலியனினது யுத்த நாட்கள் முழுவதும் இந்த நாடுகளைச் சூறையாடியது. ஜேர்மன் முதலாளித்துவம் ஒடுக்கப்பட்ட பொழுது வில்லியம்ரெல் எழுதிய சில்லர் போன்றவர்கள் பிறநாட்டாரின் கொடுங்கோன்மைக்கு எதிராக போராடும்படி மக்களுக்கு எழுதினார்கள். இதே ஜேர்மன் முதலாளித்துவம் பிஸ்மாக்கினதும் போல்கேயினதும் தலைமையின் கீழே பிரெஞ்சு மாகாணமான அஸ்சேஸ்லோறன்ஸைப் பறித்து ஜேர்மனியோடு இணைத்தார்கள். டென்மார்க்கிடமிருந்து சிலேஸ்விக்கைப் பிடுங்கினார்கள், போலந்து நாட்டின் போசனைக் கொடுமைப் படுத்தினார்கள். இன்னும் பலப்பல. இத்தாலி ஆஸ்திரியப் பிரபுக்களின், அடிமைத்தனத்திலிருந்து பிரிந்ததுதான் தாமதம் ஜெயங்கொண்ட றிப்போலியின் பேடனையும் அட்றியாக் கரையிலுள்ள அல்பானியாவையும் டாஸ்மாற்றையினையும் துருக்கியின் அனத்தோலியாவையும் சுட்டுத்தள்ளுவதற்கு நறுக்கான தயார்நிலையில் இருந்தார்கள்.

ஏன் இப்படி நடந்தது? ஏன் இப்பொழுதும் நடக்க இருக்கின்றது? முதலாளித்துவம் வழக்கமாகத் தேசியவிடுதலை பற்றி அறைகூவலிடுவதும் நடைமுறை யதார்தத்தில் ஏன் அந்த விடுதலையை சாதிக்க முடியாமலும் இருக்கிறது?

இதற்குரிய விளக்கமென்னவென்றால் எல்லா முதலாளித்துவமும் அடிமைத்தழையிலிருந்து தன்னை விடுவித்ததுதான் தாமதம் தவிர்க்கமுடியாதபடிக்கு தங்களது ஆட்சியதிகாரத்தை விஸ்தரிக்க முயற்சிக்கிறது. எந்த முதலாளித்துவ நாட்டை உதாரணத்துக்கு எடுத்தாலும்சரி அவர்கள் தங்களது சொந்த நாட்டுப் பாட்டாளிகளை சுரண்டுவதோடு திருப்திப்படாமையைக் காணலாம். முதலாளித்துவத்திற்கு உலகத்தின் மூலைமுடக்கு எல்லாவற்றிலுமிருந்து மூலப்பொருட்கள் தேவை. அதற்காக அவர்கள் காலனிகளைப் பிடிக்கிறார்கள். மற்றைய நாட்டிலுள்ள சுதேசிகளை அடக்கி ஒடுக்கிய பின் தங்குதடையின்றித் தங்களது தொழிற்சாலைக்கு வேண்டிய மூலப் பொருட்களை சூறையாடிக் கொண்டு

யார் தேசியத்தின் விருப்பத்தை வெளிப்படுத்துவது

வருகிறார்கள். அவர்களது பண்டங்களை விற்பதற்கு சந்தைகள் தேவைப்பட்டபோது அந்தச் சந்தைகளை அபகரிக்க முனைகிறார்கள். இந்தச் சந்தைகள் சுதேச நாட்டு பொதுவான மக்களையும் இன்னும் முதிர்ச்சியடையாத முதலாளித்துவத்தையும் எப்படிப் பாதித்தாலும் அதை அவர்கள் கருத்திற் கொள்வதில்லை. அவர்களின் உபரி மூலதனத்தை ஏற்றுமதி செய்து தூரநாட்டுத் தொழிலாளர்களிலிருந்து லாபத்தைக் கறந்தெடுக்க நாடுகள் தேவைப்பட்டபோது மற்றைய நாடுகளை அடிமையாக்கி தங்கள் இஸ்டம்போல் அந்த நாடுகளிலிருந்து அபகரிக்கிறார்கள். காலனிகளை ஜெயிக்கும்போதும், பின்தங்கிய நாடுகளைப் பொருளாதார ரீதியில் அடிமையாக்கும்போதும், இன்னுமொரு முதலாளித்துவம் போட்டியாளனாகக் குறுக்கிட்டால், இந்தச் சச்சரவு யுத்தத்தால் தீர்க்கப்படுகிறது. இந்த யுத்தம் அண்மையில் ஐரோப்பாவில் நடந்து முடிந்த உலக யுத்தம் போன்ற உலக யுத்த வடிவத்தை எடுக்கிறது. இந்த மகாயுத்தம் காலனிகளையும் பின்தங்கிய நாடுகளையும் அடிமையாக்குவதை முடிவுக்குக் கொணரவில்லை. அப்படி ஏதாவது மாற்றங்கள் காலனிகளில் ஏற்பட்டிருந்தால் அது வெறுமனே பழைய காலனித்துவ எஜமானுக்காகப் புதிய எஜமான் மாறியதாகத்தான் இருக்கமுடியும். அதற்கும்மேலாக உலக மகாயுத்தத்தின் பிரதி விளைவாக இவ்வளவு காலமும் சுதந்திர நாடுகளாகத் திகழ்ந்த ஜேர்மனி, ஆஸ்திரியா, பல்கேரியா போன்ற நாடுகள் மீண்டும் அடிமைநாடுகளாக மாறிவிட்டன. இதேமாதிரித்தான் முதலாளித்துவ நாடுகளின் அபிவிருத்தி வந்து போய்க் கொண்டிருக்கும். அடிமையாக்கப்பட்ட நாடுகளை குறைப்பதற்குப் பதிலாக முதலாளித்துவம் மேலும்மேலும் புதிய நாடுகளை அடிமை யாக்குவதை கூட்டிக்கொண்டே போகும். முதலாளித்துவத்தின் ஆதிக்கம் சர்வவியாபகமான தேசிய ஒடுக்குமுறை என்ற உச்சக் கட்டத்தை அடைந்துள்ளது. மகாயுத்தத்தில் வெற்றிகொண்ட முதலாளித்துவ நாடுகளின் கூட்டத்தால் முழு உலகமும் மேலும் அடிமையாக்கப்பட்டுள்ளது.

www.padippakam.com

ANTI-SEMITISM AND THE PROLETARIAT

# யூத விரோதமும் பாட்டாளி வர்க்கமும்

தேசிய ஒடுக்கு முறையின் ஆக உயர்ந்த வடிவங்களில் யூதவிரோதமும் ஒன்றாகும். இது அராபிய வம்சாவழியின் அடுத்த கிளையான செமிற்றிக் வம்சாவழி யூத மக்கள் மேல் இன வெறுப்பைக் காட்டுவதாகும். ஜார் எதேச்சாதிகாரம் தொழிலாளர்களதும் விவசாயிகளதும் புரட்சியைத் திசை திருப்பலாம் என்ற நப்பாசையோடு யூதர்களை வேட்டையாடுங்கள் என்று ஏவிவிட்டது. விரக்தியின் விளிம்பிலுள்ள ஒடுக்கப்பட்ட தொழிலாளர்களதும் விவசாயிகளதும் ஆத்திரமானது முதலாளிகள் மேலும் நிலச்சுவாந்தர் மேலும் செல்லாமல், அதை யூதத் தேசிய இனத்தின் மேல் செலுத்துவதற்காக, உங்களது செல்வங்களை யூதர்கள் அபகரிப்பதனால் தான் நீங்கள் ஏழ்மையில் தவழ்கிறீர்கள் என்று 'கறுப்பு நூற்றுவர்' (Black Hundred) இயக்க அங்கத்தவர்கள் கூறுகிறார்கள். மற்றைய தேசிய இனங்களில் இருப்பதைப் போலவே யூதர்களிலும் வித்தியாசம் வித்தியாசமான வர்க்கத் தட்டுக்கள் இருக்கின்றன. யூத இனத்தின் முதலாளித்துவத் தட்டு மாத்திரம்தான் மக்களைச் சுரண்டுகிறது. இந்த முதலாளித்துவத் தட்டு மற்றைய தேசிய இனங்களிலுள்ள முதலாளித்துவத் தட்டோடு சேர்ந்து பொதுவாகவே சூறையாடுகிறது. ஜார் மன்னனது ரசியாவுக்கு அடுத்துள்ள இடங்களில் வாழும் யூதத் தொழிலாளர்களும் கைவினையாளர்களும் கொடிய பஞ்சத்திலும் வறுமையிலும் இழிநிலையிலும் வாழ்கிறார்கள். அவர்களது வாழ்க்கை நிலைமையானது சாதாரண மற்றைய ரசிய இடங்களில் வதியும் சாதாரண தொழிலாளர்களது வாழ்க்கை நிலைமைகளிலும் பார்க்க மிக மோசமானது.

ரசிய முதலாளிகள் யூதர்களை வேட்டையாடுங்கள் என்று சொல்லும் போது சுரண்டப்பட்ட பாட்டாளிகளின் ஆத்திரத்தை திசைதிருப்பும் நப்பாசையில் மாத்திரமல்ல வர்த்தகத்திலும் தொழிற்துறையிலும் யூத முதலாளிகளது போட்டியிலிருந்து தாம் தப்புவதற்காகவுமாகும்.



படிப்பகம்

கடைசி சில வருடங்களில் ஏறத்தாழ எல்லா நாடுகளிலுமுள்ள முதலாளித்துவத்தினுள்ளே யூதவிரோத உணர்வானது மேலும் வளர்ந்துள்ளது. ரசியாவைத் தவிர்ந்த மற்றைய நாட்டு முதலாளிகள் நிக்கொலஸ் இரண்டின் உதாரணத்தைப் பின்பற்றி யூதவிரோத உணர்வைக் கொழுந்து விட்டெரியச் செய்வது போட்டிச் சுரண்டலாளர்களை இல்லாமல் செய்வதற்கு மாத்திரமல்ல புரட்சிகர இயக்கத்தை நிர்மூலமாக்குவதற்காகவுமாகும். நேற்றுவரை ஜேர்மனியிலிருந்தும் பெரிய பிரித்தானியாவிலிருந்தும் அமெரிக்காவிலிருந்தும் யூதவிரோதம் பற்றி மிக அற்பசொற்பமே கேள்விப்பட்டோம். அண்மைக் காலங்களில் பிரித்தானிய ராஜாங்க அமைச்சர் கூட யூதவிரோதக் கூப்பாடு போடுவதைக் கேட்கக் கூடியதாக இருக்கின்றது. இது மேற்கிலே முதலாளித்துவ அமைப்புமுறை பொறிந்து கொட்டுப்படும் விளிம்பில் நிற்பதைக் காட்டும் நிச்சயமான சமிக்ஞையாகும். முதலாளித்துவம் றொட்சைல்டையும் (Rothschild), மெண்டெல்ஸ்சைனையும் (Mendelssoshns) தொழிலாளி வர்க்கத்தினுள் தோய்ப்பதன் மூலம் தொழிலாளி வர்க்கப் புரட்சியைத் தவிர்க்க பிரயத்தனப்படுகிறது. ரசியாவில் மார்ச் புரட்சியை யூத விரோதத்தின் மூலம் சிறிதுகாலம் நிறுத்திவைத்தார்கள். புரட்சிகர இயக்கமானது மீண்டும் வட்டியும் முதலோடும் வலிமை பெற்று முதலாளித்துவத்திற்கும் தொழிலாள வர்க்கத்திற்கும் இடையிலான உள்நாட்டு யுத்த மட்டத்திற்கு அகோரமாக வளரவே, முதலாளித்துவம் யூதர்களை தாக்குவதை மேலும் மேலும் உக்கிரமாக்கி ஆட்சியைக் கைப்பற்ற முயன்றும் முடியாமல் போனார்கள்.

இது எல்லாவற்றையும் கூட்டிப் பார்க்கையில் யூத விரோதமென்பது சோசலிசத்தைத் தடைசெய்யும் எதிர்ப்புக் காரணியென்பது நிரூபணமாகும். தொழிலாளராவது விவசாயிகளாவது எதிரிகளால் ஏமாற்றப்பட்டுப் பிழையாக வழிதவறிப் போவார்களானால் பேரழிவுதான் ஏற்படும்!

www.padippakam.com

*பயன்படுத்திய இலக்கியங்கள் :-*


*தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை -லெனின்.*
*மாக்சியமும் தேசிய இனப்பிரச்சினையும் -ஸ்டாலின்.*
*சர்வதேசியமும் தேசிய இனப்பிரச்சினையும் -சாலெப்ஸ்கி(Zalefsky)*
*யூதர்களைப் பற்றிய உண்மையும் பொய்யும் -பெற்றோப்(Petroff)*
*யூதர்கள் -சுவுட்ஸ்கி*
*யூத விரோதமும் பாட்டாளி வர்க்கமும் -பெபெல்*
*யூத விரோதத்தில் கடைசி வார்த்தை- ஸ்டெக்லோப் (Steckloff)*

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

''வரலாற்றிலே முந்தி அபிவிருத்தி யடைந்த ஏகாதிபத்திய நாடுகளின் அதீத சுரண்டல் இருக்கும்போது, மூன்றாம் உலக மக்களின் உயிர் வாழ்வுக்கு வேண்டிய ஆகக் குறைந்த பொருளாதாரத் தேவைகள் கூட பூர்த்தி செய்ய முடியாத சூழ்நிலை தொடர்ந்து நிலவும்போது, புதிய கறுப்புத்தோல் ஆட்சியாளர்களால் மக்களைத் திருப்தியடையச் செய்து ஆட்சிசெய்ய முடியாத நிலை சவர்க்காரக் குமிழி உடையும் வேகத்தில் வரவே, மக்களை மீண்டும் மீண்டும் ஆட்சிசெய்ய விடாமுயற்சி செய்யும்பொழுது தோன்றுவது தான் எதேச்சாதிகார அரசாங்கம். இந்த உண்மையை தென்னாப்பிரிக்காவும் பாலஸ்தீனமும் மீண்டுமொருமுறை வெளிப்படுத்திக் காட்டும். எங்கு கற்பனைக் கோட்டைகள் தகருகிறதோ, அங்கு நிலவும் மெய்யான வாழ்க்கையில் நேர் உறுதியான விஞ்ஞானம் தொடங்குகிறது. இது தான் மாக்சியம் சொல்லித்தந்த பாடம்.''

—வ அழகலிங்கம்

படிப்பகம்